ஜகன் மோகினி

விக்ருதி புரட்டாசி 1—10—'50. அணா நான்கு.

இவ்விதழில்

- ஒரு முழு நவீனம் — "மனச்சாட்சி" வை. மு. கோ. 95-வது நாவல்
- வழக்கம்போல் இதர முக்கிய அம்சங்களும்

13 / 2-51.

இவ்விதழில் ஒரு முழு நாவல்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
2 APR 1951
MADRAS

னச்சாட்சி

மு.கோ. 95.வது நாவல்

ஆசிரியை: வை.மு.கோதைநாயகி அம்மாள்

3L
m211,N12m
N50.27.10

22-9-50 முதல்

சென்னை பிராட்வே &
ராஜகுமாரி (தி. நகர்)
மற்றும் தமிழ் நாடெங்கும்
நடைபெறுகிறது.

அக்ரமத்தின்
அவதாரமான
அரசகுரு
வேஷத்திலே
'மந்திரி குமாரி'யில்
அமோக
வெற்றி கண்ட ....

எம்.என்.நம்பியார்
திகம்பர சாமியாராக

தீனர்களின் பந்துவாக -
துப்பறியும் மேதையாகத்
தோன்றி உங்கள் உள்ளத்தைக்
கொள்ளை கொள்ளுவார்

மாடர்ன் தியேட்டர்ஸ்
திகம்பர சாமியார்

லட்சக்கணக்கான மக்களின் லட்சிய
எழுத்தாளர் வடுவூராரின் மகோன்னத
கற்பனைச் சித்திரம்......

டைரக்ஷன் **டி. ஆர். சுந்தரம்**

ஜகன்மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு
— திருவள்ளுவர்.

ஜகன்மோகினி யென்னுஞ்
சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோகினி !
மனத்தைச் சார்ந்து.
— வீரராகவ கவி

Vol. 27 | விக்ருதி ஹூ | October.
No. 10. | புரட்டாசி மீ | 1950.

மஹாத்மாஜிக்கு மற்றுமோர் வெற்றி!

சத்திய நெறிக்கும், ஆத்மச்ரேயஸுக்கும், அரசியல் முன்னேற்றத்திற்கும் அரும்பாடுபட்ட அமரத்யாகி மஹாத்மாஜிக்கு மற்றுமோர் மஹத்தான வெற்றி! புனிதனின் கொள்கைகளுக்குப் புத்துயிர் அளித்தது பஞ்சவடி காங்க்ரஸ்.

அத்ருப்தி வட்டாரங்களுக்கும், அஸூயைக் கும்பல் ...ளுக்கும், பிளவுப் பெருச்சாளிகளுக்கும், சுயநலச் சீமான் ...ளுக்கும் மாபெரும் தோல்வி; ஏமாற்றத்தின் உச்ச நிலை!

நம் அரசியலின் அடிப்படை—மதக்கலப்பற்ற ப்ரஜா அந்தஸ்தும், வெளிநாட்டுறவில் தார்மீக நடுநிலையும்--மஹாத்மாஜியின் கொள்கைப்படியே நம் நேரு சர்க்காரால் பரிபாலிக்கப் ...ட்டுவருவதைப் பரிபூர்ணமாக ஆதரித்துப் பல தீர்மானங் ...ளை நிறைவேற்றி, சர்க்காரின் கைகளைப் பலப்படுத்தியதோடு, ...தமர் நேருவுக்கும் அவரது தெய்வீக குரு மஹாத்மாவுக் ... மஹத்தான வெற்றியை அளித்தது பஞ்சவடி மகாநாடு. ...நாஸிக்கில் நாராசம்போல் கூச்சல்கள் கிளம்புமென்றோ, ...ஸ் மேலிடத்தில் பிளவுகள் ஏற்படுமென்றோ, மதக் ...கையில் மாறுபாடு தோன்றுமென்றோ...பகற்கனவுகள் ...வர்களுக்கெல்லாம் பாபு புருஷோத்தம தாஸ் தலைமை ...ிய பாடம் கற்பிக்கப்பட்டது. சர்க்காரின் கட்டுப்பாடு ...ங்களையும், வெளிநாட்டுக் கொள்கைகளையும் ஆதரிப்ப... அவச்யத்தையும், காங்க்ரஸ் மஹா சபையைச் சீர் ...த்தவேண்டியதின் முக்கியத்தையும் அறிவுறுத்தி, காந்தீ...த்திற்கு மற்றுமோர் மாலை சூடினர்.

வகுப்புவாதிகளின் "ஹிந்து ராஜ்ய" மனக்கோட்டை...ளைத் தாண்டன் தகர்த்தெறிந்தார். "பழிக்குப்பழி" என்ற ...னப்பான்மை கொண்டவர்களையும் தலைகுனியச் செய்தார். ...சமரஸத்தால் தீர்க்கமுடியாததை ஆயுத பலத்தால் தீர்க்க ...வண்டும்" என்று முணுமுணுத்தவர்களை காந்தீய ஆத்மீக ...நெறியால் வாய்மூடச் செய்தார். வகுப்பு ஒற்றுமையையும் ...ரஸ்பர நல்லெண்ணத்தையும் வளர்ப்பதில் நாம் சர்க்காருக்குக் ...கைகொடுக்க வேணுமென்பதைத் தெளிவுபடுத்தினார். இப்படியாக படிப்படியாக காந்தீயத்திற்கு அஞ்சலி செய்தார். வாழ்க மஹாத்மாவின் ஆத்மீகப் பெருவழி! — வை. மு. ஸ்ரீ.

ப்ராயச்சித்தம்

உத்தமசகோதரர்களாய் தமையனும் தம்பியும் ஒத்து வாழ்ந்தார்கள். நினைப்பில்கூட ஒரேமாதிரி நினைப்பார்கள். 'காதல் இருவர் கருத்து ஒருமித்து ஆதரவு பட்டதே இன்பம்' என்று ஔவைப்பாட்டி சொன்னாளே, அந்தமாதிரி அமைந்திருந்தன இவர்களுடைய சகோதரக்காதலும் சகோதர இன்பமும்.

இருவரும் ஒன்றுபட்டு வாழ்ந்தார்கள். போருக்கும் போனார்கள். பிறரோடுதான் என்று சொல்லவேண்டியதில்லை. தங்கள் தேச விரோதிகளுடன் போரிட்டு வாகை சூடி ஊருக்குத் திரும்பியதும், இவர்கள் 'வீர தர்மத்திற்கும் சகோதர தர்மத்திற்கும் ஒருங்கே இலக்கியமானவர்கள்' என்று ஜனங்கள் கொண்டாடினார்கள்.

பிறகு தந்தை இறந்துபோனார். சொத்துப் பிரிவினை செய்வது எளிதானகாரியமாக இல்லை. அதனால் சச்சரவு ஏற்படக் கூடாதென்று சொத்தை ஏலத்தில் விட்டு ஒவ்வொருவரும் தமக்குத் தேவையானதை வாங்கிக்கொள்ளவும், மற்ற வருமானத்தைப் பங்கிட்டுக்கொள்ளவும் இசைந்தார்கள்.

ஆனால், தந்தையின் ஒரு பெரிய தங்கக் கடிகாரத்தை ஏலத்தில் விடும்போது தகராறு ஏற்பட்டது. அந்தப் பிரதேசத்திலே அவ்வளவு அழகான கடிகாரம் வேறொன்றும் இல்லை. செல்வர்கள் பலர் அதை வாங்க விரும்பியபோதிலும், சகோதரர்கள் வாங்கிக்கொள்ள எத்தனித்ததும் விட்டுக்கொடுத்து விலகி நின்றார்கள்.

தம்பியும் விட்டுக்கொடுக்கவேண்டுமென்று தமையனைபார்ட் விரும்பினான். 'அண்ணாதான் தம்பிக்கு விட்டுக்கொடுக்கலாகாதோ?' என்று எண்ணினான் தம்பி ஆண்டர்ஸ். இருவரும் மேன்மேலும் ஏலம் கேட்டுக்கொண்டே போனார்கள். அன்புப் பார்வை துன்பப்பார்வையாக மாறி வந்தது. கடிகாரத்தின் விலை இருபது டாலராக ஏறியதும், 'தம்பி அவ்வளவு நல்லவன் இல்லை' என்று பட்டது அண்ணனுக்கு. முப்பது டாலருக்கும் அதற்கு மேலாகவும் தொகையை ஏற்றிவிட்டான் அண்ணன். தம்பி பின் வாங்கவில்லை. 'ஐம்பது' என்றான் அண்ணன். அதற்கும் மேலே போனான் தம்பி. 'நூறுடாலர்' என்று அண்ண... சொன்ன பிறகே தம்பி விட்டுக்கொடுத்தான்.

அண்ணனுக்குத் தம்பிமேல் பரிவு ஏற்படாமல் இல்... கடிகாரத்தை மறந்து தம்பியை நினைத்துப்பார்த்தான். ஆனா... தமையனுள்ளத்திலே நிகழ்ந்ததை அறிந்துகொள்ளாத தம்... அந்தக் கூட்டத்திலே, 'மிஸ்டர் பார்ட், உம்மைத் தெரிந்... கொண்டேன்; நன்று, நன்று!' என்று முழக்கினான். வந்... கோபத்தை அடக்கிக்கொண்டே தமையன் போய்விட்டான்.

சொத்தைப் பாகம் செய்துகொண்ட பிறகு தம்பி கல்யாண... செய்துகொண்டான். தமையனை அழைக்கவில்லை. தமையனு... போகவில்லை.

கல்யாணமான பிறகு ஒருநாள் ஆண்டர்ஸ், தன் கறவைப்ப... கட்டியிருந்த கொட்டிலிலேயே செத்துக்கிடந்ததைக் கண்டான். எப்படிச் செத்ததோ, யார் கண்டார்?

1816

வேறு துரதிர்ஷ்டங்களும் அடுக்கடுக்காகத் தோன்றின. ஓர் இரவில் தம்பியின் பெரிய வைக்கோற்போர் எரிந்து தணிந்தது. அந்தத் தீ வீட்டிலும் பற்றிக்கொண்டு விலையுயர்ந்த பொருள்களையும் எரித்துவிட்டது. ஒரே இரவில் ஆண்டர்ஸ் ஏழையாகி விட்டான். இரவெல்லாம் அழுதுகொண்டிருந்தான்.

மறுநாள் மாலை பார்ட் தம்பி வீட்டுக்கு வந்தான். 'தம்பி, உனக்கு உதவி செய்யவந்திருக்கிறேன், நீ கஷ்டப்படுகிருயே' என்ருன். 'வீடெல்லாம் எரிந்து விட்டதே!' என்ருன்.

'அதற்கும் மேலாக என் வயிறு எரிகிறதே! உன்னைப் 'பார்க்கப் பார்க்க அதிகமாய் எரிகிறதே!' என்ருன் தம்பி.

'தம்பி, நீ ஏதோ நினைத்து—' என்று இழுத்தான் அண்ணன்.

'மரியாதையாகப் போய்விடு மிஸ்டர் பார்ட்! கடவுள் தான் உன்னைக் காப்பாற்றவேணும்' என்ருன் தம்பி.

பாலையும் சோலையும்

அண்ணன் ஓர் அடி பின்வாங்கி நின்று நடுங்கிய குரலில் 'கடிகாரம் உனக்கு வேணுமாளுல் இதோ...' என்று இழுத்தான்.

'போ, போ மிஸ்டர், பார்ட்!' என்று அலறினன் தம்பி. தமையனும் போய்விட்டான்.

தமையனின் இதயத்திலே நாளடைவில் ஒரு மாறுதல் ஏற்படலாயிற்று. தம்பியின் நிலைமை தமையன் இதயத்தை உருக்கியது; ஆனுல், செருக்கின் காரணமாக, உருகிய தங்கம் இறுகுவது போல் மீண்டும் இறுகியது இதயம்.

அடிக்கடி தம்பியின் வீட்டைநோக்கிப் புறப்படுவான். அந்த வீடு கண்ணுக்குத் தெரியும் தூரம் வரையில் போவான். யாராவது அங்கேயிருந்து வெளியே வருவதைப் பார்த்தாலும், அந்த வீட்டுக்குள்ளே போவதைப் பார்த்தாலும், தம்பி வீட்டுக்கு வெளியே விறகு தறித்துக்கொண்டிருப்பதைப் பார்த்தாலும், அப்பால் போகாமல் திரும்பிவிடுவான் அண்ணன். அப்படி ஏதாவதொரு இடையூறு குறுக்கிடத்தான் செய்தது.

'தம்பி ஒரு காலத்தில் எவ்வளவு சாதுவாக, அன்புள்ளவனுக இருந்தான்! இளம்பிராயத்தில் நல்ல பையனுக இருந்தானே!' என்ற நினைவுகள் அண்ணனுள்ளத்தில் பாய்ந்தோடிப் பாலைவனத்தைப் பசுஞ்சோலையாக்க முயன்றன.

'ஆண்டவனே! இனி அவன் போராடினுலும் நான் சீராடப் போவேன்!' என்று ஒரு சமயம் பிரார்த்தனை செய்துகொண்டான் தேவாலயத்திலே. அப்போது அந்த ஆலயத்தின் ஒரு புறத்திலே இளைத்துப்போய்க் கந்தைகட்டிச் சோர்ந்துபோன முகத் தோற்றத்துடன் தம்பி காணப்பட்டான். தமையன் அணுகிச் செல்லமுயன்றும் தம்பி தலைநிமிர்ந்தும் பார்த்தானில்லை.

'வீட்டிலே போய்ப் பார்த்துக்கொள்வதுதான் நல்லது. அங்கேதான் சாவகாசமாய்ப் பேசிக்கொள்ள இயலும்' என்று தீர்மானித்தான் தமையன்.

ஒருநாள் தம்பியின் வீட்டு வாசலுக்கே போய்விட்டான். கதவு சாத்தியிருந்தது. உள்ளே தம்பியும் மனைவியும் பேசிக்கொண்டிருந்தது காதில் விழுந்தது. தன் பெயரை அவர்கள் பிரஸ்தாபிக்கவே அண்ணன் கவனித்துக் கேட்டான்.

'உங்கள் அண்ணு உங்களை நினைக்காமல் இருப்பாரா?'

'என் அண்ணனை எனக்குத் தெரியாதா? தன் திருஉள்ளத்துள்ளே தன்னையே நினைத்துக்கொண்டிருக்கும் தாராளப் பிரபு!'

பிறகு இருவரும் நீண்டநேரம் பேசவில்லை. அந்த இரவுக் குளிரையும் பொறுத்துக்கொண்டு நின்முன் அண்ணன் கதவண்டை. ஒரு குழந்தை உள்ளே அழுதுகொண்டிருந்தது. ஆண்டர்ஸ் தாலாட்டினுன். அவள் பால் காய்ச்சிக்கொண்டிருந்தாள்.

கடைசியாகப் பேச்சுக்கொடுத்தாள்: 'நீங்கள் இருவரும் ஒருவரை ஒருவர் நினைத்துக்கொண்டுதான் இருக்கிறீர்கள். ஆனல், அதை நீங்கள் இருவரும் ஒப்புக்கொள்ளமாட்டீர்கள்!'

'வேறு ஏதாவது பேசு' என்று பதில் சொன்னுன் ஆண்டர்ஸ்.

சிறிது நேரத்தில் ஆண்டர்ஸ் வெளியே புறப்படக் கதவைத் திறந்தான். பனிச்சென்று பார்ட் விறகுக் குவியலுக்குப் பின் மறைந்துநின்முன். அந்த இடத்திலிருந்து மெலிந்துபோன தம்பியின் உருவத்தையும் கந்தல் உடையையும் கண்டுகொண்டான். அதே சமயம் தன் சொக்காய்ப்பையில் 'டிக், டிக்' என்று தன் செல்வத்தை நினைப்பூட்டிக்கொண்டிருந்த தங்கக்கடிகாரத்தையும் தொட்டுப் பார்த்தான்.

வானத்திலே பிரகாசித்துக்கொண்டிருக்கும் நட்சத்திரங்களை நோக்கிய வண்ணம் தம்பி, 'நல்லது, நல்லது—ஓ ஆண்டவனே!' என்று முணுமுணுத்துப் பெருமூச்சு விட்டான். உடனே போய் அவனைக் கட்டிக்கொண்டு ஆறுதல் கூறவேண்டுமென்று துடித்தது தமையனுள்ளம். அதற்குள் தம்பி அப்பால் போய்விட்டான்.

மேகங்களால் வானம் இருண்டது. தமையன் நெருப்புக்குச்சியை உரைத்து, பெரிய வைக்கோற்போர் இருந்த கொட்டிலைக் கண்டுகொண்டான். அதிலே, மறுநாள் காலையில் தம்பி வைக்கோல் எடுக்கும் இடத்திலே தங்கக் கடிகாரத்தை மறைத்து வைத்தான். எரிந்துகொண்டிருந்த நெருப்புக்குச்சியை அணைத்து விட்டுப் போய்விட்டான்.

மறுநாள் பார்ட் தம்பியின் வைக்கோற்போர் எரிந்துபோய் விட்டதாகக் கேள்விப்பட்டான். தான் உரைத்துப்போட்ட நெருப்புக்குச்சியே அந்த விபத்துக்குக் காரணமாக இருக்கக்கூடும் என்று ஊகித்துக்கொண்டதும் எண்ணுததெல்லாம் எண்ணி ஏங்கினுன்.

ஆண்டவனைக்குறித்துப் பிரார்த்தனை செய்தவண்ணமாயிருந்தான். அது கண்டவர்கள், 'ஏன் இவ்வளவு பக்திப் பைத்தியம் இவனுக்கு?' என்று அதிசயித்தார்கள்.

அன்று மாலை அண்ணன், தம்பி வீட்டிற்குப்போனுன். வீடெல்லாம் எரிந்துகிடந்ததுகண்டு பெரிதும் வருந்தினுன். வைக்கோற்போர் இருந்த இடத்தை ஒருவாறு ஊகித்துக்கொண்டு அங்குமிங்கும் தோண்டிப்பார்த்தான. உருகிப் பின் இறுகிக் கிடந்த 'சிறு தங்கக்கட்டியை கண்டு, கடிகாரத்தில் மிஞ்சிக்கிடந்ததெல்லாம் அவ்வளவுதான் என்று தெரிந்துகொண்டான்.

அந்தச் சிறு கட்டியும் கையுமாய் நேரே தம்பியிடம்போய் நடந்ததையெல்லாம் தெரிவித்துச் சமாதானம் செய்துகொள்ள விரும்பினுன். அப்போது நடந்ததைத்தான் ஏற்கெனவே சொல்லி விட்டோமே.

(தொடர்ச்சி — 58-ம் பக்கம்)

அபூர்வ ராமாயணம்

4 க: க்ருதஜ்ஞ:?

ஸ்ரீ. ப்ர. ப. அண்ணங்கராசாரியர்

ஏப்ரல் இதழ் தொடர்ச்சி,

வான்மீகி நாரத ஸம்வாதத்தில் இது நான்காவது வினா. குணவான் யாவன்? வீர்யவான் யாவன்? தர்மஜ்ஞன் யாவன்? என்னும் மூன்று வினாக்கள் சென்றன. க்ருதஜ்ஞன் யாவன்? என்கிற இந்த நான்காவது வினா இனி விவரிக்கப்படுகின்றது.

செய்த நன்றியை மறவாதவனுக்கு க்ருதஜ்ஞனென்று பெயர். மனிதர்களுக்கு உரிய குணங்களுள் இக்குணமே முதன்மைபெறும். "எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டாம் உய்வில்லை, செய்ந்நன்றி கொன்ற மகற்கு" என்பது திருக்குறள். வடமொழியறநூல்களும் "க்ருதக்நே நாஸ்தி நிஷ்க்ருதி:" என்று அறைகின்றன. எல்லாப் பாவங்களுக்கும் பிராயச்சித்தங்களினால் போக்கடியுண்டு; செய்ந்நன்றி மறக்கை, அல்லது செய்ந்நன்றி கொல்லுகையாகிற பாவமொன்றுக்கு மாத்திரம் பிராயச்சித்தம் ஒரு சாஸ்திரத்திலும் காணக்கிடைக்காதென்றே வடநூலாரும் தமிழ்நூலாரும் ஒருமிடறாகக் கூறியுள்ளார்கள்.

ஸங்கல்பஸூர்யோதய நாடகத்தில் வேதாந்த தேசிகர் இவ்விஷயத்தைச் சிறிது விவரித்து மிகவிசித்திரமாகக் கூறியுள்ளார். *ப்ரதிதம் பாதகிவர்க்கம் க்ருதக்ந ஏகோ ஹி க்ருத்ஸ்நமதிசேதே, தமிமம் க்ரியமாணக்ந: தமபி துராத்மா கரிஷ்யமாணக்ந:* என்று அங்குள்ள சுலோகம் இன்சுவைமிக்கது. இதன்பொருள் கேண்மின்; பிறர் செய்த உபகாரங்களை மறப்பது என்கிற அளவிலே நில்லாமல் உபகாரம் செய்தவர்களுக்குப் பிரதியாக அபகாரங்களைச் செய்பவன் க்ருதக்னனென்னப்படுவான்; அவன் பஞ்ச மஹாபாதகிகளிற்காட்டிலும் மேம்பட்டவன். என்றைக்கோ செய்து கழிந்த உபகாரங்களை மறப்பதென்பது கிடக்கட்டும்; செய்துகொண்டேயிருக்கு முபகாரங்களை மறப்பவனும் அவ்வுபகாரங்களுக்குப் பிரதியாகத் தீங்கிழைப்பவனும் அவனிலும் மேம்பட்ட பாதகி. இதுவுங்கிடக்க; 'இவர் நாளைக்கு நமக்கோர் பேருதவி செய்யப் போகிறார்' என்று தெரிந்துகொண்டு முந்தியே அப்பெரியார்க்குத் தீங்கிழைப்பவன் பாதகிகளில் மிகமேலானவன் என்றபடி.

க்ருதஜ்ஞதை யென்னுங்குணம் வாய்ப்பதரிது. இப்பெருங்குணத்தை நாம் அஃறிணைப் பொருள்களிடத்துக் காணமுடியுமேயன்றி உயர்திணைப் பொருள்களிடத்துக் காண்பது மிகவுமரிதென்று கருதி ஒரு பெரியார் கூறுகிறார்—"நின்று தளரா வளர் தெங்கு தாளுண்ட நீரைத் தலையாலே தான்தருதலால்" என்று. தென்னைமரங்களுக்கு நாம் உமிழ்நீர் முதலிய அற்பமான நீர்களை யிடுகிறோம்; இதற்குப் பிரதியாக அவை நமக்கு நல்கும் நீர் மிக மதுரமான தென்பதைக் காணுகின்றோம். இத்தகைய க்ருதஜ்ஞதாகுணம் உலகில் சில வ்யக்திகளிடத்தில்தான் காணமுடியும். இராமபிரானிடத்துக் காணுமிக்குணம் லோகோத்தரமானது.

அயோத்யா காண்டத்தில் (1—11.)—

“**கதஞ்சிதுபகாரேண க்ருதேனைகேந துஷ்யதி, நஸ்மரத்யபகாராணாம் சதமபி ஆத்மவத்தயா.**” என்றுள்ள ச்லோகமானது இராமபிரானுடையதான இக்குணத்தை நன்கு வெளியிடுகின்றது. ஏதேனுமொருவிதத்தில் யாரேனும் ஒருதவி செய்தாலும் அதனால் எப்போதும் உள்ளம் பூரித்திருப்பதாகவும், நூற்றுக்கணக்கான தீங்குகளிழைத்தாலும் அவற்றைச் சிறிதும் நெஞ்சிற் கொள்வதில்லையாகவும் இந்தச்லோகத்தில் ஸ்ரீராமகுணாதிசயம் கூறப்பட்டுள்ளது. இதில் கதஞ்சித் என்று முன்னம் பிரயோகிக்கப்பட்டுள்ள பதம் குறிக்கொள்ளத்தக்கது. உபகாரம் செய்யவேணுமென்கிற எண்ணத்தோடு செய்கையன்றியே அபுத்திபூர்வகமாகச் செய்ததாயிருந்தாலும் அதையும் பேருதவியாகக்கொண்டு மகிழ்பவனும் இராமன். நெஞ்சாரவே நூற்றுக்கணக்கான தீங்குகள் செய்யினும் அவற்றை நெஞ்சிற் கொள்ளானும்.

இப்பெருங்குணத்தை நாம் ஸ்ரீராமாயணத்தில் எங்கே கண்டோமென்னில்; பல விடங்களிற் கண்டாலும் சிலவிடங்களையே இங்கெடுத்துக்காட்டுவோம். ஆனால், இங்கு முன்னம் ஒன்று சொல்லவேண்டியதாகிறது; “வெறிதேயருள் செய்வர்” என்று ஆழ்வாரருளிச்செய்தபடி ஒன்றுமே செய்யாதவர்கட்குங்கூட மிகச்சிறந்த அருளைச் செய்யுமியல்வினனான இராமன் ஒன்று செய்தவர்களுக்கு உகந்திருக்கிறானென்றால் இது வியப்போ? இது பாராட்டத்தக்கதொரு குணமாகுமோ? ஆகாதுதான். ஆனாலும், இராமன் தன்னை ஒரு மனிதனாக நடித்துக்காட்டினனாதலால், ‘உலகில் மனிதர்களிடத்துக்காணுங் குணங்களெல்லாம்இராமபிரானிடத்து உள்ளன’ என்று காட்டவேண்டுவது ப்ராப்தமாகிறபடியால் அந்த முறையில் காட்டலாமன்றோ. கேண்மின்; குரக்கரசனான சுக்ரீவனிடத்திலும் அரக்கர் கோமானான விபீடணனிடத்திலும் இராமபிரான் காட்டியருளின திருவருள் வாயாற் சொல்லவொண்ணாதது, நெஞ்சாலும் நினைப்பரிது. இதற்கீடாக அவர்கள் செய்தநன்றியாதென்று பார்க்குமளவில், வீபீஷணன் சரணாகதி செய்தானென்றாவது சொல்லத் தக்கதாகவுள்ளது; ஸுக்ரீவனிடத்திலோவென்னில் அதுவுமில்லை; “**லோகநாத: புரா பூத்வா ஸுக்ரீவம் நாதமிச்சதி**” என்றும் “**ஸுக்ரீவம் சரணம் கத:**” என்றுமுள்ள பிரமாணங்களின்படி இராமன் ஸுக்ரீவனைச்சரணம் புக்கதாகக் காண்கிறோமேயல்லது சுக்ரீவன் இராமனைச் சரணம்புக்கதாக இல்லை. ஆனாலும், இராமபிரானது திருவுள்ளத்தினால் சுக்ரீவன் பேருதவி செய்தானாகக் கொள்ளப்பட்டான்; அவ்வுதவி யாதெனில்; இராமன் சீதையைப் பிரிந்து மிகவருந்தி இன்னது செய்வதென்று தோன்றாமல் சென்றுகொண்டிருக்கையில் “**பம்பாதீரே ஹநுமதா ஸங்கதோ வாநரேண ஹ**” என்னும்படி பம்பைக்கரையில் அனுமன் வந்து சந்தித்தனனன்றோ; இது சுக்ரீவனது கட்டளையினால் தானே நிகழ்ந்தது. அனுமன் இராமனிடம் வந்து சேர்ந்ததும் ‘நான் சுக்ரீவனால் அனுப்பப்பட்டு இவ்விடம் வந்தேன் உங்களைக் காண’ என்றே சொல்லியிருக்கின்றனன். இத்தகைய மஹாகுணசாலியான ஆஞ்சநேயனை யனுப்பினது ஸுக்ரீவன் தன்னுடைய காரியத்திற்காகவாயினும், இராமன் அங்ஙனம் கொள்ளாது அதனைத் தனக்குச்செய்த பேருதவியாகக் கொண்டே சுக்ரீவ

னிடத்துப் பேரருள் புரிந்தனன். விபீடணன் "ஸர்வலோகசரண்யாய ராகவாய மஹாத்மநே" என்று சொல்லிக்கொண்டு தன்னிருப்பிடந் தேடிவந்த வொரு சிறிய செயலையே பேருதவியாகக்கொண்டு அவனிடத்து மிக்கபரிவு காட்டியருளினன் இராமன். அந்தப் பரிவு எப்படிப்பட்ட தென்பதை ஸ்ரீவசநபூஷணத்தில் ஒரு வாக்யத்தில் காணலாம்; அதாவது—(228)

"விபீஷணனை ராவணன் *குலபாம்ஸநம்* என்றான்; பெருமாள் இக்ஷ்வாகுவம்ச்யராக நினைத்து வார்த்தை யருளிச்செய்தார்."

என்பது. இராமன் விபீடணனை இக்ஷ்வாகுவம்சத்தவர்களுள் ஒருவனாகத் திருவுள்ளம்பற்றி வார்த்தையருளிச் செய்தானென்பது ஸ்ரீராமாயணத்தில் எங்கே காண்கிறதென்னில்; விபீடணனை இராமபிரான் அங்கீகரித்த பிறகு இலங்கையிலுள்ளாருடைய பலாபலங்களைச் சொல்லுமாறு வினவுகின்ற இராமன் "ஆக்யாஹி மம தத்வேந ராக்ஷஸாநாம் பலாபலம்" என்கிறான். ராக்ஷஸர்களின் பலாபலத்தை உள்ளபடி எனக்குச் சொல்லு, என்பது இதன் பொருள், 'விபீஷணா! உன்னினத்தாருடைய பலாபலங்களைச் சொல்லு' என்றோ 'ராவணனுடைய பலாபலங்களைச் சொல்லு' என்றோ சொல்லவேண்டுமிடத்து அப்படிச் சொல்லாமல் ராக்ஷஸர் களின் பலாபலங்களைச் சொல்லு' என்றதானது விபீடணனை ராக்ஷஸஜாதியில் வேறுபடுத்திக்காட்டியேதீரும் என்று ஆசார்யர்கள் திருவுள்ளம்பற்றினர். "செல்வ விபீடணற்கு வேறாக நல்லானை" என்கிறார் திருமங்கையாழ்வார் பெரிய திருமொழியில். இராமனுக்கு மற்ற பக்தர்கள்யாவரும் ஒரு தட்டு, விபீஷணாழ்வான் தனித்தட்டு என்பது இப்பாசுரத்தின் கருத்து.

ஆக, விபீடணன் சுக்கிரீவன்போல்வார் செய்த செயல்களைக் கனத்ததாகக் கொண்டு அவர்களுக்கு நன்மை புரிந்த விஷயம் நிற்க; 'பிறர் எவ்வளவு அபகாரங்கள் செய்தாலும் அவற்றைச் சிறிதும் நினைப்பதில்லை' என்று இதுவும் ஒரு பெருங்குணமாக இராமனுக்குச் சொல்லப்பட்டிருக்கின்றதே! சுக்கிரீவன் விஷயத்தில் இது மாறுபாடாகக் காண்கிறதே; எங்ஙனேயெனின்; வாலியை வதைத்துச் சுக்கிரீவனுக்கு மகுடாபிஷேகஞ்செய்து, கார்காலம் நீங்கினவுடனே வானரசேனைகளைத் திரட்டிக்கொண்டு வருமாறு கட்டளையிட்டு அவனைக் கிஷ்கிந்தைக்குப் போகவிட்டனன் இராமன். போனவவன் மன்மதலீலைகளில் கால்தாழ்ந்திருந்ததனால் கேடு தவறிப்போனதை நினையாமலேயிருந்தான். அப்போது இராமன் இளையோனை நோக்கிக்கூறுகின்றனன், 'லக்ஷ்மணா! அரசர்கள் போர்க்குப் புறப்படவேண்டு மிக்காலத்தில் சுக்கிரீவன் என்னை அடியோடு மறந்து வாளாகிடக்கின்றனனே; செய்ந்நன்றி மறந்த காதகனல்லவா அவன்; நீ உடனே அவனிடஞ் சென்று நான் சொன்னதாக இங்ஙனம் கூறுவாயாக; செய்ந்நன்றி மறந்த பாபிஷ்டன் புருஷர்களில் கடையானவன்; மாமிசம் தின்னப்பிறந்த ஜந்துக்களுங்கூட அவனது மாமிசத்தைத் தின்னாதென்று சொல்லு. லக்ஷ்மணா! என் பராக்கிரமத்தை அவன் நன்கறிந்

திருந்தும் மழைகாலம் சென்ற பின்பும் சிறிது மச்சமின்றிக் காம பரவசனாய்க் கிடக்கிறானே; வாலிசென்ற வழி அவனுக்கும் திறந்திருக்கின்றதென்று அவனிடம் கூறு. அவனை உற்றாருறவினரோடுங்கூட யமபுர மனுப்பச் சித்தமாயிருக்கின்றேனென்று தெரிவி; அப்படிப்பட்ட கதியை வரவழைத்துக்கொள்ளவேண்டாமென்று சொல்லு' என்று. இவ்வளவு சிற்றம் இராமனுக்கு ஏன் உண்டாயிற்று? ந ஸ்மரதி அபகாராணாம் சதமபி ஆத்மவத்தயா [நூற்றுக்கணக்கான தீங்குகள் கண்டாலும் நெஞ்சு கன்றுவதில்லை] என்று கொண்டாடப்பெற்ற இராமனுக்கு உயிர்த்தோழன் இறந்து இத்தனை சீற்றம் தகுமா? இது குணக்கேடல்லவா? என்கிற கேள்வி பிறக்கக்கூடும்.

இதற்குச் சொல்லுகிறோம் கேண்மின்; மேற்சொன்ன விதமாக இராமன் லக்ஷ்மணனிடம் சொன்னபோது அவ்விளையோன் "சத்தியம் தவறின சுக்ரீவனை இன்றே கொன்று விடுகிறேன்; வாலியின் மகனான அங்கதன் நமக்குத் துணை புரிவான், சுக்ரீவனைத் தொலைத்தே விடுவோம்" என்றனன். அதற்கு இராமன் சொல்லுகிறான்—'லக்ஷ்மணா! நன்னடத்தையுள்ள நீ இப்படிப்பட்ட நண்பனை ஆராயாது கொல்லலாகாது; அவனிடம் பழையபடி நல்ல குளிர்ந்த வார்த்தைகளையே பேசு; அவன் நம்விஷயத்தில் நன்றிகெட்டவனே யென்பது நிச்சயமாகத் தெரிந்தால் பிறகு உன் விருப்பத்தின்படி செய்' என்று. இதனால் நாம் தெரிந்து கொள்வதென்ன? உலகில் நன்றிமறத்தலென்பது பெரும் பாதகம், அப்பாதகியை என்ன செய்யினும் குற்றமில்லை என்கிற நூற்கொள்கையை எடுத்துரைப்பதொன்றே இராமனுக்கு இலக்கியமானது; 'தர்மஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி'* என்று சொல்லித் தருமநெறியை நிலைநாட்டுதற்கென்றே திருவவதாரம் செய்தருளின பெருமாள் இத்தகைய நூற்கொள்கைகளைத் தெரிவிக்கும் முகத்தால் தர்மஸ்தாபனம் செய்யவேண்டுவதும் அவசியமாதலால் இதனால் இராமனுக்குக் குணக்கேடு யாதொன்றுமில்லையென்றுணர்க.

இலங்கைக்கு வழிவிடவேண்டுமென்று கடலரசனை நோக்கிச் சரணாகதி செய்தார் பெருமாள்; அவன் முகங்காட்டவில்லையென்று சீறிச் சிவந்தார்; உடனே அவன் விநயத்தோடு வந்து நிற்க, அவன்மீது எய்யத்தொடுத்த அம்பை அவனது பகைவர்களின் மேற்செலுத்திப் பரம கருணையைக் காட்டியருளினாரென்று இராமாயண கதையுள்ளது. இதனால், சீற்றமும் நன்மைக்கே யாகிறதென்று நன்கு தெரிகின்றதன்றோ. கருணாமூர்த்தியான இராகவனுக்குச் சீற்றமுண்டாக வழியில்லைதான். சீற்றமுண்டானதாகக் காணுமிடங்களில் தருமஸம்ரக்ஷணமேதேனும் தெரியவந்தே தீரும்.

க்ருதஜ்ஞதை என்னும் மஹாகுணத்தை மானிடவடிவனான இராமனிடத்தில் நாம் நிரூபித்துக்காட்டுவது ஒரு புறமிருக்கட்டும். பரந்தாமனான ஸ்ரீமந்நாராயணமூர்த்தியிடத்தில் இக்குணமுண்மையை நம் ஆசாரியர்கள் வெகு அற்புதமாக நிரூபித்துக் காட்டியருளுகிறார்கள்.

(அது அடுத்த இதழில் வெளிவரும்.)

என் சுய சரிதை

சகோதரி R. S. சுபலக்ஷ்மி அம்மாள்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

ஒரு விசித்திர சம்பவம்

மிஸஸ் டிரைஸ் டேலின் ஏற்பாட்டின்படி "பழைய மாணவிகள் சங்கம்" ஒன்று ஏற்படுத்தி, பழைய மாணவிகள் வருஷம் ஒருமுறை வந்து கூடவும் ஏழைப் பெண்களின் கல்விக்கு உதவியாய் வருஷம் 5 ரூபாய் கொடுப்பதென்றும் ஏற்பாடாயிற்று. R. விசாலாக்ஷி, T. V. கலியாணி என்ற 2 விவாகமாகாத பெண்கள் பழையமாணவிகள் சங்கநிதியிலிருந்து சிறிது உதவிபெற்று படிக்கவந்து சேர்ந்தனர். ஆகஸ்ட் மாதத்தில் பாக்கியலக்ஷ்மி என்னும் ஒரு விவாகமாகாத பெண் வந்துசேர்ந்தாள். இவள் வந்துசேர்ந்தது ஒரு விசித்திரமான சம்பவம். இவள் ஒரே சகோதரி அலங்காரம் என்பவள் விவாகமான சிலதினங்களிலேயே புருஷனை இழந்து சுமார் 12 வயதிலேயே என்னிடம்வந்துசேர்ந்து படித்துக்கொண்டிருந்தாள். இப்படி இவள் ஆகிவிட்ட ஏக்கத்திலேயே இவள் தாயார் இறந்துபோய் 6 மாதத்துக்குள் தகப்பனார் வேறு ஒரு விவாகம் செய்துகொண்டு அதன் பிறகு 1 வருஷத்துக்குள் அவரும் காலஞ்சென்றார். அலங்காரத்துக்கு அப்போது வயது சுமார் 15; பாக்கியத்துக்கு 11; பிறகு 7 வயதிலும் 5 வயதிலும் 2 பிள்ளைகள். இவர்களுக்கு கார்டியனாக ஏற்பட்ட இவர்களது அத்தை புருஷனும், தகப்பனார் இறந்த 1 வருஷத்துக்குள் இறந்துபோனார். இவர்களது அத்தையும் அத்தையின் புதல்வனும், பாக்கியத்தை சற்று வயதான ஒருவனுக்கு இரண்டாவது தாரமாக விவாகம்செய்து கொடுக்க ஏற்பாடு செய்துகொண்டுஇருக்கும் விஷயத்தை பாக்கியம் அவள் தமக்கைக்கு எழுதி, உடனேவந்து தன்னை அழைத்துப்போகவேண்டுமென்று எழுதியிருந்த கடிதகத்தை அலங்காரம் என்னிடம் காட்டி, தங்கையின் விவாகத்தை எப்படியாவது தடுத்து அந்தப் பெண்ணை அழைத்து வந்து படிப்பிக்கவேண்டுமென்று கெஞ்சினாள். பாக்கியத்தினுடைய பாக்கியம், அந்த சமயத்தில் ஸ்ரீமான் வாவில்லா வேங்கடேச சாஸ்திரிகள் ஒரு விவாகம் ஆகாத ஒரு பெண்ணைப் படிப்பிக்க மாதம் ரூ. 15 கொடுக்க தான் இஷ்டப்படுவதாயும், அந்த உதவிக்குப் பாத்திரமான ஒரு பெண்ணை நான் சிபார்சு செய்யும்படியும் அவராகவே எழுதியிருந்தார். உடனே என் சித்தியம்மாள் அலங்காரத்தையும் அழைத்துக்கொண்டு சூலமங்

கலம் சென்று அவர்களது அத்தையம்மாளுக்கு வேண்டிய இதோபதேசம் செய்து அவள் சம்மதத்துடன் பாக்கியத்தை அழைத்துக்கொண்டு ரயிலேறினார்கள். வெளியூருக்குச் சென்றிருந்த அவர்கள் அத்தான் அப்போதுதான் திரும்பி வந்து நடந்த சம்பவத்தைத் தாயாரிடமிருந்து தெரிந்து கொண்டு ஸ்டேஷனுக்கு ஓடோடியும் வந்து பாக்கியத்துக்குத் தான் கார்டியன் என்றும் அவளை யழைத்துப் போகக்கூடா தென்றும் வாதாடி அவள் கையைப்பிடித்து ரயிலிலிருந்து வெளியில் இழுக்க, சித்தியும் அலங்காரமுமாய் அவளை உள்ளே யிழுக்க, இந்த நிலைமையில் ரயில் புறப்பட்டுவிட்டது. பிழைத் தாள் பாக்கியம். இந்த வேடிக்கையைப் பார்க்க ஸ்டேஷனில் ஓரே கூட்டம்.

பாக்கியம் 6-ஆவது பாரத்துக்கு வந்தபோது வாவில்லா அவர்கள் அவளுக்கு அனுப்பிக்கொண்டிருந்த உதவியை நிறுத்திவிட்டார். அந்த ஒரு வருஷத்துக்கு என் சகோதரி சாவித்திரியும் நானும் அவள் செலவுக்குப் பணம் கொடுத்து உதவினோம். அதன்பிறகு அவள் B. A, L. T. முடித்து சில வருஷங்கள் வேலை செய்து பிறகு ஸ்ரீமான் சங்கர் என்பவரை விவாகம் செய்துகொண்டு குழந்தைகளுக்குத் தாயாராய் சந்தோஷமாயிருக்கிறாள். சாரதா வித்தியாலயத்துக்கு 1000 ரூ. இவள் வைத்து, தன்னைப்போல் ஒரு விவாகம் ஆகாத ஒரு ஏழைப் பெண்ணுக்கு இதன் வட்டியை அலங்காரத்தின் பேரால் ஒரு உதவிச் சம்பளம் கொடுக்கும்படி ஏற்பாடு செய் திருக்கிறாள். நிற்க,

செப்டம்பர் மாதம் மிஸ் ப்ரேஜர் என்பவர் 1½ வருஷகாலம் சீமைக்குப் போயிருந்து திரும்பிவந்து பாடசாலை தலைமைப் பதவியை ஏற்றுக்கொண்டார். அவருக்குப் பதிலாக இருந்த மிஸ் பிலிப்ஸ் என்பவர் ஸ்கூல் இன்ஸ்பெக்ட்ராக மாற்றிப் போனார்.

என் தாயாருக்கு கிராமவாஸம், நதிஸ்நானம், கோவில்தரிசனம், பூஜை, விரதம் இவற்றில் எல்லாம் விருப்பம் அதிகம். ஆகவே 1921 ஆம்வருஷம் செப்டம்பர் மாதத்தில் மாயவரத்தில் காவிரிநதிக்கு சமீபத்தில் இடைவாயிற்படியுடன் கூடிய சிறிய இரட்டை வீடுகள் வாங்கி அங்கு சிலநாட்கள் போய்த் தங்கியிருந்து திருப்தியாக தீர்த்த ஸ்நானம், மூர்த்தி தரிசனம் செய்துகொண்டிருந்தார். அங்கு இருந்தபோது உமா மகேஸ்வரவிரதம் முடித்தார். நவராத்திரி விடுமுறை 10 நாட்களும் நாங்கள் சிலபேர் மாயவரம் போய் எங்கள் சொந்த வீட்டில் தாயாருடன் இருந்துவிட்டு வந்தோம்.

1921 டிஸம்பர் மாதம், ஹிந்து ஹாஸ்டலிலிருந்த 5 பிராமணர் அல்லாத பெண்கள் புருஷனை யிழந்தவர்கள் ஐஸ் ஹௌஸில் வந்து சேர்ந்தார்கள்.

உபநயனம்

அன்பீர்!

உபநயன குமாரன் வாழ்க!

உபநயனம் என்றால் துணைவிழி. உள்ளத்தானாகிய இறைவனைக் காணத் துணைசெய்யும் அருள்விழியைத் திறப்பதே உபநயனம். அருள்விழி, தியானத்தாலும் மந்திரஜபத்தாலுமே திறக்கும்.

''ஓம், என்னும் பரமாத்மா, சுத்தசச்சிதானந்தன்; அவன் பூலோகம் முதல் ஸத்யலோகம்வரையில் ஏழுலகங்களிலும்பரவியிருக்கிறான். அவனை மனங்குவிந்துஉள்ளே தியானிப்போம்; அதனால் அவன் அருளையடைந்து ஒளி பெறுவோம்'' என்பதே வேதமந்திரத்தின் பொருள்.

பக்தி, பிரபத்தி, தியானம், மந்திரம், சதாசாரம் இவையே உபநயனக்கிரியைகள். வெளிச்சடங்குகளும், கொட்டு முழக்குக் கொண்டாட்டங்களும்ஆசைக்குச் செய்யும் கூத்தே. அதுவும் உறவினர் திருப்திக்கு நடக்கட்டும் ,தினம் காயத்திரி ஜபம் செய்துவரவேண்டும். அதுவே முதன்மை.

பூணூல்என்பது,பூ-நூல்: பூ என்பது ஆதாரத் தாமரை மலர்கள்; அதில் நூல்போல் இழைந்து செல்லும் இடா, பிங்களா, சுழிமுனை ஆகிய மூன்று நாடிகளே மூன்று வடங்கள். ஹ்ருதயஸ்தானத்தில் மூன்றும் சேர்ந்ததே பிரம்ம முடிச்சு.

சூக்ஷ்ம உபவீதம் இராஜநாடிகளே. அவற்றின் வழியாக மந்திர சக்தியால் மூலாதார ரசமான குண்டலி சக்தியைப் பாய்ச்சுவதுதான் சாறுகுடிப்பது.

தாயைப்போல் அன்பும் தனிக்கருணையுங் கொண்டு
தேயத்தைக் காக்குந் திறனுடைய—காயத்ரி
மந்திரந் தன்னை மனதாரப் பூசித்தால்
எந்த நலமும் பெறலா மீங்கு

வெளி வேஷம்

அன்பனே!

அந்தரங்க சுத்தியே முதன்மை. வெளிவேஷம் கால தேச வர்த்தமானங்களை ஒட்டியிருக்கலாம். ஆனால் ஆடை சுத்தமாயிருக்கவேண்டும். உடம்பில் காற்றும் வெயிலும் படவேண்டும். மூச்சைப்போல் தோலும் உயிர்க்கிறது.

ஐரோப்பாவிற்குப் போகிற கனவான், பஞ்ச கச்சமும் விபூதி ருத்திராட்சமுமாகப் போனால் காட்சிசாலைப்பொருள் போல்மதிப்பார்கள். பார்லிமெண்டுசபையில் பேசப்போகிறவர்

12-ஆந்தேதி தர்பார்தினம். விடுமுறை. மலபார் உதவி நிதிக்காக பாடசாலை மாணவிகள் ஹிந்து ஹைஸ்கூலில் மார்க் கண்டேயர் நாடகம் நடித்து அதில் வசூலான சுமார் ரூ. 200 அனுப்பினோம்.22-ஆந்தேதி கிறிஸ்துமஸ் விடுமுறை ஆரம்பம்.

இந்தவருஷந்தான் முதன்முதலாக எங்கள் வீட்டில் ஒரு மோட்டார் வண்டி வாங்கினோம். அடுத்த இதழில்: 1922.

ஜடாமகுடதாரியாகவோ, பன்னிரு திருமண் சாத்தியோ, கிண்டி கப்பறை ஏந்தியோ போய் "பம் மஹாதேவா...ஏழுமலையானுக்கு ஹரோஹரா" என்று நின்றால் "பைத்தியம்' என்று வெளியே பிடித்துத் தள்ளுவார்கள். அங்கே மற்றவர்கள்போல உடையணிந்து சபையை ஒட்டி நடையுடை பாவனைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

கோயிலுக்குப் போகிறவன் சட்டை தொப்பியுடன் போனால் நன்றாயிராது. "அகம்பாவி" என்று உலகம் நினைக்கும். மலையாளத்து ராஜாபோல், கோயிலுக்குப் போகும்போது பவ்யமாக மேல்வேட்டியை இடுப்பில் கட்டிக்கொண்டு செல்வதுதான் பாங்காகும்.

அவரவர் அலுவலுக்கும் நிலைக்கும் தக்கபடி ஆடையணிய வேண்டும். போலீஸ்காரர் பஞ்சகச்சம் வைத்துக்கட்டிக் கொண்டு வைதிகமாக வந்தால் அந்த உத்தியோகத்திற்கு ஏற்ற மரியாதை உண்டாகாது. அவருக்குரிய உடையில் வந்தாலே மதிப்பாகும். அதேபோல் துறவிகளும் எளிய உடையில் விளங்கவேண்டும். காஷாயம் வேண்டுமென்பதில்லை. துறவிகள் வெள்ளாடை அணியலாம்; ஆனால் சுத்தமாக, அனுவசியமான படாடோபமில்லாமல், எளிய ஆடை அணிய வேண்டும். தாடி, மீசை, ஜடை அவசியமில்லை. சாதாரணமாக ஒரு வேட்டி, குடுத்துணி, அங்கவஸ்திரம், ஒரு கைக்குட்டை— இவை சரியான ஆடையாகும்.

நான் அறைக்குள் நிர்வாணம் அல்லது கோவணமே அணிவேன். எப்போதாவது வெளியில் வர நேர்ந்தால் சில வேளை காவியணிவேன்; சிலவேளை வேட்டி, குடுத்துணி, அங்கவஸ்திரம் அணிவேன். நான் காவியணிவது சாமிக் கோலத்திற்கு அன்று. காவி நிறத்திற்குச் சில காந்தசக்திகள் உண்டு. எதிரேயிருப்பவரின் தாமஸரஸ்மிகள் தாக்காமல் காவியுடை பாதுகாக்கும்; தேக காந்தத்தை உள்ளே அடக்கிவைத்துக் காக்கும். நான் தாடிவளர்ப்பதும் ஒரு விரதமே. இந்தியா பூரணசுதந்தரம் பெறவும் எனது உயிர்க்காவியமான "பாரத சக்தி மகா காவியம்" முற்றமுடிந்து வெளிவரவும்விரதம்பூண்டுதான் தீட்சைவளர்த்தேன். இரண்டுகாரியங்களும்நிறைவேறின. பாரதசக்தி முழுதும்வெளிவந்ததும்தாடியின் அவசியம் தீரும். தீட்சை மனவுறுதி தரும். கைக்கொண்டவேலையை அடிக்கடி நினைப்பூட்டி ஊக்கும். அதற்காகத்தான் உடம்பில் கத்தியே படாமல் அப்படியே இயற்கையாகமயிர்வளரவிட்டிருக்கிறது.

உண்மை ஆளை உள்ளே பார். வெளியே பார்த்து மயங்காதே. இந்த உடல் இன்றிருக்கும்; காலை மறையும். இதன் கோலங்கள் மாறும். வெளி வேடங்களைக் கண்டு யாரையும் நம்பி ஏமாறாதே. உள்ளே தேடு. உள்ளத்தானைக் கூடு, அவன் இசையைப் பாடு. அவனே வீடு; அவனே நாடு! ஓம் சுத்த சக்தி!

ஸ்ரீமதி. கி. ஜெயலக்ஷ்மி

கர்ணனின் வெற்றி

ஸ்ரீ கிருஷ்ணன் துவாரகையிலிருந்தபோது ஒருநாள் தேவேந்திரனை நினைக்க, அவன் உடனே பிரத்தியக்ஷமாகிச் சாஷ்டாங்கதண்டனிட்டு அஞ்சலிஹஸ்தனாகநின்றான். அவனை, கிருஷ்ணன் வரவேற்று ஆசனத்திலமர்த்தி,

''அர்ஜுனனுக்கும் கர்ணனுக்கும் ஆதிமுதல் இருந்து வரும் பெரும் பகையும் காண்டவ வனத்தில், தக்ஷகனுடைய புத்திரன் அசுவசேனன், வால்அறுபட்டு, தாயையும் பறி கொடுத்து மனம்வருந்தி, கர்ணனிடம் போய்ச்சேர்ந்து காண்டீபனைக் கொன்று பகையைத் தீர்த்துக்கொள்வேன் என்று நாகாஸ்திரமாகவளர்ந்துவருவதும் உமக்குத் தெரிந்திருந்தும் நீர் சும்மா இருக்கலாமா? நாளை ஒரு சமயம் கர்ணனால் விஜயனுக்கு அபாயம் நேர்ந்தால், பாண்டவர்களில் மற்ற நால்வரும் இறந்துவிடுவார்களே. அவர்கள் கூறிய சபதமும், திரௌபதை விரித்த கூந்தலும் முடியாமல்போகுமே. இந்தப் பழிகளெல்லாம் உம்மையும் நம்மையும் சேருமே. இதற்குத் தகுந்த யுக்தியை யோஜித்துச் சொல்லும்'' என்று கேட்டார்.

''அடியேனால் ஆகவேண்டியதை ஆக்ஞாபித்தால் அவ்வண்ணமே நடந்துகொள்வேன்'' என்றான் இந்திரன்.

கண்ணன், ''கேளும் இந்திரனே! ஆதியில் வில்வித்தை பரீக்ஷை செய்தபோதும் வில்வளைத்த கல்யாண காலத்திலும் கந்திருவனிடத்தில் அகப்பட்டு வருந்தியபோதும் நேரிட்ட பகைகளை அடித்துவிடப்பட்ட ஸர்ப்பத்தைப்போல கர்ணன் மறவாதிருக்கிறான். மேலும் நாகாஸ்திரமும் கைகூடியிருக்கிறது. இதன்றியும் ஆதியில் இவன் ஆயிரங்கவசன் என்ற ராக்ஷஸன். அதிக வரங்களினால் பலமடைந்த வகை, தேவர்கள் முதல் மாதவர்களையும் வேரறுத்துக் கொன்றுவருவான். அதைக்கண்டு வருந்திய பிரமன் முதலாகியவர்கள் நாராயண மூர்த்தியிடம் முறையிட்டார்கள். அவர் நாராயண ரிஷியாக நரனுடன் பூமியில் வந்து ஆயிரங்கவசனுடன் யுத்தம் செய்து ஜெயிக்கமுடியாமல் இளைத்துத் தவம் செய்யவும், அப்போது நரனானவன் ஒரு வருடம் யுத்தம் செய்யவும், இப்படியாக இந்த இருவரும் ராக்ஷஸனை விடாமல் மாறி மாறிப் போர்புரிந்து வருஷத்திற்கொரு கவசமாக அழித்து வந்தனர். இப்படி யுத்தம் செய்ததில் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்று ஒன்பது கவசம் அறுபட்டு ஒருகவசம் இருக்கும்போது அரக்கன் இளைத்து ஓடவும் இவர்களும் தொடர்ந்து போகையில் சூரியனிடத்தில் அபயம் புகுந்து ஐக்கியமானான் அவனே இப்போது கர்ணனாக வந்து பிறந்து மேற்கூறிய நரநாராயணர்களிடம் பகைகொண்டு இருக்கிறான். அந்தக் கவசகுண்டலம் இருக்கும்வரை இவன் இறக்கமாட்டான். ஆகையால், நீர் விருத்த பிராமண வேஷம் பூண்டு

கொடையாளியிடத்தில் சென்று கவசகுண்டலங்களைக் கேட்டால் இல்லை என்ற சொல்லை அறியாத கர்ணன் தடைசொல்லாமல் கொடுத்துவிடுவான். பிறகு நாகாஸ்திரத்திற்கு நானிருக்கிறேன்!'' என்றார்.

இந்திரன் எழுந்து வணங்கி ''சித்தப்படி நடப்பேன்'' என்று கூறி, விடைபெற்றுக்கொண்டான். கண்ணனும் இந்திரனும் பேசிக்கொண்டதைப் பார்த்துக்கொண்டிருந்த சூரிய பகவான், தன் புத்திரனைக் கொல்ல இருவரும் இந்த எண்ணங் கொண்டார்களல்லவா? யாராவது தான் சாகமருந்து உண்பார்களா?...என்று விசனமடைந்தவராய் வேதிய ரூபம் கொண்டு இந்திரனுக்குமுன்பாகவே கர்ணனிடம் சென்றார்.

கர்ணன் செய்த உபசாரங்களைப் பெற்றுக்கொண்டு அவனை ஆசீர்வதித்து அர்ஜுனனுக்காக தேவேந்திரன் உன் கவசகுண்டலங்களைக் கேட்க வருகிறான். நீ அவனுக்கு அந்த இரண்டையும் கொடுக்காமல் இருந்தாயானால் திரிலோகமும் உன்னை ஜெயிக்கமாட்டாது. கொடுப்பாயாகில் பார்த்தன் கைபாணத்தால் இறந்துவிடுவாய்; கொடுக்காதே'' என்று சொல்லி, ''நான் உன் தந்தை; நீ என் குமாரன்'' என்றும் கூறி, தான் சூரியனென்றும் தன் ஸ்வரூபத்தையும் காட்டினார்.

உடனே, அங்கர்கோமான் புளகாங்கிதமடைந்து புனித ஜலத்தினாலும் புஷ்பங்களினாலும் பூஜித்து பிரதக்ஷிண நமஸ்காரம் செய்து, ''சுவாமீ! என் பிராணனைக் கேட்டாலும் கொடுத்துவிடுவதென்று விரதம் பூண்டிருக்கும் அடியேனுக்கு தேவரீர் இப்படிக் கட்டளை இடலாகாது. 'இல்லை' என்ற சொல் என் சத்துருவினிடமும் சொல்லக்கூடாது. சகல போகமும் யோகமும் உடைய இந்திரன் ''தேஹி'' என்று என்னை இரந்து கேட்க, நான் 'இல்லை' என்பதும் ஒரு சொல்லோ? என் உயிரும், இவ்வுலகமும் மற்ற யாவும் போகும்; கீர்த்திமட்டும் அழியாமல் நிலைத்து நிற்கும். நீர் மேல் குமிழி இந்த பூதஉடல். நிலையில்லா வாழ்க்கை; சகடக்காற் செல்வம். நாயும், நரியும், பேயும், பிணியும், மண்ணும் தங்களுடையதென்று காத்துக்கொண்டிருக்க, சூத்திரப் பதுமை போல நடமாடிவரும் பொய்யான தேகத்தை மெய்யென்று நம்பி வீணாக அழிவதைப்பார்க்கிலும், கேட்டவர்களுக்கு இல்லை என்னாது அளிப்பதே களிப்பாகும். தந்தையே! எனக்கு இந்த வரம்மாத்திரம் அளிக்கவேண்டும்'' என்றான்.

சூரியன், 'விதியை அனுசரிக்கும் மதி' என்று நினைத்து புத்திரனின் உத்தம குணத்திற்கு மகிழ்ந்து, ''அப்பா, கர்ணா! தனக்கு மிஞ்சித்தான் தருமமென்றும், சுவரைவைத்துக் கொண்டுதான் சித்திரம் எழுதவேண்டுமென்றும், உலகமொழிகளுண்டு. இவைகளை யோசித்தாவது, உன் உயிருக்கு அழிவுவரவொட்டாத கவசகுண்டலத்தைக் கொடுக்காமல் நிறுத்துவையாகில் திரிமூர்த்தியும், ஒரு மூர்த்தியாக வந்தா

லும் உனக்குப் பயமில்லை. தவறிக்கொடுத்தால், இறந்தா யென்பதற்குச் சந்தேகமில்லை. 'பெற்ற மனம் பித்து, பிள்ளை மனம் கல்லு' என்பது நமக்கு பொருந்தியிருக்கிறது" என்றார்.

கர்ணன் "தந்தையே! வினைப்பயனை வென்றவரைக்கண்டதுண்டோ?...'இல்லை' என்பவரிடம் செல்வம் நில்லாது. வேண்டிய செல்வங்களைக் கொடுப்பதற்கு, துரியோதன ராஜன் காத்துக்கொண்டிருக்கிறான். என்னுயிரையும் அவனுக்கே கைம்மாறாகக் கொடுக்கவிரும்பி இருக்கிறேன். இந்திரனே வந்து இரப்பானாகில் 'இல்லை' என்னத் தக்கதோ?" என்றான்.

"குழந்தாய்! உன்மனம் இப்படி இருந்தால், நான் சொல்லியும் இன்னும்எவர்கள்சொல்லியும் பயனில்லை. ஆனால், அந்த இந்திரன் இதோ வரப்போகிறான். அவனுக்கு உன் இஷ்டப்படி கொடுத்தபிறகு, அவனிடத்தில் வேல் ஒன்று இருக்கிறது. அதையாகிலும் பெற்றுக்கொள்: பிறகு உன் இஷ்டம்" என்றுகூறி, சூரியபகவான் மறைந்துவிட்டார்.

கர்ணன் நித்திய விதிகளை முடித்துக்கொண்டு, தருமங்களைச் செய்தவாறு, தேவந்திரனை எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். பிராம்மணர்கள், ரிஷிகள், தரித்திரர்கள், பிணியாளர்கள் முதலிய எல்லோருக்கும் தானம் வழங்கிவிட்டு 'இன்னும் யாராவதுண்டோ?' என்று விசாரிக்கும் சமயம் வில்லைப்போல் வளைந்த உடலும், நடுங்கிய கால்களும், ஓய்ந்த நடையும், கந்தை உடுத்திய அரையும், நுரையைப் போன்ற நரையும், கையில் தடியுமாக பதினைந்து நாழிகை வெய்யிலில் நடக்கமுடியாமல் தள்ளாடிக்கொண்டு வயோதிகத்தின் சிகரத்தை எட்டிப் பிடித்தவரைப்போன்ற மாய வேஷத்துடன் வரும் இந்திரன், "கர்ணமகாராஜனின் மாளிகை எங்கே? தானவாசலெங்கே?" என்று பலரையும் கேட்டுக்கொண்டே வந்து, கோட்டைவாசலில் நுழையும்போது, காவலாளிகள், "ஐயா! இன்று, தானம் கொடுத்தாகிவிட்டது. நாளை வாரும். போம்" என்று சொல்லக்கேட்டு, ஏக்கமுற்று நிற்கும் பிராம்மணனைக் கண்ட கர்ணன், எதிர்கொண்டோடி வந்து வணங்கினான். கை கொடுத்து அழைத்துப்போய் ஆசனத்திலமர்த்தி, அர்க்கிய பாத்தியங்கொடுத்துச் சந்தன, அக்ஷதை, தூபதீபங்களால் பூஜித்தான். கர்ணனை ஆசீர்வதித்து "அப்பா! என்னுடைய ஆசை முன்னுக்கிழுக்க, கிழத்தனமான தள்ளாமை பின்னுக்கிழுக்க, தட்டுத்தடுமாறி வந்து சேருவதற்கு இவ்வளவு நேரமாகிவிட்டது" என்றான்.

கர்ணன் குலுங்க நகைத்து, "பிராமணோத்தமரே! தேவரீர் காலந்தப்பி வந்தோமென்று கவலைப்படவேண்டாம். மனோபீஷ்டப்படி கேளும்; தருகிறேன்" என்றான்.

தேவேந்திரனாகிய மறையவன் மகிழ்ந்து, "கற்பக விருக்ஷத்தைப்போலக் கேட்டதை எல்லாம் கொடுப்பாயா?" என்றான், புன்சிரிப்புடன்.

கவசகுண்டலன், துடிதுடித்து "ஸ்வாமீ! என்னிடத்தி லுள்ளவைகளில், எந்தப்பொருளை எவர்கள் கேட்டபோதிலும் மறுக்காது கொடுப்பதாகத் துவஜம்கட்டி இருக்கிறேன். அப்படிக் கொடாமல் மாறுவேனாகில் யுத்தத்தில், புறமுதுகு காட்டி ஓடிய பாவிகளைப்போல் துர்க்கதி அடையக்கடவேன்; தேவரீர் தடையின்றிக் கேட்கலாம்" என்றான்.

வச்சிராயுதன், "ஆனால், உன் உடலுடன் பிறந்திருக்கும் கவசகுண்டலங்களைக் கொடு" என்றான். கர்ணராஜன் அக மகிழ்ந்து கொடுக்கப்போகையில்,

"கொடையாளனே! வந்திருப்பவன் இந்திரன் உபேந் திரனாகிய கிருஷ்ணனுடைய தூண்டுதலால் அர்ஜுனனுக்குச் சகாயமாக உன் கவசகுண்டலங்களைப் பெறுவதற்கு பிராமண ரூபத்தில் வந்திருக்கிறான். இவ்விரண்டையும் கொடுப்பை யாகில் காண்டீபன் கணையால் இறந்துவிடுவாய். ஏமாந்து கொடுக்காதே" என்று அசரீரி பிறந்தது.

"கர்ணன் கவசகுண்டலங்களை மாயப் பிராமணனிடம் கொடுத்து பாதங்களில்விழுந்து,"ஐயனே! கற்பகவிருக்ஷத்துக் காவலனாகிய தேவரீரே வந்து கையிரந்து கேட்டதற்கு நானா இல்லை என்று மறுப்பவன்! நான்கொடுத்ததும் ஒரு பொருளோ?" என்றான்.

தேவேந்திரன் மகிழ்ச்சி அடைந்து, "இவனுடைய தியாகமே தியாகம்" என்று புகழ்ந்தான். மலர்மாரி பெய்ய, தேவதுந்துபி முழங்க, தேவந்திரன் சுயரூபத்தோடு தன் எதிரில் நிற்கக்கண்ட கர்ணன் அளவற்ற மகிழ்ச்சியடைந்து போற்றி வணங்கினான்.

உடனே இந்திரன் அவனை எடுத்தணைத்து, "கர்ண ராஜனே! உன் கருணை நிறைந்த மனத்திற்குமுன் நான் இளைத்தேன். அசரீரி தடுத்தும் அந்தமொழியைத் தடுத்துக் கொடுத்த தயாளனே! உனக்கு நான் என்ன கைம்மாறு செய் வது?" என்றுகூறி, தன்கையிலிருந்த மீளாத வேலாயுதத்தை எடுத்துக்கொடுத்து "கிரீடி தவிர மற்றவர்கள்மேல் இதை பிரயோகிப்பையாகில் தப்பாமல் கொல்லும்" என்று கூறி, வணக்கத்துடன் இருகரங்களினாலும் பெற்றுக்கொண்ட கர்ண னிடம் விடைபெற்றுக்கொண்டு மறைந்தான்.

அதே சமயம் துரியோதனாதியர்களுக்கு இடது கண் இடது புஜங்களும், பாண்டவர்களுக்கு வலது கண் வலது புஜங்களும் துடித்தன.

ஜகன்மோகினி	இந்தியா, ஸிலோன்.	பர்மா.	வெளிநாடு
தனிப் பிரதி	அணா 4.	0—4—6.	0—5—0.
வருடச் சந்தா	3—0—0.	3—8—0.	3-12—0.

மனச்சாட்சி

வை.மு.கோ. 95வது நாவல்

1

காலத்தின் கோலம்

"உலகம் உன்னை மதிக்கவேண்டுமானால் உலகத்தை முதலில் நீ நன்றாகத் தெரிந்துகொள்ளவேண்டும். அதோடு உன்னையே நீ நன்றாக அறிந்துகொள்ளவேண்டும்"—என்று எங்கப்பா அடிக்கடி சொல்லுவாராம். அதை அவருடைய

சினேகிதர் பரமசிவம் எனக்கு அடிக்கடி உபதேசம் செய்வார். அதன் உண்மை அப்போது தெரியவில்லை வாஸு!...இப்போதுதான் தெரிகிறது...என்று முடிப்பதற்குள் வாஸுதேவன் இடைமறித்து "மூர்த்தீ! நானும் நான்கு தினங்களாக உன்னைக் கேட்கவேண்டும் என்று எண்ணினேன். சந்தர்ப்பம் சரிப்படவில்லை. ஏன் நீ ஏதோமாதிரியாக இருக்கிறாயே! உன் பரீக்ஷை காலத்தில் இப்படிஇருந்தால் அதில் பாஸாகுமா? உனக்கு உடம்பு சரியில்லையா? அல்லது யாராவது ஏதாவது சொன்னார்களா?" என்று கேட்டான்.

கிருஷ்ணமூர்த்தி:—பரீக்ஷையாவது பாஸாவது! மனத்தில் நிம்மதியில்லாத பிழைப்பு என்ன பிழைப்பு? என் சரித்திரமெல்லாந்தான் உனக்குத் தெரியுமே. என் தாயார் இறந்த பிறகு தகப்பனார் பராமரிப்பில் எப்படியோ கவலை தெரியாமல் வாழ்ந்துவிட்டேன். அவருக்குப் பிறகு மூத்த சகோதரி தன்னிடம் கொண்டுவைத்துக்கொண்டாள். நான் பட்டபாடு போதும் போதும் என்று ஆய்விட்டது. அக்காவின் புருஷனிடமும் அவருடைய சகோதரரிடமும அடியும் திட்டும் வாங்குவதைவிட என் தாயின் பிறந்தகத்தில் மாமாவிடம் உதைபடுவதே மேல் என்று தோன்றியதால் அங்கிருந்து இங்கு வந்துசேர்ந்தேன். இங்கோ, மாமியின் பிறந்தவீட்டாரிடமும் மாமியிடமும் நான் படும் அவஸ்தை சகிக்கமுடியவில்லை. எங்காவது கூலிவேலைகூடச் செய்து பிழைக்கலாம்; அதுவே கண்ணியமாயிருக்கும். இந்த சுற்றத்தாரிடம் இழிவும் இம்சையும்பட என்னால் முடியவில்லை. என்ன செய்வது என்றே தெரியவில்லையே...

வாஸு:—மூர்த்தீ! எது எப்படி இருப்பினும் பல்லைக் கடித்துக்கொண்டு உன் படிப்பை முடித்துவிடு. எங்கப்பாவிடம் நான் சொல்லி எங்காவது சிபார்சு செய்து உனக்கு வேலை பண்ணிவைக்கச் சொல்கிறேன். பொறுமையாயிரு... என்று சொல்கையில் உள்ளிருந்து மாமியின் குரல் பெரிய அதட்டலுடன்..."ஏண்டா மூர்த்தீ! உனக்கு புத்தியிருக்கிறதா இல்லையா? மணி 9 அடிக்கப்போகிறது; குழந்தைகளுக்குக் குளிப்பாட்டி ட்ரஸ்பண்ணி சாப்பிடவைத்துப் பள்ளிக்கூடத்திற்குக் கொண்டுவிட வேண்டாமா! எந்த தடியனிடம் பேசிக்கொண்டு காலத்தைக் கடத்துகிறாய்?" என்று பாணம் விடுவதுபோல் காதில்பட்டதும் வாஸுதேவன் ஓரே ஓட்டமாக ஓடிவிட்டான்.

மூர்த்தி வாயைத் திறக்காமல் உள்ளே சென்றான். இம்மாதிரியான சந்தர்ப்பம் மூர்த்திக்கு ஒன்றிரண்டல்ல. மாமா மிகவும் பணக்காரரும் இல்லை. தரித்திரரும் இல்லை. சுமாரான வருவாயுள்ள வக்கீல்தான். வருவாய்க்குமேல் செலவும் ஜம்பமும் பார்ப்பதற்கு மிக்க செல்வவந்தர்போல் வேஷம் போட்டுப் பெருமை பாராட்டும் சீமாட்டியை அவர் மணந்

திருப்பதால் அந்தஸ்திற்கு மீறிய ஆடம்பர வாழ்க்கையில் அகமகிழ்கிருர்கள்.

மாமியின் தம்பியும் இங்கேயே படிப்பதால் தம்பிக்கு ஒரு நியாயம். நாத்தனுர் மகனுக்கு ஒரு நியாயம் என்ற நிலைமையில் தர்பார் நடக்கிறது. இவர்கள் வீட்டு சமையல்கார காமாக்ஷிக்கு யார் யாருக்கு எப்படி எல்லாம் பரிமாறவேண்டும், காப்பி டிப்பன் கொடுக்கவேண்டும் என்கிற திட்டமிட்டிருக்கிருர்கள். அதன்படியே அவள் செய்துவந்தாள். எனினும் தண்ணீரை நிறைய ஊற்றிக் காப்பி என்கிற ஒரு தண்ணீரை மூர்த்திக்குக் கொடுக்கும்போது அவளுடைய கைகள் கூசும். இரண்டொரு நாள் அப்படிச் செய்தாள். தான் மிக்க ஏழையாயிருப்பதால் தன்னுடைய நிலைமையில் மூர்த்தியை வைத்துப்பார்க்கும்போது அவள் மனது மிகவும் தவித்துக் குத்திக்காட்டியது. வீட்டு எஜமானிக்குத் தெரியாமல் மூர்த்திக்குச் சகலமும் மற்றவர்களுக்குக் கொடுப்பதுபோலவே கொடுத்துவந்தாள்.

மனது கலங்கித்தவிக்கும் நிலைமையில் தனக்குப் பரீக்ஷையில் என்னவாகுமோஎன்கிற பயமே மூர்த்தியை வதைத்தது. ஆனுல், ரக்ஷகனின் கருணை—மறைந்துகாக்கும் ரகஸியம் யாருக்குத் தெரியும்? அதனுல் மூர்த்தி எப்படியோ பாஸாகிவிட்டான். மாமி, தன் மூத்தமகனும் தம்பியும் தோல்வியடைந்துவிட்ட ஆத்திரத்தில் இன்னமும் அவனை வைத்துக்கொள்ள ப்ரியமின்றி எத்தனை தூரந்தான் உபத்திரவம் செய்யமுடியுமோ அப்படிச் செய்து வருத்தத் தொடங்கினுள். தாய் தந்தையற்றப் பரதேசி என்னசெய்வான் பாவம்! இம்மாதிரி இவர்களிடம் துன்பப்பட்டு வாழ்வதைவிடத் தற்கொலைபுரிந்துகொண்டு சாகலாமாஎன்றும் தோன்றிவிட்டது.

தன்னுடன் பிறந்த சகோதரிகள் மூவர் இருந்தும் என்ன ப்ரயோஜனம்? ஒருத்தியிடம் அனுபவம் கண்டாயிற்று. மற்ற இருவரையும் விசாரித்துப் பார்த்தால் தெரிகிறது. எதையும் ஆய்ந்தோய்ந்து பாராமல் அவசரப்பட்டு விடக்கூடாது என்று தனக்குத் தானே சமாதானப்படுத்திக்கொண்டு உடனே இரண்டுசகோதரிகளுக்கும் கடிதம் எழுதிப் போட்டுவிட்டு தன் விதியை எண்ணி வேலை செய்யக் கிளம்பினுன். "திக்கற்றவர்களுக்குத் தெய்வமே துணை" என்கிற பழமொழியை அடிக்கடி எண்ணி ஆறுதலடைவதையே தனக்குத் துணையாகக் கொண்டான்.

காலை போஜனத்திற்கு முன்பு தன் மாமாவின் பிள்ளைக் குழந்தைகளைக் குளிப்பாட்டி உடை அணிவித்துச் சாப்பாடு போட்டு பலகைபுத்தகங்களைத் தேடி எடுத்து அவர்களைப் பள்ளிக்கூடத்தில் கொண்டுவிட்டபிறகுதான் அவன் அவசர அவசரமாகச் சாப்பிட்டுவிட்டு பள்ளிக்கூடம் போகவேண்டும். அனேக தினங்களில் அவன் தாமதமாக வருவதைக்கண்டு

வாத்தியார் தண்டிப்பதும் உண்டு. எந்தவிதமான துன்பத்தை அனுபவித்தாலும் பொறுத்துக்கொண்டு S. S. L. C. வரையிலாவது படித்துவிட்டால் எங்காவது குமஸ்தாவேலையாவது கிடைக்கும்...எப்படியாயினும் பிழைத்துக்கொள்ளலாம்என்கிற நம்பிக்கையினால் ஓட்டிக்கொண்டிருந்தான். சின்னஞ்சிறு உள்ளத்திலும் கவலையும் ஏக்கமும்தான் குடிகொண்டிருந்தது.

2

பணமற்றால் பிணமே!

மூர்த்தி பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பிவருகையில் அவனுக்குத் தலைவலியும் ஜுரமும் அதிகமாக வந்துவிட்டது. அதனால் தள்ளாடித் தடுமாறிக்கொண்டு வீட்டிற்குவந்தான். வாசல் நடையில் வரும்போதே உள்ளே மாமாவும் மாமியும் இரையும் சப்தம் கேட்டு, தன்னுடைய உடம்பு அசுகத்தையும் கவனிக்காமல் அவருடன் ஒண்டிக்கொண்டு நின்றான்.

மாமா:—என்னை என்ன பண்ணச் சொல்கிறாய்? இந்த மாதம் இதுவரையில் ஒரு பெரிய கேஸ்கூட வரவில்லை உன் தம்பியின் பரீக்ஷைக்கு வாய்வேறேபா? தோல்வியாகிவிட்டதால் இதுவரையில் இலவசச்சம்பளம் கொடுத்துக்கொண்டிருந்தவர்கள் சுழித்துவிட்டார்கள். டபாஸ்செய்த ப்ரகஸ்பதிக்கு இனி யார் கட்டித்துலைப்பது?

என்று முடிப்பதற்குள் அந்தம்மாளுக்குக் கோபம் வந்துவிட்டது. "இதோ பாருங்கள்! அனாவசியமாய் இப்படி எல்லாம் சொல்லவேண்டாம். இதுவரையில் அவன் ஒருதரம்கூட தோல்வி என்பதே கண்டறிந்ததில்லை. இந்த தரித்திரம் பிடித்த மூர்த்தி இங்கு வந்துசேர்ந்தபிறகு அவனுடன் சேர்ந்து கெட்டுக் குட்டிச்சுவராகிவிட்டான். அதனால்தான் இந்த கதியாயிற்று. அனாவச்யமாய்ப் பேசவேண்டாம். என் சங்கிலியை வித்து அவனுக்கு நான் சம்பளம் கட்டுகிறேன். அந்த சங்கலி நீங்கள் போட்டதில்லை. எங்கம்மா கொடுத்தது தான். என்னுடன் கூடப்பிறந்த தோஷத்திற்கு நான் அவனைக் கைவிடமாட்டேன். இதோ உங்கள் மூர்த்தியின் உடன் பிறந்தவர்கள் அவனைச் சந்தியில்விட்டு வேடிக்கைபார்த்து என் ப்ராணனை வாங்குகிறமாதிரி நான் செய்யவில்லை......

"சரி! சரி! திக்கில்லாத பையனுக்கு நீ என்ன ப்ரமாதமாய்ச் செய்துவிடுகிறாய்? ஒருவாய் சோறு போடுவதற்கு அவன் உழைக்கும் உழைப்பு"...என்று முடிப்பதற்குள் "ஐயையோ!...அவன் உழைக்கிறானா? தண்டசோத்துத் தடிராமனாய் மூன்றுவேளையும் முக்காப்படி முத்தன்போல் தின்றுவிட்டு உலக்கைபோல் வளர்ந்து திரிகிறான். அவனா வேலை

செய்கிறன்? இதென்ன அக்ரமம்! வேலைசெய்ய பவிஷு இருப்பவனானல் இப்படி மானங்கெட்டுப் பிறர்வீட்டிலிருக்கவே மாட்டான். ஓட்டலில் இட்டிலிக் கரைத்தோ, காப்பி எடுத்துக் கொடுத்தோ மானமாய் வயிறுவளர்க்கமாட்டானு!... நானும் தினம் பார்க்கிறேன்... இதுவேறு சொட்டுச்சொல்லா... நான் பண்ணபாவம் இது! என் தலையெழுத்து!" என்று அழுதாள்.

மாமா:—ஏண்டி வீண் ஆகாத்யம் செய்கிறய்? திக்கில்லாத பரதேசி என்று நம் காலில் விழுந்தவனை அடித்துத் துரத்தச் சொல்கிறயா? என்னமோ நாயிக்குப்போடுவது போல் அத்தனைசோத்தைப்போடுவது உனக்கென்ன கஷ்டம்? ...அந்தப் பையனும் புத்தியில்லாதவனயிருக்கிறன். ஏதடா! கையில்கிடைத்த வேலையைச்செய்து உபகாரம் செய்யலாமே என்று தோன்றவில்லே... என்று அசட்டுப்பிசட்டுத்தனமாய் முதலில் தான் சொல்லியதற்கு நேர்மாறாக மனைவியின் முகத்திற்காகப் பயந்துகொண்டு வார்த்தையை, விஷயத்தையே மாற்றிவிட்டார்.

கடையில் ஓட்டிக்கொண்டு நிற்கும் மூர்த்தி மாமனும் மாமியும் தன்வரையில் எத்தகைய மதிப்பு வைத்திருக்கிறர்கள் என்பதை ஒரு நொடியிலறிந்துகொண்டான். அவனது நிலைமை நிற்கமுடியாமல்போனதால் வாசல்புறமே உள்ள ரூமில் படுத்துவிட்டான். மாமாவின் மனதாவது தன்னிடம் அன்புடன் அனுகூலமாயிருக்கும் என்று எண்ணினன். அதிலும் ஏமாற்றத்தை இன்று நேரில் கண்டபிறகு உள்ளம் உடைந்து மனது அளிந்த புண்ணுகிவிட்டது.

கண்ணீர் பெருகப் படுத்திருந்தான். சற்றுநேரத்திற்கெல்லாம் மாமியின் சினேகிதையொருத்தி வந்து ஏதேதோ பேசிக்கொண்டிருந்தவள், தன்மகளைமூர்த்திக்கு மணம்செய்து வைக்கமுடியுமா என்று ஆரம்பித்தாள். "போதுமே! போயும் போயும் அந்த தரித்திர மூதேவிக்கா கொடுக்க நீ ஆசைப் படுகிறய்? ஏதோ சிகப்புத்தோலைப் போட்டுக்கொண்டு ஆள் நல்ல வாட்டசாட்டமாயிருக்கிறனே என்று மயங்கிவிடாதே. அவனுக்கு அறிவு என்கிற காலமே பூஜ்யம். அதோடு அவன் மிகவும் ரோகப் பிண்டமானவன். அவா அம்மாவுக்கு இருமல் நோய்கண்டுதான் இறந்தாள். அவர்கள் பரம்பரையில் ஆரோக்யமே இல்லே. அப்படி இருக்குமானல் நான் என் தங்கையைக்கொடுக்க விரும்பமாட்டேனு? பொறுக்கி எடுத்து ஆளைத்தேடினயேம்மா... தூத்தூ... என்னமோ! சோத்துக்கில்லாமே இங்கேவந்து கிடக்கிறது. அதுகூட எனக்குச் சரிப்படவில்லே. இந்த சனியன் வந்தவேளை என் தம்பிக்கும் பிள்ளைக்கும் பரீக்ஷைபோய்விட்டது. கல்லுபோலிருந்த எங்கம்மாள்போய்விட்டாள்... இந்தகாலத்தில் வக்கீல்களின் சம்பாத்யந்தான் ஏற்கெனவேநன்ருகத் தெரிந்திருக்கிறது. அந்த வரும்படியில்கூட சூன்யமாகிவருகிறது. இத்தகைய தூ

த்ருஷ்டக்கட்டைக்கா நீ பெண்ணைக் கொடுக்கவந்தாய்! அம்புஜம், இதோபாரு! நீ என்னை ஆப்தசினேகிதை என்று எண்ணிக்கேட்டதால் சொல்கிறேன். இந்த மூதேவிக்குப் பெண்ணைக் கொடுப்பதைவிட உன் பெண்ணைப் பாழுங்கிணற்றில் தள்ளிவிடலாம். அல்லது கன்னிகையாகவே வைக்கலாம். கால்வைத்த இடமெல்லாம் கரிதானே.வேறுபதம் எதற்கு?''... என்று அழுத்தந்திருத்தமாகச் சொல்வதைக்கேட்டு மூர்த்தியின் மனது உடைந்து சுக்கலாகியது. நாயிக்கு ஒருவாய் சோறுபோடுவதுபோல் எனக்குப் போடுவதாக மாமாவே சொல்லும்போது இனி மாமிஇப்படிச் சொல்வதில் ஆச்சரியமென்ன இருக்கிறது? சீச்சீ! திக்கற்ற வாழ்வுகூட மனிதர்கள் வாழலாமா? இத்தனை அவமானத்தின் மத்தியில்—அவமரியாதையின் மத்தியில் நான் வயிறுவளர்ப்பதைவிட மாமி சொல்வதைப்போல் சமயல்வேலைக்குச் சென்றால் சாப்பாட்டைப்போட்டுக் கையில் பத்துரூபாய் கொடுப்பார்களல்லவா! அதைவிட்டு என்னபடிப்பும், பிழைப்பும் வேண்டிஇருக்கு?......என்று தனக்குள் மிகுந்த சலிப்பும் துக்கமும் அதீத எண்ணங்களும் தோன்றிய வேகத்தில் ஏற்கெனவே இருந்த ஜுரம் பின்னும் அதிகமாகிவிட்டது. தன் பேருக்கு வந்திருந்த இரண்டு கவர்களை மாமாவின் சிறியபையன் கொண்டுவந்து கொடுத்தான். அந்த தாங்கமுடியாத நிலைமையில் அதை மெல்லப் படிக்கத் தொடங்கினான்.

"சிரஞ்சீவி மூர்த்திக்கு ஆசீர்வாதம். உபயகுசலம்.

உன் கடிதம் கிடைத்தது. அதற்கென்ன பதில் எழுதுவது என்று யோசித்துயோசித்து என்மூளையே கலங்குகிறது.'பொறுத்தார் பூமியாள்வார்' என்று பழமொழி. அதை மறக்காமல் எத்தகைய கஷ்டமோ, நிஷ்டூரமோ பட்டுக்கொண்டுதான் இருக்க வேண்டும். இங்கு எங்களுக்குமட்டும் குபேரசம்பத்து கொள்ளை போகிறதென்று நினைத்து அசட்டுத்தனமாய் நீ எழுதியிருப்பதைக்கண்டு என் கணவர் கோபப்படுகிறார். இனி இம்மாதிரி கடிதம் எழுதாதே எப்படியோ காலத்தைத் தள்ளிப் படித்துவிடு. நான் உன்னைப்பற்றி உன் அத்திம்பேரிடம் சொல்வதற்கு எனக்கென்ன மூஞ்சி இருக்கிறது? பிறந்தகத்திலிருந்து ஒரு செப்புக்காசு மஞ்சள் காணிக்கு வழி உண்டா? அல்லது ஏதோ கார்த்தி கனுவு முதலிய பண்டிகைகளுக்காவது காலணா மஞ்சள் குங்குமம் வாங்கி யனுப்புகிறாயா? இந்த நிலைமையில் நான் சொல்ல வெட்கப்படுகிறேன். ஆகையால் இனி கடிதமே எழுதாதே. மாமாவிடம் சமத்தாயிரு.

உன் சகோதரி.

பாலம்மாள்"

கடிதத்தைப் படிக்கவிடாமல் கண்ணீர் மறைத்தது. எனினும் அதைப் படித்து முடித்துப் பின் மற்றொன்றை எடுத்தான்.

"...உன்னால் காலணவுக்கு உபகாரம் ஒன்றுமில்லாவிடினும் அபகாரத்திற்குக் குறைவில்லை. உன் கடிதத்தைக் கண்டதும்

என் கணவரிடம் நான் பட்ட உதையும் திட்டும் ஏழு தலைமுறைக்கும் காணும். அனுவசியமான சண்டை உண்டாகி வீடு திமிர் தண்டப்படுகிறது. தரித்திர ஜாதகத்துடன் பிறந்துவிட்டு சுகமாக வாழ எண்ணினால் எப்படிமுடியும்? நீ சுகப்படப் பிறந்திருந்தால் நம் பெற்றோர்களை உருட்டி இருப்பாயா? பிச்சைஎடுத்தாவது அவர்கள் உனக்குப் போட்டு கடனைத் துலைப்பார்கள். அந்த மாதிரி பிறர் செய்வார்களா? முந்தாநாள்தான் என் குழந்தைக்குப் பிறந்தநாள் வந்தது. "அம்மான் ஆசீர்வாதம்" என்று சொல்லும்போது நாலு அக்ஷதையை எடுத்துப்போட்டார்கள். எனக்கு வந்த துக்கமும் வெட்கமும் சொல்லிமுடியாது. 'இத்தகையவனுக்கு இங்கு இடம் கொடுத்து ஆதரிப்பதாவது?...என்று' என் புக்ககத்தினர் திட்டுவது சகஜந்தானே! இனி இம்மாதிரி எந்த விதமான அசட்டுக் கடிதமும் எழுதாதே. மாமாவீட்டில் அவர்கள் இஷ்டப்படி சமத்தாய் நடந்துகொள்ளு. அங்கும் ஏதாவது உளறி வைத்து விரோதத்தை வரவழைக்காதே.

இப்படிக்கு,
லோகாம்பாள்"

இரண்டுகடிதங்களும் இரண்டு கண்கள்போல் தோன்றியதால் பத்திரமாக எடுத்துவைத்தான். எதிர்பார்த்தபடியே கடிதம் இருந்ததால் இதைப்பற்றி வியப்போ, அதிர்ச்சியோ, துக்கமோ ஒன்றும் தோன்றாமல் மனம் கல்லாய்முறிந்துபோன நிலைமையில் மரத்துவிட்டது. எதுவுமே தோன்றாமல் கண்ணீர் வழியப் படுத்திருக்கையில் தற்செயலாக சமயல்காரி அந்த இடத்திற்கு வந்தாள். மூர்த்தியின் நிலைமையைப் பார்த்து திடுக்கிட்டவளாய் அருகில்வந்து "மூர்த்தி! என்னப்பா உடம்பு? ஏன் அழுகிறாய்?" என்று அன்புடன் கேட்டுத் தொட்டுப்பார்த்து பயந்தாள்.

பாவம்! அவனுடைய பெற்றோர் மறைந்தபிறகு இத்தனை அன்பாய் அவனைத் தொட்டுப்பார்த்தவர்களே கிடையாது. ஆதலால் இந்த ப்ரீதிமொழிகளைக் கேட்டதும் எங்குமில்லாத துக்கம் பீறிக்கொண்டு வந்துவிட்டது. உடம்பு நெருப்பாய்க் காய்வதைக்கண்ட சமையல்கார காமாக்ஷிக்குப் பரிதாபமும் பயமும்கூட உண்டாகியது. "ஏண்டாப்பா மூர்த்தி! நீ எப்போதுவந்துவிட்டாய்? எப்போதுமுதல் ஜுரம் காய்கிறது? ஏதாவது மருந்து சாப்பிட்டாயா?" என்றாள்.

மூர்த்தியினால் பதிலே பேசமுடியவில்லை. அவனுடைய துக்கம் தொண்டையை அடைத்துவிட்டதால் சிறுபையனைப் போல் விசும்பிவிசும்பி அழுகிறான்.

இந்தபரிதாபநிலையைக்கண்ட காமாக்ஷி தானே மிளகுகஷாயத்தைப் போட்டுக்கொண்டுவந்து தெரியாமல் கொடுத்தாள். சற்றுநேரங்கழித்து காப்பியும் ரகஸியமாகக் கொண்டுவந்து கொடுத்தாள். மூர்த்திக்குக் கண்ணை திறக்கமுடியாத மண்டை இடியும் அதிகமான ஜுரமும் ஏறிக்கொண்டே போவதால் எழுந்திருக்கமுடியாமல் படுத்துவிட்டான். அவ

னுக்கு ஒன்றுமே தோன்றுமல் குழம்பும் நிலைமையில் தான் செய்யவேண்டிய காரியங்களைச் செய்யாது படுத்திருந்தால் மாமி திட்டப்போகிறுளே என்று பயம்வேறு நடுக்குகிறது. ஆனால், எழுந்திருக்கவேமுடியாதுபோனதால் பயத்துடன் படுத்திருக்கையில் உடல்வேறு நடுங்குகிறது. வேதனையின் மிகுதியால் கண் கலங்குவதைத்தவிர வேறு ஒன்றுமே தோன்றுது உள்ளம் துடித்தது.

3

த்ரிசங்குச் சொர்க்கமும் திக்கற்ற நிலைமையும்

மூர்த்தியின் நிலைமையை அறிந்த காமாக்ஷியே அவன் செய்யவேண்டிய காரியங்களைச் செய்துவருவதைக் கண்ட மாமி...''இதென்ன பரிசல்? ஏன் அந்த தடியன் இன்னும் பெரிய உத்யோகத்திலிருந்து வரவில்லையா! நீ எதற்காகச் செய்கிறுய்?'' என்று கர்ஜித்தாள்.

காமாக்ஷி பயந்து நடுங்கியவாறு, ''மாமி! அவனுக்கு அசாத்ய ஜுரம்காய்கிறது. பாவம்! எழுந்திருக்கவேமுடியவில்லை. அதனல் நான் செய்கிறேன்'' என்றுள். ''என்ன... என்ன! ஜுரமா! காலையில் ஒன்றுமில்லை. ஒரு இலை சோற்றைத் தின்றுவிட்டுப் போனுனே! இதற்குள் ஜுரம் வந்தார். விட்டதா என்ன? சாகஸம்வேறு இருவரும் சேர்ந்து செய்கிறீர்களா?'' என்று கூறியவாறு மூர்த்தி படுத்துள்ள இடத்திற்குப்போய்ப் பார்த்தாள். உடம்பு கிடுகிடென்று நடுங்குகிறது. அனல் வெளியில் வீச ஜுரம் காய்வதைக்கண்டு ஒரு வினுடி நின்றுள். அடுத்த க்ஷணமே வெளியில் வந்தாள்.

இதற்குள் அவள் கணவரும் கோர்ட்டிலிருந்து வந்து அவரிடம் ''நான் அப்போதே சொன்னேனே! கேட்டீர்களா! பகவான் நமக்குக் குறைவில்லாதபடி சந்தானத்தை நஞ்சானும் குஞ்சானுமாய் ஏராளமாகக் கொடுத்திருக்கிறுன். அதற்கேற்ற சம்பத்தைத்தான் காணவில்லை. ஊரெல்லாம் எங்கு பார்த்தாலும் டைபாயிடும் அம்மையுமாக இருக்கிறது. கண்டஇடத்திற்கும் போய் அலையாதேடாப்பா! ஏதாவது வந்துவிட்டால் கஷ்டம் என்று முட்டிக்கொண்டேன். நான் எதைச்சொன்னுலும் கேட்கக்கூடாதென்று உங்கள் மருமான் சங்கல்பம் செய்துகொண்டிருக்கிறுனே! ஊரெல்லாம் சுத்துவதால் எந்த இடத்துத் தொத்துநோயோ ஒட்டிக்கொண்டு வந்துவிட்டான். ஜுரம் நெருப்பாய்க்காய்கிறதாம். சமயல்காரி விழுந்துவிழுந்து பரிந்து உபசாரம் செய்கிறுள். படுத்துக் கிடக்கிறுன்.

மாமா:—அடாடா! ஜுரமா வந்திருக்கிறது? பாவம்! இன்று காலையிலேயே பார்த்தேன். பையன் ஒரு மாதிரியாகத் தான் இருந்தான். ஏதாவது மருந்து கொடுத்தாயா?

மாமி:—ஆமாம்! சவரணையாய் வந்து, மாமி ஜுரமடிக்கிறது, என்று சொன்னேனேல்லியோ! இந்த அழகுக்கு நான் என்ன மருந்தைக் கொடுப்பதாம். இதோ பாருங்கள், அவன் கண்ணையும் முகத்தையும் பார்த்தால் பயமாயிருக்கிறது. அது டைபாயிடாக இருக்குமோ! வைசூரியே தான் வருமோ! இங்கு வைத்துக்கொண்டு கஷ்டப்படவும், பிறகு மற்றவர்களுக்கு வந்து உபத்திரவத்தை விலைக்கு வாங்கவும் நான் ப்ரியப்படவில்லை. நீங்கள் முதலில் அவனை ஆஸ்பத்ரியில் கொண்டு விட்டுவிட்டு மறுகாரியம் பாருங்கள். இங்கு வைக்க வேண்டாம்...என்று மிக்க அழுத்தமாயும் அலக்ஷியமாயும் சொன்னாள்.

மாமா:—என்ன ஆர்ப்பாட்டம் செய்கிறாய்! ஜுரம் என்று படுக்கும்போதே இப்படி அபசகுனிமா திரிப்பேசாதே. ஏதோ இரண்டு நாட்கள் பார்க்கலாமே. பிறகு கொண்டுவிட்டால் போகிறது. தற்காலம் சில ஆஸ்பத்ரிகளில் பணம் கட்டிச்சலுகையுடன் இருப்பவர்களுக்கே சரியானபடிகவனிப்பு போதவில்லை என்று புகார்கிளம்புகிறது. இவனை அனாதையைப்போல் கொண்டுவிட்டு வேடிக்கை பார்க்க என்மனம் சகிக்காது. நீ வேண்டுமானால் அவனிடம் போகாதே. உன் குழந்தைகளை அண்டவிடாது தூர வைத்துக்கொள்ளு.

மாமி:—வெகு அழகாகத்தான் பேசுகிறீர்கள். குழந்தைகளைக் கட்டுப்படுத்துவதாம். நான் போகாதிருப்பதாம். இதென்ன வேடிக்கைக் கூத்து? குழந்தைகளைக் கட்டுப்படுத்தினால் நிற்குமா! அதெல்லாம் முடியாது. முதலிலேயே ஜாக்ரதையாக இருந்தால் எதற்கும் நல்லதுதானே! இவனைப்போல் கோடானுகோடி ஜனங்கள் அங்கிருக்கிறார்கள் அவர்களை எல்லாம் கவனிக்காமல்தான் விட்டுவிடுகிறார்களா! அதுபோல் இவனுக்கும் நடக்கட்டுமே. வீண்விதண்டாவாதம் பேசவேண்டாம். பத்திரிகைகளைப் பிரித்தால் இதே பயங்கரச் செய்திதான் தாண்டவமாடுகிறது. நான் ஏற்கெனவே பயந்துகொண்டிருக்கிறேன். இந்தப் புண்யவான் படுத்தும் காட்டிவிட்டபிறகு இனி என்னால் பொறுக்கமுடியாது. உடனே கொண்டு விட்டுவிட்டு மறுகாரியம் செய்கிறீர்களா! அல்லது நான் அதைச் செய்யட்டுமா?...என்று பத்ரகாளியைப்போல் கர்ஜித்தாள்.

த்ருசங்குசொர்க்கம் என்று சொல்வதுண்டு. இத்தகைய இரண்டாங்கெட்டான் வாழ்க்கைவாழும் மனிதர்களிடந்தான் அதைக்காணமுடிகிறது. மனைவியை எதிர்த்துக்கொள்ளவும் முடியவில்லை. கேவலம் நிர்த்தாக்ஷிண்யமாய் பரதேசிப் பையனைக் கொண்டு விட்டுவிடவும் மனம் துணியவில்லை. இரண்டுக்கும் தைரியமற்ற நிலைமையில் தவிப்பவர்களின்

கதிக்கு த்ருசங்குச் சொர்க்கமென்று சொல்லாமல் வேறு எப்படி முடிவு கட்டுவது? அவரையும் அறியாது சற்று தைரியத்துடன் "சரி சரி! ஒன்றுமில்லாததற்கெல்லாம் வீண் ஆர்ப்பாட்டம் செய்யாதே! இன்னும் இரண்டு நாட்கள் ஆகட்டும் பார்க்கலாம்" என்று சொல்லியவாறு மூர்த்தி படுத்திருக்கும் இடத்திற்கு வந்தார்.

அனல் என்றால் மிகையாகாது—அத்தகைய கடுமையான ஜுரம் காய்வதால் அவனால் தாளமுடியாமல் "அப்பா! அம்மா!" என்று அலறுகிறான். சமயல்காரக் காமாக்ஷி பரிதாபத்துடன், தலைவலித்தைலம் தடவி தலையைப்பிடித்துக் கொண்டிருந்தாள். வீட்டு எஜமானர் அங்கு வந்ததைப்பார்த்ததும் திடுக்கிட்டுப் பயந்து எழுந்து விலகி நின்றாள்...இதைக் கண்ட மாமாவின்மனது அவரையறியாது உருகியது..."போக வேண்டாம். நீங்கள் தலையைப் பிடித்துவிடுங்கள். உம். பாவம். பரதேசிப்பயல், இவனுக்கு உடம்புக்கு எதற்கு வரவேண்டும்?" என்று கூறியபடியே தொட்டுப்பார்த்தார்.

மாமாவைப்பார்த்ததும் மூர்த்திக்குஎங்குமில்லாத துக்கம் வந்துவிட்டதால் ஒன்றுமே பேசாமல் தேம்பித்தேம்பி அழுது விட்டான். இதைக்கண்ட மாமா..."போடா அசடே! மனுஷ்யாள் என்று இருந்தால் ஜுரம் வராதா! நாளைக்கே சரியாகிவிடும். பயப்படாதேடா!"...என்று கூறியவாறு ஜுரத்திற்கான மருந்தைக் கொடுத்தார்.

அதைச்சாப்பிட்ட மூர்த்தி "மாமா! நான் எதற்கும் பயப்படவில்லை. என்னால் எல்லோருக்கும் கஷ்டம் வருகிறதே என்றுதான் வருத்தமாக இருக்கிறது. என்னுடைய வாழ்வு இந்த ஜுரத்தோடு முடிந்து என்னருமைத்தாயாரிடம் கடவுள் என்னைச்சேர்த்துவிட்டால் போதும்... என்றுதான் நான் வேண்டுகிறேன். நான் உலகில் வாழ கொஞ்சங்கூட விரும்பவில்லை மாமா!".என்றுகண்ணீர்பெருகச்சொல்வதைக் கேட்டு மாமாவின் மனமும் கலங்கிக்கண்ணீர் தளும்பிவிட்டது.

"பாவம்! திக்கற்றப்பரதேசி தனது சிறுமையான நிலைமையை எத்தனை தூரம் உணர்ந்திருக்கிறான். எவ்வளவு மனம் நொந்து புண்ணாயிருந்தால் இத்தகைய இளம்வயதில் இம்மாதிரி புத்திஉண்டாகும்? வாழ்க்கையில் வெறுப்பும் முடிவை எதிர்நோக்கும் அதீத எண்ணமும் உண்டாகும்?" என்று தனக்குள் அவரையும்மீறித் தோன்றி இதயத்தைக் துளாவிக் கலக்கியது

சமயல்காரியின் மனமும் உருகிக் கண்ணீர் உதிர்ந்தது. "மூர்த்தி! நீ உடம்பையும்மனத்தையும்அலட்டிக்கொள்ளாதே. பேசாமல் படுத்திரு. வீணாக அசட்டுத்தனமாய்ப்பேசாதே. வாழ்க்கையாவது. முடிவாவது? இதென்னபேச்சு?" என்று தைரியம் சொல்லிவிட்டு மாமா போய்விட்டார். ஆனால், அவர் மனத்தில்மட்டும் தன்மனைவி செய்யும் கொடுமையின் பலன்

இச்சின்னஞ்சிறு தளிர்போன்ற உள்ளத்தை எத்தனை தூரம் வாட்டிவதைத்து வைராக்யத்தைக் கொடுத்துவிட்டது என்ற உணர்ச்சி பரவிச் சற்று வருத்தியது.

உடனே தானே தன்மனைவியிடம் சொல்லாமல் டாக்டரை அழைத்துவந்து காட்டினர். "அதிகஜுரம் அடிப்பதால் ஜாக்ரதையாகப் பார்த்துக்கொள்ளவேண்டும். ஊசிபோட வேண்டும். மருந்திற்கு இத்தனைரூபாய் செலவாகும்" என்று சொல்வதைக் கேட்டுக்கொண்டேவந்த மாமிக்குக் கோபம் வந்துவிட்டது."டாக்டரையாவதுவீட்டிற்குஅழைக்கவாவது? இதென்ன தர்மசத்திரமா? அனாதைப்பரதேசிகளுக்கென்று தான் ஆஸ்பத்ரி கட்டியிருக்கையில் வீட்டில் என்ன உபசாரம் வேண்டிக்கிடக்கிறது?" என்று சமயல்காரியிடம் உரத்துக் கூறி, டாக்டர் காதில் விழும்படிச் செய்தாள்.

இந்த வார்த்தை டாக்டர் கவனிப்பதற்கு முன்பு மூர்த்தியின் காதில் விழுந்துவிட்டதும், ஏற்கெனவே கொதிக்கும் உள்ளம் பின்னும் துடிதுடித்தது...டாக்டர் முகமும் சுண்டிச் சுருங்கியது. ஏன்சார்! இவன் உங்கள் மகனல்லவா?...ஏழைப் பரதேசி என்பதால்...என்று கூறுவதைக்கேட்ட மாமி... "ஆமாம் டாக்டர்! ஏதோ நாதியற்ற பையன்; எங்கள் வீட்டில் சாப்பாடுபோட்டு வளர்க்கிறோம்...இவனை வீட்டில் வைத்துககொண்டால் ஒருவேளை இது அம்மை...டைபாயிடு ஏதாவதாகஇருந்தால் மற்றவர்களுக்கும்தொத்திக்கொண்டால் என்ன செய்வது? டாக்டர்! ஆஸ்பத்ரியில் கொண்டுவிடும்படி நீங்களே ஏற்பாடு செய்தால் தேவலை!"...என்று தானே முன்வந்து சற்றும் ஒளிவுமறைவுஇன்றிக் கூறினள்.

இதைக்கேட்ட டாக்டருக்கே மனது இளகிவிட்டது. "இப்படியும் உலகம் இருக்கிறதா?" என்று மிக்க வியப்புடன் எண்ணியவாறு..."அம்மணீ! நீங்கள் சொல்வதுபோல் எதுவாக இருப்பினும் இரண்டு தினங்கள் கழித்துத்தான் தெரியும். சாதாரண ஜுரமாயிருந்தால் நாளையே குறைந்துவிடும்.இன்றே ஆஸ்பத்ரிக்குப் போகவேண்டிய அவச்யமில்லை. இன்று நான் என் மருந்தில் ஊசிகுத்திவிட்டுப்போகிறேன். நீங்கள் பணங் கொடுக்கவேண்டாம். ஏழைப்பரதேசிக்கு வைத்யம் செய்த புண்ணியம் எனக்கும் இருக்கட்டும்." என்றுகூறித் தானே ஒரு ஊசிமருந்து ஏற்றிவிட்டு, காலணா பீஸ் வாங்கிக்கொள்ளாமல் மூர்த்தியைத் தட்டிக்கொடுத்து..."தம்பி! பயப்படாதே. நாளைக்குச் சரியாகிவிடும்" என்று தைரியங்கூறிச் சென்றார்.

"உம். என்னுடைய மனத்தவிப்பை இவர் என்ன அறிவார்? பாவம்! நானா பயப்படுகிறேன்? என்மீது கருணை கூர்ந்து பகவான் எனக்கு முடிவைக்கொடுத்தால் போதுமென்றல்லவா நான் ப்ரார்த்தனை செய்கிறேன்? என்னிலைமை அறியாத அவர் என்னசொல்லமுடியும்?" என்று தனக்குள்ளே எண்ணி வருந்தினன்...அடுத்த நிமிஷமே தன் விஷயமாக மாமாவும்

மாமியும் உள்ளே சண்டையிடுவது இவன் காதில் கேட்டதும் ஏற்கெனவே துடிக்கும் மனத்திற்குப் பின்னும் அதிர்ச்சி அதிகமாகியது.

4

கசந்தவாழ்வே கற்கண்டாகியது

விளையாட்டுப்போல் இரண்டுமாதகாலமும் ஓடிமறைந்து விட்டன. அஸ்துதேவதைபோல் அவன் மாமி முதலில் பயந்துகூறிய ப்ரகாரமே மூர்த்திக்கு மிகவும் கடுமையான டைபாயிடு ஜுரமே வந்து, அவன் பிழைத்தது மிகவும் ஆச்சரியமாகிவிட்டது. ஆஸ்பத்ரியில் அனாதைகளைவிடக் கேவலம் மோசமான நிலைமையில் கிடந்தும் கடவுள் கட்டப் பாறையினால் ஆயுளை எழுதியிருந்ததால்தான் இத்தகைய கொடிய நோய் கடுமையாக இருந்தும் பிழைத்துக்கொண்டான் என்பதை அந்த ஆஸ்பத்ரியிலுள்ள பலரும் பேசிக்கொண்டு வியந்தார்கள். ஆனால் மூர்த்தியின் உள்ளம், தான் பிழைத்துக்கொண்டதை வெறுத்தும் துக்கித்தும் கலங்குவதை யார் அறிவார்கள்? இத்தனை நாட்கள் இங்கு படுத்திருக்கையில் இவனுக்கு அனுதாபத்துடன் அன்பாகவந்து பார்த்தோ உதவிபுரிந்தோ ஒருவரும் செய்யாததைக்கண்டு ஆஸ்பத்ரி நர்ஸுகள்கூட வியப்புற்றார்கள்.

சரீரம் எலும்புக்கூடாகவும் வெளுத்தும் பார்ப்பதற்குப் பயங்கரமாயும் படுத்துள்ள மூர்த்திக்கு இத்தனை நாளையும் விட இன்று அழுகையபூகையாய் வந்து, கண்களே சிவந்து விட்டன. பாவம்! எதற்காக இப்படி அழுகிறான் என்று யாருக்குத் தெரியும்?

அதே ஆஸ்பத்ரியில் ஸ்பெஷல் வார்டில் படுத்து சொஸ்தமாகிய ஒரு பெரிய செல்வச்சீமான் ஆஸ்பத்ரியைச் சுற்றிப் பார்த்துப் பொழுதுபோக்குவது வழக்கம்; அவர் மூர்த்தியைப் பார்த்துப் பரிதாபப்பட்டுக்கொண்டே போவதுண்டு. அவர் வீட்டிற்குத் திரும்பிய பிறகும் தினமும் மாலையில் ஆஸ்பத்ரிக்கு விஜயம் செய்யலானார். அதேபோல் இன்று பார்க்கையில் மூர்த்தி மிகவும் வருத்தப்பட்டு அழுவதைக் கண்டு அருகில்நின்று "அப்பா! ஏன் அழுகிறாய்? மறுபடியும் உடம்பு ஏதாவது...என்று இழுத்தாப்போல் கேட்டார்.

மூர்த்தி:—(மெல்ல சமாளித்துக்கொண்டு)...சார் மறுபடியும் உடம்புக்கு வந்தால்கூட நான் சந்தோஷப்படுவேன். இன்று காலையில் பெரிய டாக்டர் இனி நீ வீட்டுக்குப் போகலாம் என்று சொல்லிவிட்டார். அதுமுதல் என் மனம் படும் பாடு என்னால் தாங்கமுடியாத துக்கந்தான் வருகிறது சார்!

பெரியவர்:—உன் வார்த்தையைக் கேட்க எனக்கு ஆச்சரியமாயிருக்கிறதே. நோயாளிகள், என்று வீட்டிற்குப்

போகச் சொல்வார்கள் என்று காத்திருப்பதை நான் பார்த்திருக்கிறேனேயன்றி அதற்காக அழுவார்களாப்பா? ஏன் உனக்கு வீட்டில் என்ன கஷ்டம்?

மூர்த்தி:—உம். வீட்டில் கஷ்டமாவது சார்! எனக்கு வீடு என்பது இருந்தால்தானே. நான் ஒவ்வொரு நிமிஷமும்



என் மறைவையே எதிர்பார்த்தேன். ஆனால், இந்த துரத் ருஷ்டப் பிண்டத்தை பகவான் விரும்பவில்லை. எமனுக்கும் என்னைப்பிடிக்கவில்லை சார்!...*தெய்வீகஒளி என்கிற கதையை ஒரு சமயம் நான் படித்தேன். அதில் ஒரு கைதி ஜெயிலை விட்டு விடுதலையாகும் அன்று "நான் ஏன் விடுதலையாக வேண்டும்? வெளியுலகில் இனி நமக்கென்னவேலை?" என்று புலம்பித் தவித்தான். இன்று அதே சிந்தனை அலை களில் என் மனது தவிக்கிறது. நான் வெளியில் போவது என்பதை நினைக்க என் மனம் வெதும்புகிறது சார். (தன் சரிதையைக்கூறி) இன்னிலைமையிலுள்ள நான் வேறு என்ன சார் செய்வேன்?—என்று தேம்பித்தேம்பி அழுதான்.

இதைக்கேட்ட அவர் மிகவும் பரிதாபத்துடன் கண்ணைத் துடைத்துக்கொண்டே...“அப்பா...உன் சரித்திரம் எனக்கு மிகவும் விசனமாக இருக்கிறது. நானே ஜாதியில் ஹரிஜன். நீ சொல்லும் உன்மாமா என்னுடைய வழக்கு ஒன்றில் எதிரித் தரப்பில் வாதாடிப் பொய்சாக்ஷிகளை ஜோடித்து எனக்குத் தோல்வியை உண்டாக்கியதால் அந்த மனுஷ்யனை நான் வெறுத்தேன். வழக்கை அப்பீலுக்குப்போடத் தீர்மானித்தும் இருக்கிறேன். இருப்பினும் நீ படும் சிறுமையைக்கண்டால் எனக்கு வருத்தமாயிருக்கிறது. இதோ பாரப்பா! என்னால் வேறு எத்தகைய உதவியும் செய்யமுடியாது. நானும் பெரிய குடும்பி. என்னுடைய இனத்தினர்களோ வெகுபேர்கள் ஏழை யாயிருப்பதால் அவர்களுக்கு உதவிபுரிவதற்கே போதவில்லை. நான் இங்குவந்த நாளாக உன்னைப் பார்க்கப்பார்க்க என் மனத்தில் என்னையறியாமல் ஒருபச்சாத்தாபம் உண்டாகிக் கொண்டிருந்தது. இன்று நீ புலம்புவதைப்பார்த்துச் சகிக் காமல்தான் கேட்டேன். என் மூத்தமகன் பெரிய சித்திர நிபுணன். அவன் சித்திர கலாசாலை ஒன்றுதனியாக நடத்து வதோடு பலபடங்கள் எழுதி மிகவும் கீர்த்தியும் புகழும் பெற் றிருக்கிறான். அவனிடம் நீ வந்து இனமாக அந்த கலையைப் பயின்றால் அதே துறையில் உனக்குப் பிழைக்க மார்க்கம் தேடித்தரச்செய்கிறேன். எப்படியிருப்பினும் நீ அந்த மனிதர்களிடம் பொறுமையாகஇருந்து காலத்தைக் கடத்து. அவர்களிடம் த்வேஷம்கொண்டுவிலகிவிடாதே. அவர்களிடமே இருந்து படிப்பும் படித்துக்கொண்டு இந்தக் கலையிலும் தேர்ச்சியடைந்துவா. இந்த ஒரு உபகாரம்தான் என்னால் செய்யமுடியும். பணத்தினால் ஒன்றும் செய்யமுடியவில்லை...

என்று அவர்சொல்வதைக்கேட்டு மூர்த்தியின் அத்தனை துக்கத்தையும் கிழித்துக்கொண்டு எங்கிருந்தோ ஒரு சந் தோஷம் குபீரென்று படர்ந்தது. சிறுபிராயம் முதல் இவனுக்கு பொம்மை எழுதுவதில் அலாதி ப்ரியம். எந்தெந்த கலையில் யார்யாருக்கு ருசியும் உணர்ச்சியும் அதிகரிக்

*தெய்வீக ஒளி—வை. மு. கோ. 75-வது நவீனம். ரூ. 2.

கின்றதோ அந்தந்த முறையில் பிள்ளைகளைப் பெற்றோர் பழக்கினால் கட்டாயம் சரியான பலனையடையலாம். மூர்த்தியின் விஷயத்தில் அத்தகைய பாக்கியத்திற்கு இடமே இல்லாததால் அவனுடைய ஆசைகள் சிறுசிறு காகிதங்களில் கோணல்மாணலான சித்திரங்களாக மாறி, கிழித்தெறியப் பட்டுவந்ததேயன்றி அதற்கு ஜீவனுடன் உயிர்கொடுக்க முடியவில்லை.

பள்ளிக்கூடத்தில் சித்திரப்பகுதியில் முதல் மார்க்குகள் வாங்குவதோடு த்ருப்தியடைந்துவந்தான். இப்போது இப் பெரியவரின் வார்த்தைகளைக்கேட்டதும் இவனுக்கு ஏதோ இருண்ட உலகத்தில் கிடந்தவனை ப்ரகாச உலகத்திற்குக் கொண்டுவந்ததுபோல் புத்துணர்ச்சி உண்டாகி அந்தப் பெரியவரின் கைகளைப் பிடித்துக்கொண்டு தனது உணர்ச்சியைக்கொட்டிப்பேசித் தன்சந்தோஷத்தைத் தெரிவித்தான். பெரியவரும் அவனுக்குத்தேறுதல் கூறித் தனது விலாஸத்தை எழுதிக்கொடுத்துவிட்டுச் சென்றார்.

உண்மையில் மூர்த்திக்குச் சற்றுமுன்பு இருந்த விசனத்திற்கு எல்லையே இல்லாதிருந்த நிலைமை மாறி தான் எதிர்பாராதவிதமாய் தான் வெகு நாட்களாகப்பேராவலுடன் எதிர்பார்த்த ஒரு ஆசையை பகவான் திடீரென்று நிறைவேற்றிய சந்தோஷத்தில் எங்கிருந்தோ ஒரு யானைபலம் உண்டாகிவிட்டதுபோன்ற உணர்ச்சி தோன்றியது. பகவான் ஒருவன் நம்பியவர்களுக்கு எப்போதும் உதவிபுரியக் காத்திருக்கும் பரம ரகஸிய தத்துவத்தை அச்சிறியஉள்ளத்தில் நம்பிக்கையுடன் ஆழமாகப் பதித்துக்கொண்டான். "தான் ப்ரபல சித்திரக்காரனிடம் சித்திரம் கற்கவேண்டும், தான் கற்பனையினால் மனத்தில் நினைக்கும் பலவிதமான சித்திரங்களையும் வரைந்து பெரும்புகழும் பணமும் கீர்த்தியும் சம்பாதித்துக்கொள்ள வேண்டும். தன்னுடைய கேவலமான அடிமை நிலைமை நீங்கி மனிதனைமனிதன் மதிக்கும்படியான சக்திபெற்று வாழ வேண்டும். பணம் சிரு என்று பறக்கும் தன் உடன்பிறந்த சகோதரிகளுக்கு, பணத்தால் உதவிபுரியவேண்டும்" என்று ஏதேதோ எண்ணங்களாகிய கோட்டைகளைக்கட்டி அந்தப் பேரின்பத்திலேயே திளைந்து பூரித்தான்.

உண்மையில் மூர்த்திக்கு புத்திதெரிந்த நாள் முதல் இந்த நிமிஷம் உண்டாகிய சந்தோஷ உணர்ச்சியை அவன் ஒருதரங்கூடக் கண்டறிந்ததே கிடையாது. இதே உத்ஸாகத்தில் படுத்திருக்கையில் சமயல்காரக்காமாக்ஷி வழக்கம்போல் சாப்பாடு கொண்டுவந்தாள்.

மூர்த்தியின் தெம்பான முகக்களையைப்பார்த்துச் சற்று வியப்புடன் "மூர்த்தீ! என்னப்பா ஏதோ நீயே பேசி, நீயே சிரித்து மகிழ்கிறாய்? என்ன சமாச்சாரம்? உன்னை இன்று வீட்டிற்குப் போகலாம் என்று சொல்லிவிட்டார்களாமே,

வரும்போதே நான் அதை விசாரித்துக்கொண்டு வந்தேன். மிக்க சந்தோஷம். நாதியற்ற நிலைமையிலும் பகவான் பக்கத் துணையிருந்து ஏதோ உன்னைக் காப்பாற்றிவிட்டார். எழுந்து உட்காரப்பா...சாப்பிடு" என்று அன்புடன் சாப்பாட்டைக் கலந்து தானே வாயில் ஊட்டினாள்.

மூர்த்தி ஆஸ்பத்திரியில் படுத்தநாள்முதல் காமாக்ஷி ஒருத்திதான் அவன் மாமிக்குத் தெரியாமல் ப்ரதிதினமும் வந்து விசாரிப்பதும், சில சமயம் பக்கத்திலிருந்து தேறுதல் கூறுவதும், தன் ஏழைக்குடிசையிலிருந்து சிறிது ஆகாரம் கொண்டுகொடுப்பதுமாய்,—தான் ஏழ்மை நிலைமையை அனுபவிப்பதால் பரதேசியின் துன்பத்தின் ஜ்வாலையறிந்து செய்து வந்தாள்.

மூர்த்தி ஏதோ நிதிகண்டதுபோல் அன்று கிடைத்த நற்செய்தியை முதலில் காமாக்ஷியம்மாளிடம்கூறி மிகமிகச் சந்தோஷப்பட்டான். சற்றுமுன்வரை வீட்டிற்குப் போவதை வெறுத்தவன் இப்போது வீட்டிற்குப் போவதற்குக் குஷியுடன் கிளம்பினான். எதிர்காலத்தின் எதிர்பார்ப்பான புயல்காற்றில் இவன் உள்ளம் துள்ளிக்குதித்து மகிழ்ந்தது.

5

துன்பத்தின் மத்தியிலும் இன்பம்

வாசலில்மாட்டுவண்டிவந்து நின்றது.காமாக்ஷி மெல்லப் பிடித்துச் சிறிய குழந்தையைப்போல் மூர்த்தியை அழைத்து வந்து அவன் தனிவிடுதியில் பாயில் கிடத்தினாள். ஆஸ்பத்ரியிலிருந்த சந்தோஷம் எப்படியோ மறுபடியும் சற்று மங்கிப் போய் கவலை குடிகொண்ட மூர்த்திக்கு மாமியின் ஸேவையைப் பார்த்ததும் பயமும்கூட நடுக்கிவிட்டது. காமாக்ஷி கூறிய படியே "மாமி! ஏதோ நான் அழைத்துக்கொண்டுபோனதற்குப் பகவான் விபத்திலிருந்து காப்பாற்றி வீட்டிற்கு அனுப்பிவிட்டார் அதுதான் போதும்" என்று சகஜமாகக்கூறினாள்.

இதைக்கேட்ட மாமி சற்றும் தயங்காமல் வெடுக்கென்று "ஏன்? எங்கு தேராமல் செத்துப்போய்விடுவானோ என்று பயந்துவிட்டாயோ! பிண்டத்திற்குத் திண்டாடும் அனாதைகளுக்குச் சாவு ஒருநாளும் வராது. பகவான் கட்டப்பாறையால்தான் எழுதியிருப்பான். எல்லாவிதத்திலும் சவரணையாயிருக்கும் குபேரர்களைப்போன்ற உபகாரியானால் உடனே தூக்கிவிடுவான் பகவான். என் சின்னப்பாட்டியின் மகளுக்கு உலகிலிருக்க இடமில்லை. நேற்றுபோய்விட்டதாகச் செய்தி வந்தது. இந்த அல்பப் பீடைகளுக்கு பயம்வேறு உண்டா?..." என்று சொல்வதைக் காதில் கேட்கமுடியாது, காமாக்ஷி காதைப் பொத்திக்கொண்டு உள்ளே போய்விட்டாள். மூர்த்திக்கு எப்படித்தான் இருந்திருக்கும் என்றுசொல்லவேண்டுமா!

இம்மாதிரி வார்த்தைகள் அவன் ஜீவியத்தில் பலதரம் கேட்டுக்கேட்டுப் பொட்டைபறந்துவிட்டதால் இப்போது எதிர்பார்த்த விஷயமாகவே ஆகிவிட்டது. ஹரிஜனப்பெரியவர் சொல்லியபடி எப்படியோ பொறுத்துக்கொண்டு தான் நினைத்தபடி லக்ஷயத்தைப் பூர்த்திசெய்வதிலேயே நாட்டமாக இருந்தான்.

மேலும் ஒரு வருஷகாலம் எப்படி எப்படியோ ஓடி ஒளிந்து மறைந்துவிட்டது. ஆனால், மூர்த்திக்குக் கலையிலுள்ள ஆசை—உள்ளமுங்கி மறைந்திருந்தது—வெளிநோக்கி ப்ரகாசிக்க வாரம்பித்தது. ஹரிஜனப் பெரியாரின் உதவியால் ஹரிதாஸன் என்கிற அவருடைய குமாரன் உண்மை ப்ரீதியுடன், கள்ளங்கபடற்ற மனத்துடன் மூர்த்திக்குச் சித்திரக் கலையைப் போதித்ததால் சுமார் ஒரு வருஷத்திற்குள் தானே திறமையுடன் சிறந்த சித்திரம் எழுதும்படியான தேர்ச்சியுடன் தைரியமும் பெற்றுவிட்டான்.

இவன் எழுதிக்கொடுக்கும் பல உயர்ந்த சித்திரங்களைக் கண்டு பூர்ண த்ருப்தியடைந்து சந்தோஷத்துடன் மூர்த்தியைத் தட்டிக்கொடுத்து "மூர்த்தி! உன்னுடைய கைத்திறனுக்கு நானே வியக்கிறேன். இனி உனக்கு மாதம் 50 ரூபாய் சம்பளம் கொடுத்து உன்னை இங்கேயே வேலையில் வைத்துக் கொள்ளலாம் என்று தீர்மானித்திருக்கிறேன். இது உனக்கு த்ருப்தியாக இருக்குமென்று நம்புகிறேன்"...என்று சொல்லிய வார்த்தையைக் கேட்டவுடனேயே மூர்த்தி சொர்க்க போகத்தையும் குபேரசம்பத்தையும் அப்படியே தன்கையில் தூக்கிக்கொடுத்துவிட்டதுபோன்ற பெருமையடைந்து வணக்குடன் தனது அபரிமிதமான ஆனந்தத்தைத் தெரிவித்தான்.

ஏற்கெனவே இவனுடைய மாமாவின் மகன் சித்திரக் கலையில் ஆர்வங்கொண்டு அதை சிறுபிராயம்முதல் கற்று வந்திருப்பதால் சிற்சில தனிப்பத்ரிகைகளுக்கும், கதைப் புத்தகங்களுக்கும் விளம்பரங்களுக்கும் படமெழுதிவந்தான். ஆனால், அவை அவ்வளவாகப் பரிமளிக்கவில்லை.

மூர்த்தி இம்மாதிரி படக்கலையில் பயின்று வருவது வெளியாருக்குத்தெரியாமல் ரகஸ்யமாகவேநடத்தியதோடு, படிப்பும் விடாது படித்து, S. S. L. C. பாஸ்செய்துவிட்டான். மாமியின் மனங்கோணமல் சகலவேலைகளையும் செய்துகொண்டே இத்தனையும் சமாளித்துவந்ததானது அவனுக்குள்ள கலையின் ஆர்வத்தை எடுத்துக்காட்டியது. மாமியிடம் வாங்கும் திட்டுகளையும் சாப்பாட்டின் பக்ஷபாதங்களையும் முன்போல் நினைத்து வருந்தாமல் அந்த ஹரிஜன நண்பர் சொல்லியதுபோல் அத்தனையும் பொறுத்துக்கொண்டு வந்தான்.

ஹரிதாஸர் தனக்கு 50 ரூபாய் சம்பளம் கொடுப்பதாகச் சொல்லிய வார்த்தைகளைக் கேட்டதும் அவனடைந்த ஆனந்

தத்திற்கு எல்லையேஇல்லாதுபோயிற்று. ஆனல், அதையும் அவன் வெளியில் காட்டிக்கொள்ளாமல் இதயபாதாளத்திலேயே வைத்துப்பூட்டியிருந்தான். மூர்த்தியினல் எழுதிக் கொடுக்கப்பட்ட ஒரு அபூர்வக்காட்சி நிறைந்த—அழகிய இயற்கைவர்ணனைகள் நிறைந்த—சித்திரத்தைப் பார்த்த ஹரிதாஸர், மிகவும் பெருமையடைந்து அதை உடனே ப்ரபல பத்ரிகைக்கு அனுப்பியிருந்ததற்குப் பகுமானமாக 100ரூபாயும் பாராட்டுக்கடிதமும் அன்றே வந்ததைக் கண்டு பரமசந்தோஷமடைந்து மூர்த்தியை உற்றுக்கவனித்தார்.

“மாதம் 50 ரூபாய் சம்பளம் என்றுசொல்லியஉடனேயே மூர்த்தியின் சந்தோஷம் உச்சத்தை எட்டி 5 ஆயிரம் ரூபாயைக் கண்டவன்போல் த்ருப்தியடைந்து பூரிக்கும் உள்ளம், இனிமேல் 50 ஆயிரம் ரூபாயைக் கண்டால்கூட இத்தனை பூரிக்குமா என்பது சந்தேகம். முதல்முதல் உண்டாகும் சந்தோஷம் ஒருதனித்த சக்திவாய்ந்ததல்லவா? நமக்கு இப்போது பதினயிரம் ரூபாய்களைப் பார்த்தாலும் அதில் ஆச்சரியமாகத் தோன்றவில்லையே; மூர்த்தியோ 50 ரூபாய் சம்பளம்என்பதைக்கேட்கும்போதே எத்தனை பேரானந்தத்தை அடைகிருன். பாவம்! உண்மையாய் வறுமையின் கொடிய சங்கடத்தை அனுபவித்துள்ளவர்களுக்கன்றோ அதன்மகிமை தெரியும்? பாவம்! அத்தகையவனுக்கு இந்த ரூபாயை இப்போதே கொடுத்துவிடுவோம்.” என்று தனக்குள் எண்ணியபடி மூர்த்தியைப் பார்த்து! உன்னுடைய அபரிமிதமான சந்தோஷத்தைக் கண்டு நான் பூரிக்கின்றேன். இந்த பரிபூர்ண த்ருப்தி என்றும் மாருமல் இருக்கவேண்டும். உன் சந்தோஷத்தைக்கண்டுதான் பகவான் இப்போதே இந்த தபால்மூலம் 100 ரூபாய் அனுப்பியிருக்கிருர். இந்தா! நீ எழுதிய “காலைக் கதிரவனும் க்ராமக்காட்சியும்.” என்னும் சித்திரத்திற்கு கதிரொளி என்கிற பத்திரிகையின் அதிபர் இதையனுப்பி இருக்கிருர். இந்தா!” என்று ரூபாயை மூர்த்தியின் கையில் கொடுத்தார்.

மூர்த்தியின் சந்தோஷத்திற்கு இனி எல்லைவகுத்துக்கூற முடியுமா? பேசமுடியாமல் சந்தோஷத்தின் மிகுதியினல் தத்தளித்தான். திரும்பத்திரும்ப விழுந்துவிழுந்து நமஸ்கரித்துப் புளகிதமடைகிருன். ரூபாயை வாங்கி, பகவான் படத்தடியில் வைத்து நமஸ்கரித்தான். கண்களில் ஒத்திக்கொண்டான்.........அவனுடைய ஜென்மத்தில் முதல்முதல் இன்றுதான் 100ரூபாயைச்சேர்ந்தாற்போல்பார்ப்பதால் அவனுக்கு இன்னதென்று விவரிக்கமுடியாதவிதம் உணர்ச்சி மேலிட்டுப் பெருக்கெடுத்துவிட்டது. உடனே தனக்குள் ஏதோ ஒரு தீர்மானத்திற்கு வந்தான். எஜமானரிடம் வெகு விநயத்துடன் உத்திரவு கேட்கும் முறையில் “ஸார்! எனக்கு அன்று வந்த கொடிய டைபாய்டு ஜுரத்தை நான் இன்று மிகவும்

போற்றுகிறேன். அந்த சமயம் உங்கள் பிதா எனக்கு இத்தகைய பேருதவியைச் செய்ததனுலன்றே இன்று நான் ஒரு மனிதன் என்கிற முறையில் மதிக்கப்பட்டுவருகிறேன். இந்த நன்றியை நான் என்றும் மறக்கமாட்டேன். இந்த ஏழையிடம் என்றும் அன்பாயிருந்தால் போதும்'' என்றுகூறி மிகுந்த மரியாதையுடன், பக்தியுடன் விடைபெற்றுச்சென்முன். அவன் இதயத்தில் ஆனந்தமும், தனக்கு நற்காலம் பிறந்துவிட்டதென்ற ஒரு அபரிமிதமான சந்தோஷ உணர்ச்சியும் பொங்கிப் பூரித்தது.

6

பெருமைப்புயலும் பொருமைத்தீயும்

''அம்மா! இதோ இந்த சித்திரத்தைப் பார்த்தாயா! 'காலைக்கதிரவனும் க்ராமக்காட்சியும்' என்ற படத்தை யாரோ ஒரு சித்திரநிபுணன் தாஸன் என்கிறவன் வரைந்திருக்கிறுன். அதை அப்படியே இந்த பத்திரிகையில் ப்ரசுரித்து இதற்கு 100 ரூபாய் பரிசும் கொடுத்திருக்கிருர்கள். பத்ரிகையில் இதைப் பாராட்டி எழுதியிருக்கிறது... நான் சித்திரக்கலை கற்பதை நீ ஏதோ இளப்பமாக எண்ணித் திட்டுகிருயே, அக்கலையின் மகிமையை நீ அறிவதற்காகத்தான் இதை உனக்குக் கொண்டு காட்டுகிறேன். நான் இன்னும் வெகு விரைவிலேயே ஒரு சினிமாக் கம்பெனிக்கு சித்திர டைரெக்டராகிவிடுவேம்மா! அதற்காகத்தான் நானும் ப்ரயத்தனம் செய்து கொண்டிருக்கிறேன். ஆர்ட் டைரெக்டராகிவிட்டால் எடுத்த எடுப்பில் 500 ரூபாய் சம்பளம் சொளைசொளையாகக் கொடுப்பார்கள் தெரியுமா? இனிமேல் இந்தத்தொழிலை நீ கேவலமாகப் பேசாதேம்மா...எத்தனை அழகாய் தத்ரூபமாய் இந்த படம் எழுதியிருக்கிருன் பாரு. அந்த தாஸன் யாரோ, அவனைப் பார்த்து என் சந்தோஷத்தைத் தெரிவிக்க வேண்டும்போல் ஆசையாயிருக்கிறது. விலாஸமேகாணவில்லை. அதே பத்ரிகைக்குஎழுதப்போகிறேன்.'' என்று மூச்சுவிடாமல் மிகுந்த உத்ஸாகத்துடன் கூறினன்.

''இந்தக்கலையில் இத்தனை உயர்வா இருக்கிறது? எனக்கு இதுபற்றித் தெரியாததால் ஏதோ சொல்லிவிட்டேன். நீ எந்த விதமாவது நல்ல தொழிலில் நல்ல சம்பளத்துடன் கண்ணியமாயிருந்தால்போதும். காலாகாலத்தில் நல்ல பெண்ணைப் பார்த்து விவாகத்தைச்செய்து மகிழ்ந்து கண்ணாரக் கண்டால்போதும்'' என்று தன் மகனை சந்தோஷத்துடன் ஆசீர்வதித்து அனுப்பினள்.

சற்று நேரத்திற்கெல்லாம் மூர்த்தி மிக்க சந்தோஷத்துடன்வந்து, மாமியை அவள் எதிர்பாராதவிதமாக சாஷ்

டாங்கமாய் நமஸ்காரம் செய்து கைகட்டி மரியாதையுடன் 100 ரூபாயை மாமியின் காலருகில் வைத்து "மாமீ! உங்களுடைய அன்பினாலும் ஆசீர்வாதத்தினாலும் இந்த ரூபாய் எனக்குக்கிடைத்தது. இதை முதல் முதல் உங்களுக்கு அர்ப்பணம் செய்து சமர்ப்பிக்கின்றேன். என் பெற்றோர்களின் ஆசிர்வாதத்தினால் எனக்கு ஒரு ப்ரமுகரின் தயவும் உதவியும் கிடைத்தது. நான் சித்திரக்கலையில் தேர்ச்சிபெற்ற பிறகே தெரிவிக்க எண்ணினேன். நான் எழுதிய ஒரு சிறந்த படத்திற்கு இந்த ரூபாய் பகுமானம் வந்தது. அதை உங்களுக்குச் சமர்ப்பிக்கிறேன்" என்று படத்தையும் காட்டினான்.

முதலில் பணத்தைப் பார்த்தவுடனே அபாரமான ஆச்சரியமும் சந்தோஷமும் அடைந்த மாமிக்கு படத்தைக் காட்டி விஷயத்தைச் சொல்லியதும், சடக்கென்று முகம் மாறி குபீரென்ற பொறாமைத் தீ மூண்டு கண்கள் சிவந்தன. "இந்தப் படம் இவனா எழுதினான்? இதையா சற்றுமுன் ராமுகொண்டு காட்டினான். இவனுக்கா இத்தனைபெரிய புகழும் பதவியும்? இவனா தாஸன் என்கிற பெயருடன் எழுதி நம் மகனுடைய தொழிலில் அவனை அமுக்கிவிட்டுப் போட்டிப்போட்டு இத்தனைநாள் தெரியாமல் ரகஸியமாக வேலைசெய்துவந்தான்?" என்கிற எண்ணங்கள் பெரும் சூறாவளியை இதயத்தில் உண்டாக்கிவிட்டதால் அவள் எத்தகைய ஆச்சரியமுமின்றி கல்லுபோல் விரைக்கவிரைக்க நின்றாள்.

பாவம்! மூர்த்தியின் உள்ளத்தில் கொந்தளித்த சந்தோஷம்சடக்கென்றுமாறியது.பணத்தைப்பார்த்தவுடனே மாமி மகத்தான சந்தோஷத்தைஅடைவாள் என்று எண்ணியதற்குமாறாக இப்படிப் பார்ப்பதால் இவனைத் தூக்கிவாரிப் போட்டது. மாமி பணத்தைக் கையில் எடுத்துவைத்துக் கொண்டு, "ஏண்டா! எத்தனை நாளாக நீ இப்படி உண்ட வீட்டிற்கு ரெண்டகம் நினைக்கும் புண்ய கைங்கர்யத்தைச் செய்துவருகிறாய்? என்குழந்தை ராமுவை ஓங்கவிடக்கூடாதென்ற கெட்ட எண்ணத்துடன்தானே ரகஸியமாகவே நீ இக்காரியம் செய்திருக்கிறாய்? ரொம்ப நன்றாக இருக்கிறது" என்று முகத்தை ஒரு திருப்புதிருப்பிக்கொண்டு ரூபாயுடன் உள்ளே போய்விட்டாள்.

"'கடன்வாங்கியும்பட்டினிகல்யாணம்செய்துகொண்டும் ப்ரம்மசரியம்' என்ற பழமொழியைப்போல் ஆகிவிட்டதே! எத்தனையோ ச்ரமப்பட்டு நான் ஒரு காரியத்தைச்செய்து முதலில் சந்தோஷத்தைத்தெரிவிக்க வந்த இடத்தில் த்ரோகி, நன்றிகெட்டவன் என்கிற வார்த்தைபல்லவா கிடைத்தது? ராமுவும் இக்கலையைக் கற்றுவருகிறான் என்பதே எனக்குத் தெரியாதே! என்பாவம் என்னை இப்படியா சூழ்ந்து வாட்டும்?" என்று எண்ணி அப்படியே தம்பித்து இடிந்துவிட்டான்.

இதற்குள் மாமி பெரியகுரலில் "அப்பா! அடேய் ராமு! இங்குவா...இதோ பாரு. சற்றுமுன் யாரோதாஸனும் அவனை பார்க்கவேண்டும் என்றெல்லாம் சொன்னாயே...அந்த அல்பாயுஸு வேறு யாருமில்லை. நம்முடைய குடியைக் கெடுத்துக் குட்டிச்சுவரடிக்கும் பாவி, இதோ இந்தப் படுபாவிதான்! மூர்த்திதான் அந்தப்பெயருடன் எழுதினான். பரிசு வந்ததாம்; பெருமையடித்துக் கொண்டுவந்து ரூபாயைக் கொடுத்து கூழைக்கும்பிடுபோட்டுகொட்டியமாடுகிறான்" என்று கத்தினாள்.

இதைக்கேட்டு ராமு பதைக்கப்பதைக்க ஓடிவந்து மூர்த்தியை ஒருமாதிரியான படபடப்புடன் பார்த்தான்... "ஏண்டா! நீயா இந்த படத்தை எழுதினாய்? நிஜமாகவா?...நீ எங்கு யாரிடம் இதைக் கற்றுக்கொண்டாய்? தாஸன் என்று நீயா பெயர் மாத்திக்கொண்டிருக்கிறாய்?" என்று பெருத்த அதிர்ச்சியுடன் கேட்டான்.

மூர்:—(வணக்கத்துடன்)...நான்தான் எழுதினேன் ராமு! நீகூட சித்திரக்கலை கற்றுக்கொள்வதை சொல்லவே இல்லையே! நீ எந்த இடத்தில் கற்றுக்கொள்கிறாய்?...நான் ஹரிதாஸ் கலாமண்டலியில் கற்றுக்கொள்கிறேன். அதனால்தான் தாஸன் என்ற பெயருடன் எழுதி வருகிறேன். அன்பு என்ற பத்ரிகையில் வந்துள்ள படங்கள்கூட நான் எழுதியவைதான்...

என்று முடிப்பதற்குள்..."ஓகோ! யாரோ ஒரு ஹரிஜன் வைத்துள்ள கலாமண்டபத்திலா நீ கற்றுக்கொள்கிறாய்?... என்பதற்குள் மாமி "ஐயையோ! ஏண்டா! வீட்டில் பூஜையும் புரஸ்காரமும், ஜபமும் தபமும் தினம் விழுந்துவிழுந்து நடத்துகிற இடத்தில், ப்ரதிதினம் ஹரிஜனங்களின் மத்தியில் ஆடிவிட்டு வந்து இவன் சர்வமங்களமா செய்துவருகிறான். அதான் வீடு நசித்து நாசமாய்ப்போகிறது! இதென்னடா அக்ரமம்? ஏண்டா, உன் மூளை கெட்டுப் பாழாகிவிட்டது?" என்று பெரிதாகக் கூச்சலிட்டாள்.

மாமா அதேசமயம் வெளியிலிருந்து வந்தார். இந்தக் கூச்சலையும் தடபுடலையும் கண்டு விசாரித்து விஷயமறிந்து சற்று சந்தோஷத்துடன் "ஆமாம். உன் பொறுமையும் புத்தி கெட்டபேச்சும் போதும். ஏதோ நம்மிடம் அடிமைபோல் பயந்து நடுங்கி வாழும் பயங்கர வாழ்க்கையில் எப்படியோ ஒரு வேலையைக் கற்றுக்கொண்டு தன்னைத்தான் காப்பாற்றிக் கொள்ள வழிதேடிக்கொண்டு அதிலும் முதல்முதல் கிடைத்த பணத்தை சந்தோஷத்துடன் உன்னிடம்கொடுத்து ஸேவிக்கையில் ஏண்டீ இப்படி ஆட்டம்ஆடி அஸம்பாவிதமாய்ப் பேசுகிறாய்? ஹரிஜனமாம், அத்திக்காயாம்! ஒவ்வொரு ப்ரசவத்துக்கும் ஆஸ்பத்ரியில் ஆனந்தமாய்ப் படுத்திருந்தாயே, அங்கு உனக்குக் கஞ்சியும் காப்பியும் ரொட்டியும் உங்க அத்தைமகள் ஆசாரமாய் ஊட்டி உபசரித்தாளோ? வாயை விடாதே...இங்கே வாடாப்பா மூர்த்தி! இதே படத்தை

இப்போதுதான் என் நண்பர் ஒருவர் எனக்குக்காட்டி ப்ரமாதமாய்ப் புகழ்ந்தார்....இத்தகைய சிறந்த மேதாவிகளின் பெருமையை நம் நாட்டவர்கள்தான் சார் சரியாக அறிந்து மதிப்பதில்லை. வெளிநாட்டவராயிருந்தால் இப்படத்தைக் கண்காட்சிக்கல்லவா அனுப்பி தங்கப்பதக்கம் பரிசளிப்பார்கள்? சித்திரநிபுணர்களின்மூலம் நாம் எத்தனையோ அத்புதக் காட்சிகளைக்கண்டு இன்புறுகிறோம். ஏன்? ஒரு ரவிவர்மாவின் கைத்திறமையினாலும் கற்பனையினாலுமல்லவா நாம் லக்ஷ்மி, ஸரஸ்வதி முதலிய தெய்வ உருவங்களைக்கண்டு நாளைக்கும் பூஜித்துப் பூரிக்கிறோம்!...

என்று தடபுடலாக அளவளாவிப் பேசினார். தாஸன் என்ற மகானுபாவன் யாரோ என்று எண்ணி நானும் பரம சந்தோஷத்துடன் பார்த்து ஆசீர்வதித்தேன். அந்த மனிதன் நீதான் என்று தெரிந்து இப்போது பின்னும் சந்தோஷப்படுகிறேன். ஏதோ எப்படியாவது நீ சந்தோஷமாய் வாழ ஒரு வழியைத் தேடிக்கொண்டுவிட்டாய். உன் தாயார் என்னிடம் வைத்திருந்த அன்புக்கு உன்னை என் சக்தியானுஸாரம் நடத்திவிட்டேன்...

என்று முடிப்பதற்குள் மாமியாகியமரகதம்மாள்இடுப்பில் ஒரு கையும் முகவாய்க்கட்டையில் ஒரு கையும் வைத்துக் கொண்டு இடித்துக்காட்டுவதுபோல் "போதுமே சவரணை! அவன் பிழைப்புக்கு வழிதேடிக்கொண்டு நம் பிழைப்பில் மண்ணைப்போட்ட த்ரோகம் உங்கள் கண்ணுக்குத்தெரியவில்லைபோலிருக்கிறது. நம்ம ராமுவை இந்தத் துறையில் ஓங்கவிடாமல் அமுக்குவதற்காகத்தான் ரகஸியமாக இவன் ஹரிஜனனிடமும் பரியாரியிடமும் கற்றுக்கொண்டு வந்திருக்கிறான். இந்த வஞ்சனை உங்களுக்கு ஏன் தெரியப்போகிறது? நீங்கள் அடிக்கு ஆயிரம் சம்பாதிக்கிறீர்கள்; நம்மகுடும்பத்தின் தொல்லையோ சொல்லிமுடியவில்லை. ராமுவாவது கொஞ்சம் தலையெடுத்துக் காப்பாற்றுவான் என்று எண்ணி நான் மனக்கோட்டைகட்டுவதற்குள் இந்த புண்ணியவானால் அந்த கோட்டை இடிந்துவிட்டதே!"...என்று கத்தினாள்.

மாமா:—நம்ம ராமுகூட இந்தச் சித்திரக்கலை கற்றுக் கொள்கிறானா என்ன? எனக்கு அது தெரியவேதெரியாதே. இப்போது இன்னும் நல்லதாயிற்று.மூர்த்தி! தினம் ராமுவுக்கு நன்றாகக்கற்றுக்கொடுத்து முன்னுக்குக் கொண்டுவா அல்லது நீ கற்கும் இடத்தில் இவனையும் சேர்த்துத் திறமையாய் வரையும்படிச்செய்...சரி, நேரமாகிறது..என்றுசொல்லிக்கொண்டே சாப்பாட்டிற்குப் போய்விட்டார்.

மாமா சொல்லிய வார்த்தையைமற்ற ஒருவரும்கேட்கவே இல்லை. ஒவ்வொருவர் ஒவ்வொரு விதமாக நங்குகாட்டி ஏளனத்துடனேயே சென்றார்கள் மூர்த்தியின்மனம் உடைந்துவிட்டது. ரூபாயைமட்டும் மாமிவிடாமல் எடுத்துக்கொண்டு

போய்விட்டதைக்கண்டு உடைந்த மனத்திலும் ஒரு சிறிது வியப்பு உண்டாகியது.

7

அன்புக்குப்பரிசு அக்னிஜ்வாலையா?

ஏற்கெனவே மூர்த்தியைக்கண்டால் வெறுத்தும் பாரபட்சம்காட்டியும்வந்த மாகதத்துக்கு இனிகேட்கவேண்டுமா! உள்ளூறப் பொறுமைத்தீ மூண்டுவிட்டதால் முன்னிலும் அதிகமாகவே அலக்ஷியம் செய்துவந்தாள். "போதாக் குறைக்குப் பொன்னியம்மன் குறை" என்பதுபோல் தாயுடன் மகனும் சேர்ந்துகொண்டு மூர்த்தியை எத்தனை தூரம் இம்ஸிக்க முடியுமோ அப்படி இம்ஸித்தும், மூர்த்தி சற்றுகூடப் பின் வாங்காமலும் அதை லக்ஷியமே செய்யாமலும் தன் காரியத்தில் கண்ணுயிருந்துவந்தான்

மாதாமாதம் சொளைசொளையாய் 50 ரூபாய் சம்பளத்தை அப்படியே மாமியிடம் கொடுத்துவிட்டு நமஸ்கரிப்பதை முக்யமாகக் கொண்டான். இதர படம்வரையும்மூலம் வரும் பணத்தைத் தன் சகோதரிகளுக்கு அனுப்பிவந்தான். ஆனல், நேரில்போய் எட்டிப்பார்க்கவில்லை. வடநாட்டிலிருந்து ஒரு முக்யமான விளம்பரம் ஒரு நாள் வந்திருந்தது. அதாவது மகாத்மா காந்தியையும் அன்னை கஸ்தூரிபாவையும் தத்ரூபமாய் அப்படியே யார் எழுதுகிறார்களோ, அவர்களுக்கு ஆயிரம் ரூபாய் முதல்பரிசு என்றும் அந்தப்படத்தை முக்யமான அரசாங்க ஆபீஸில் மாட்டிக் கவுரவிக்கப் படுவார்கள். என்றும் கண்டிருந்தது.

நூற்றுக்கணக்கானவர்கள்இப்போட்டியில்கலந்துகொண்டார்கள். மூர்த்தியும் ராமுவும்கூடக் கலந்துகொண்டார்கள் என்று சொல்லவேண்டுமா! சித்திரக்கலை வட்டாரங்களில் "கட்டாயம் ஹரிதாஸரோ அல்லது தாஸனேதான் ப்ரைஸ் அடிக்கப்போகிறார்கள். இதில் ஏதாவது சந்தேகம் உண்டா! தற்போது இவர்களைத்தவிர வேறுயார் இருக்கிறார்கள்" என்ற பேச்சு ப்ரமாதமாய் உலாவுவதைக் கேட்கக்கேட்க ராமுவின் பொறுமைத்தீ கொழுந்துவிட்டு எரியத்தொடங்கியது.

ப்ரமாதமான புகழுரைகளுடன் மூர்த்தியின் உருவப் படத்தையும் போட்டு தடபுடலாகக்கொண்டாடி மூர்த்திக்கு முதல்பரிசு ஆயிரம் ரூபாய் வந்ததைப்பற்றிப் பத்ரிகைகளில் பறந்தது. பல அறிஞர்கள் மூர்த்தியை சித்ரகலாமண்டபத்திலேயே கண்டு கைகுலுக்கிப் பாராட்டுதல்கள் கூறி மாலை சூட்டி மகிழ்வித்தார்கள்.

"ஆஸ்பத்ரியில் என் னுயிர் போய்விடக்கூடாதா என்று கலங்கிய அதே நிமிஷம் வாழ்வை மகிழ்விக்கவந்த மகானுபாவ

னின் தயாளத்தனத்தின் அபூர்வ சக்தியாலல்லவா இன்று இந்தப் புகழுரைக்குப் பாத்திரமாகியிருக்கிறேன். அவர் எந்த ஜாதியினரானால் என்ன? உத்தமர் என்கிற உயர்ந்த குணத்திற்கு அவர் உரியவராகிவிட்டார். அவரை என்றும் மறக்காதே"..என்று அவனுடைய அபரிமிதமான சந்தோஷத்தில் முதல்முதல் மனச்சாட்சி இதைத்தான் நினைவூட்டியது.

நேரே அந்தப் பெரியவரிடம்சென்று நமஸ்கரித்துத் தன்னுடைய நன்றி விச்வாசத்தையும் பக்தியையும் எடுத்துக் கூறியபின்பு தன் மாமியிடம் வந்தான். நூறு ரூபாயைப் பெற்றபோது மாமி சொல்லிய அதே வார்த்தைகள்தான் இதற்கும் கிடைக்கும் என்பது தெரிந்த விஷயம். எனினும் அவள் வைதோ திட்டியோ அலக்ஷியம் செய்தோ தனக்கு இருக்கஇடம் கொடுத்து உதவிபுரிவதை அவன் மறக்கவில்லை. உடன்பிறந்த சகோதரிகளைப் போலல்லாமல் இம்மட்டு மாவது நடத்துவதனால்தான் தனக்கு இந்த நிலைமை உண்டாகியது என்ற நல்லெண்ணம் மாறவேயில்லை.

அந்த உணர்ச்சியுடன் மாமியிடம் வந்து ஆயிரம் ரூபாயை அப்படியே மாமியிடம் கொடுத்து நமஸ்கரித்து "மாமீ! நீங்கள் செய்த மகோபகாரத்தின் பலனால் பகவான்என்னை ஒரு மனிதனாக மதிக்கச் செய்திருக்கிறார். இந்தப் புகழ் சகலமும் உங்களுக்கே உரியது மாமீ!" என்று சொல்லும்போது அவனுடைய உணர்ச்சி உச்சத்தை எட்டிக் கண்ணீர்முட்டித் தொண்டை தழதழத்தது.

மரகதம்மாள் ஆயிரம் ரூபாய்களை அடுக்காய் அப்படியே எடுத்து பத்திரமாக வைத்துக்கொண்டு, பின் ஒருநாளும் சொப்பனத்தில்கூடக் கண்டறியாதவிதம் மூர்த்தியைத் தடவிக்கொடுத்து ஏறஇறங்கப் பார்த்தாள். இந்தச் செய்கை மூர்த்தியின் உள்ளத்தைக் கிளறி மயிர்க்கூச்செறியச்செய்தது.

"மூர்த்தி! நான் உன்னை இத்தனை வருஷமாக வைத்துக் காப்பாத்திச்செய்ததற்கு நீ இம்மாதிரி பணத்தைக்கொடுத்து நமஸ்காரம்செய்துவிட்டால் உன்கடமை நிறைவேறிவிட்டதாயும் என்னை த்ருப்திசெய்துவிட்டதாயும் நீ நினைக்கிறாய். இதனாலேயே நீ ப்ரதிஉபகாரம்செய்துவிட்டதாகவும் த்ருப்தியும் அடைந்துவிட்டதாகவும் உன்செய்கை தெரிவிக்கிறது. இதுவா எனக்கு த்ருப்தி உண்டாக்கும்?...மூர்த்தி! உண்மையில் நீஎன்னிடம் சத்யமாய் தேவதாவிச்வாஸம் வைத்திருப்பது ஆணையானால் நீ என் ராமுவுக்காக இந்தத் தொழிலையே விட்டுவிடவேண்டும். அவன் உன்னால் வெளிவரமுடியாதபடி மிகவும் பாதிக்கப்பட்டு மனம் உடைந்துவிட்டான். தான் தற்கொலை புரிந்துகொள்வதாயும், இன்னும் அதீதமான முறையில் உன்னையே அமுக்கிவிடுவதாயும் அவனும் அவன் சகாக்களும் நிச்சயம் செய்துவிட்டதாக நேற்று சொல்லிக்

கடுமையான ஆக்ரோஷத்துடன் கத்தினன். எனக்காக நீ இந்த த்யாகத்தைச் செய்யவேண்டும்''...

என்று அவள் சற்றும் அச்சமோ குரலில் நடுக்கமோ எத்தகைய உணர்ச்சியோ இன்றிக் கூறுவதைக்கேட்டவுடனே மூர்த்தியின் தலையில் எரிமலையே புரண்டுவிழுந்துவிட்டது போன்ற அதிர்ச்சி உண்டாகியதால் ''ஹா !''...என்று அலறி விட்டான். அன்று பகலில் ஒரு புத்தக ப்ரசுராலய ப்ரமுகர் இவனிடம்வந்து ''கம்பராமாயணத்தைப் புதுமுறையில் ப்ரசுரிக்கப்போகிறோம். அதற்கு வேண்டிய சித்திரங்கள்பூராவும் நீங்களே எழுதித்தரவேண்டும். ஹரிதாஸரே உங்களை ஏற்பாடு செய்திருக்கிறார். கைகேயிப் படலம்வரையில் அச்சாகி விட்டது. அதற்கான படங்கள் சீக்கிரம் வேண்டும்'' என்று சொல்லியது சடக்கென்று நினைவுக்கு வந்தது.

கைகேயி தன் மகன் பரதனுக்கு முடிசூட்டுவதற்காக ராமனை த்யாகம்செய்து காட்டுக்குப்போகச் செய்தாள். இவள் தன்மகன் ராமனுக்குக்கீர்த்திமகுடம்சூட்டும்பொருட்டுதன்னைக் காட்டுக்கனுப்புவதுபோல் தொழிலை விட்டுவிடவேண்டும் என்று பெரியத்யாகத்தீயில் குதிக்கச்சொல்வதாகவேதோன்றி அவனைக் கலக்கியது. அன்று நூறுரூபாய் கொடுத்தபோது சிறிய தொகைக்கேற்பச் சிறிய வார்த்தைகள் வந்தன. இன்று பெரிய தொகைக்கு ஏற்ப பெரியவார்த்தையாகவே முடிந்து விட்டதே! இப்படியும் ஒருவிதி தன்னைத்துரத்தியடிக்குமா ?'' ...என்று எண்ணியபோது உலகமே தட்டாமாலை சுற்றுவது போல் தோன்றியது.

புகழ்தேவதை தன்னைப் பரிபூர்ணமாகக் கடாக்ஷித்து விட்டாள் என்று அபரிமிதமான சந்தோஷத்தில் மிதக்க எண்ணுவதற்குள் அந்த ஸாகரம் உயிரையே பலிவாங்கும் துக்கஸாகரமாய், பயங்கரப்ரவாகமாய்த் தன்னை விழுங்கி ஏப்பமிடவரும் காலவெள்ளமாகவா ஆய்விட்டது ?...என்று நினைத்தபோது உண்மையில் அவன் நினைவுதடுமாறி மூர்ச்சித்துக் கீழே விழுந்துவிட்டான்.

அளவற்றபொறுமையாலும் தன்மகன் முன்னுக்கு வர வேண்டும் என்கிற ஒரே பேராசையாலும்,தான் எத்தகைய வார்த்தையைச் சொல்கிறோம், இது தகுமா தகாதா ! தான் அலக்ஷியம்செய்து கேவலம் ஒரு நாயை நடத்துவதுபோல் நடததியிருக்கையில் சற்றும் கூசாமல் இத்தகைய பெரிய வார்த்தையை—அவன் வாழ்வையே பாழாக்கும் அனர்த்த வார்த்தையை—ஆணையும் இட்டுக்கேட்கிறோமே; இது தெய்வத்திற்குத்தான் பொருந்துமா? மனச்சாட்சிதான் இதற்கு இடங்கொடுக்குமா? உலகம் தன்னை எப்படி மதிக்கும்? இந்த வார்த்தையாகிய அக்னியால் அச்சி[illegible]னின் இதயம் எவ்வாறு தான் பொசுங்கிவிடும்? என்[illegible] போன்ற விஷயங்கள்

183165

எதையும் லவலேசமும் எண்ணிப்பார்க்காமல் தனது சுய நலம் ஒன்றையே எண்ணி, "கேட்டவுடனே சடக்கென்று பதில் சொல்லாமல் இப்படியா யோசிப்பது?" என்று கோபமும் உண்டாகியது.

அதே சமயம் மூர்த்தி திடீரென்று விழுந்துவிட்டதால் அவளையும் அறியாமல் "ஏண்டாப்பா விழுந்துவிட்டாய்? என்னடா...மூர்த்தி?"...என்றாள். கையில்பெருந்தொகைஇருப்பதை முதலில் பத்திரப்படுத்தும் நோக்கத்துடன் ஓடி அதை உள்ளே பெட்டியில் வைத்துவிட்டு மறுபடியும் வந்தாள். இதற்குள், காமாக்ஷி இந்த சம்பாஷணைகளை மறைவில் நின்றுகேட்டு மனம் குமுறி வருந்துகையில் மூர்த்தி விழுந்துவிட்டதால் "ஐயையோ! ஏண்டாப்பா விழுந்துவிட்டாய்?"... என்று அலையக்குலைய ஓடிவந்து அவனைத்தூக்கித்தாங்கிக்கொண்டு "கொஞ்சம் ஜலங்கொண்டுவாருங்கள். யாராவது சீக்கிரம் ஜலம் கொண்டுவாருங்கள்!"...என்று கத்தினாள்.

வேலைக்காரி ஜலங்கொண்டுவந்தாள். முகத்தில் தெளித்து விசிறினாள். சுமார் 10 நிமிஷங்கழித்து மூர்த்தி கண்ணைத் திறந்தான். அவன் இதயம் படும்பாட்டை ஒருவராலும் ஊகிக்கமுடியவில்லை. மெல்ல சமாளித்துக்கொண்டு "எனக்கொன்றுமில்லை. ஏதோ தலைசுற்றி விழுந்துவிட்டேன்... ஒன்றுமில்லை." என்று சொல்லியவாறு எழுந்து அங்கு நிற்காமலேயே போய்விட்டான். இச்செய்கை காமாக்ஷிக்குப் பரிதாபமும் ஆச்சரியமும் உண்டாக்கியது. மாமிக்குத்தன்னை அலக்ஷியம் செய்துவிட்டு வேண்டுமென்று அவமரியாதையாய்ப்போய்விட்டதாகவே தோன்றிப் பின்னும் தனது எண்ணத்திற்கு அனுகுணமான உணர்ச்சியேதோன்றியதேயன்றி, தான் சொல்லிய அதிர்ச்சியினால்தான் இத்தகைய மயக்கம் வந்து விழுந்துவிட்டான்; அந்த வேகத்தில்தான் மனம் கொதித்துச் சென்றான் என்று தோன்றவே இல்லை. காமாலைக்கண்ணனுக்குச் சகலமும் மஞ்சளாகத் தெரிவது போலத்தான் தோன்றியது.

8

அஞ்சாநெஞ்சும் வஞ்சனைப் பயனும்

வெளியில் சென்ற மூர்த்தி எப்போது திரும்பிவருவான் தனக்கு எப்படிப் பதில் சொல்வான் என்றதையே எண்ணி மாமி அன்று நடந்ததை வெளியில் சொல்லவே இல்லை. தன் கணவனும் ஏதோ கேஸ் விஷயமாக வெளியூர் போயிருந்ததால் இந்த நிகழ்ச்சி இதோடு அடங்கி இருந்தது. அன்று இரவு சாப்பாட்டிற்கு மூர்த்தி வரவில்லை. ஆனால், அவன் இருக்கிறானா என்று சந்தோஷம் விசாரிக்கவரும்

சினேகிதர்கள் ரஸிகர்கள் முதலியவர்களின் கூட்டம் கும்பல் கும்பலாக வந்து விசாரிப்பதைக்காண மாமியின் மனம் பின்னும் அதிக விசனத்தையடைந்து பொறுமையே கொண்டது.

நாட்கள் ஒன்று இரண்டு என்று நான்கு நாட்களாகி விட்டன. மூர்த்தியின் ஆபீஸிலிருந்தும் பலதரம் "மூர்த்தி ஏன் வரவில்லை? உடனே வரச்சொல்லவும்" என்று ஆள்மேல் ஆளாக வந்தது.

"இதென்னடா தொல்லை ராமு! மூர்த்தியைத் தேடிக் கொண்டு வருகிறவர்களுக்குப் பதில் சொல்லமுடியவில்லையே; அந்த தடியன் எங்கே போயிருப்பான்?" என்றாள் மாமி.

"ஆமாம் போகிறதற்கு இடம் எங்கு வைத்திருக்கிறது? இன்னும் யார் யாரைப்பார்த்து காக்காய் பிடிக்கவேண்டுமோ அதற்குப் போயிருப்பான். இன்னும் பல படங்களுக்கு ஆயிரம் ஆயிரமாய்ப் பரிசுவாங்க வழிதேடப்போயிருப்பான். என்னை அடியோடு மட்டம் தட்டிப் புதைப்பதற்கே கங்கணங் கட்டிக்கொண்டிருக்கும் மகாபாவி த்ரோகி எப்படிப்போனால் யாருக்கென்ன? நல்ல சனியனாக இந்த சண்டாளன் நம்ம குலத்திற்கு வந்துசேர்ந்தான்?...

நேற்று ஒரு முதல்தரமான படத்தை நான் எழுதி முடித்து ஒரு ப்ரபல பத்ரிகைக்குக் கொண்டுபோய்க் காட்டினேன். அந்த திமிர் பிடித்த தடியன் என்னை மூக்கை உடைப்பதுபோல் இளப்பமாகப் பேசிச் சிரித்ததோடு, இந்த அற்பாயுஸூப் பீடையின் படத்தை ச்லாகித்து ப்ரமாதப் படுத்திப் பேசியபோது என் மனம் என்னதான் கொதித்தது தெரியுமா? அம்மா! இனி ஒரே வார்த்தை. என்னுடைய தொழிலில் மண்ணைப்போட்ட படுபாவி இனி இவ் வீட்டில்... ஏன்,—இந்த ஊரிலேயே இருக்கக்கூடாது! அவன் இருந்தால் நான் கட்டாயம் சொல்லாமல் ஓடிவிடுவேன் அல்லது எந்த கையினால் அவன் சித்திரம் எழுதி என்னை வஞ்சிக்கிறானோ அந்தக் கையைக் கட்டாயம் நான் ஒடித்தே தீரப்போகிறேன்"...என்றுமுடிப்பதற்குள், "ஐயையோ! அப்படி ஏதாவது செய்து அசட்டுத்தனமாய் அகப்பட்டுக்கொள்ளாதேடா; அவனுக்குக் காலபலம் கட்டை துளிர்த்துவிட்டது. பத்து பேரிடம் மதிப்பும் அன்பும் பெற்றுவிட்டதால் அவனுக்குப் பரிந்துகட்டிக்கொண்டு வாதாடவருவதற்குக் கிளம்புவார்கள். நீ அப்படி எல்லாம் செய்துவிடாதேடாப்பா...உன் பிதா வந்தால் என்ன நடக்குமோ என்று பயமாயிருக்கிறது...

என்று பேசுகையில் தபால்காரன் சில கடிதங்களையும் ஒரு பெரிய பார்ஸலையும் கொடுத்துவிட்டுச்சென்றான். பார்ஸல் ஸ்ரீமதி மரகதம்மாள்...என்ற பெயருக்கிருந்தது கண்டு வியப்புடன் அதை முதலில் ராமுவே திறந்துபார்த்தான்.

என்ன ஆச்சரியம்! பலவிதமான சித்திரங்கள் சில பூர்த்தியானதும் சில பூர்த்தியாகாததும் சில ஆரம்பித்திருப்

பதுமான நிலைமையில் அப்படியே வைத்திருந்தன. பூர்த்தியான படங்களில் ராமு என்று கீழே சித்திரம் வரைந்துள்ளவர் பெயர் பதித்திருக்கக்கண்டு தாயும் மகனும் ஒன்றுமே புரியாமல் திகைத்து ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டு விழித்தார்கள். அந்தப் படங்களுடன் ஒரு சிறிய காகிதத்துண்டு இருந்தது. அதை வெகு பரபரப்புடன் பார்த்தான்.

மாமிக்கு வந்தனம். உங்கள் குடும்பத்தையும் ராமுவின் கலையையும் பகவான் ரக்ஷித்துவளர்க்கும்படி வேண்டுகிறேன். இனி சத்யமாக நான் உங்கள் ஆணைப்படி சித்திரம் வரைவதில்லை. என் கையை உடைக்காமல் விட்டதற்கு வந்தனம். என்னை ரக்ஷித்த உங்களுக்கு ஆயிரங்கோடி நமஸ்காரம். இனி, இக் கட்டையைப்பற்றித்தேடவோ, சிந்திக்கவோ வேண்டாம். 'மரம் வைத்தவன் தண்ணீர் வார்ப்பான்' என்கிற நம்பிக்கையைத் துணைகொண்டு நடக்கிறேன்.

தாஸன் மூர்த்தி.

என்றதைப்படித்ததும் ராமு ஒரு குதி குதித்து "அம்மா! ...என்று ஆர்ப்பரித்தான். ஆனால், மரகதத்தின் முகம்மட்டும் சற்று சுருங்கியது. "என்னடா ராமு இது? நீ என்னமோ குதிக்கிறாய்! உங்கப்பா வந்தால் என்னவாகுமோ பயமாயிருக்கிறதேடா! என்னமோ நீ அன்றுசெய்த கலாட்டாவில் அவனைத் துணிந்து கேட்டுவிட்டேன். இப்போது என் மனமோ ஏதோ செய்கிறதேப்பா!...என்றாள்.

ராமு:—சரிதான் போம்மா! ஏதோ செய்கிறதாவது. இலுப்பைக்காயாவது? எனக்குப் போட்டியாய் வஞ்சனையுடன் வேலை செய்தது குற்றமென்பதை அவனே உணர்ந்து தன் மனச்சாட்சியே குத்தியதால் இம்மாதிரி செய்துவிட்டு ஓடியிருக்கிறான். இதை நீ எதுவுமே தெரியாதபடி மறைத்துவிடு. மூர்த்தி எங்கே? எங்கே? என்று எல்லோரும் தேடி அலைவதுபோல் நாமும் அலைவதாக நடித்துவிடலாம். இந்தப் படங்களின் மூலம் நான் எப்படித்தான் முன்னுக்குவந்துவிடுவேன் தெரியுமா? நீ இதை இப்படியே நிறுத்திவிடு—என்று கூறிவிட்டுப் படங்களுடன் தன்னரைக்குப் போய்விட்டான்.

"மூர்த்திக்கு வந்துள்ளகடிதங்களை இனி எப்படி அவனிடம் சேர்ப்பது. அவைகளை என்ன செய்வது?"—என்ற கவலை அவளையறியாமல் எப்படியோ மனதில்புகுந்து வேலைசெய்யத் துடங்கியது. மேலும் ஒரு வாரமாயிற்று. எங்கு பார்த்தாலும் சித்திரத்தை ரஸிக்கும் வட்டாரங்களிலும் மற்ற அபிமானிகளிடையிலும் "மூர்த்தியைக் காணவில்லை" என்கிற செய்தி மிகவும் பரபரப்பை உண்டுபண்ணிவிட்டது. கேஸ் விஷயமாக வெளியே சென்றிருந்த மாமா திரும்பிவந்ததும் மூர்த்தியின் இந்த மகத்தான வெற்றியைப் பாராட்டி அவனை ஆசீர்வதிக்க, ஆவலுடன் "மூர்த்தீ!" என்று கூப்பிட்டார்.

இக் குரலைக் கேட்டதும் மரகதத்திற்குத் தூக்கிவாரிப் போட்டது. எந்தவிதம் தெரிவிப்பது? என்ன செய்வது?

என்று தோன்றாது ஒரு க்ஷணம் தயங்கினாள். இதற்குள் ராமுவே அங்கு ஓடிவந்து. "நீங்கள் எப்போது வருவீர்கள் என்று காத்திருந்தோம்பா. அப் பெரிய மனுஷனுக்கு ஆயிரம் ரூபாய் பரிசு வந்துவிட்டபெருமையில் கர்வமும் தலைக் கொழுப்பும் அதிகமாகிவிட்டதால் அம்மாவை அலக்ஷியம் செய்து தாறுமாறுமாய்ப் பேசி அவமதித்துவந்தான். அதை முதலில் நிஜமாகவே திமிரினால்தான் செய்கிறான் என்று எண்ணினோம். அதிக சந்தோஷத்தினால் மூளை கலங்கிவிட்டது என்று தெரிந்தது. திடீரென்று அந்த வேகத்தில் ஆள் எங்கு ஓடிவிட்டான் என்ற செய்தியே தெரியவில்லை. நாங்களும் பலஇடத்தில் தேடிப்பார்த்தோம். ஜோஸ்யம் கேட்டதில் ப்ராணபயமில்லை; க்ரகம் போதாத நிலைமையில் இருப்பதால் இப்படிக் கொஞ்சகாலம் படுத்தும்; பிறகு சரியாகி விடும் என்றும், இப்போது எங்கு தேடியும் அகப்படமாட்டான் என்றும் சொல்லிவிட்டார்.

என்று கூறுவதைக் கேட்டதும், "என்ன! என்ன! பயித்தியம் பிடித்து விட்டதா? மூர்த்திக்கா! ஐயையோ? அந்த ஆயிரம் ரூபாயை என்ன செய்தான்...என்று முடிப்பதற்குள் "ஐயோ! அதைக்கிழித்தெரியப்போனான். நான் தற்செயலாகப்பார்த்து அதை வாங்கி உள்ளே பத்திரமாக வைத்தேன்... இதோபாருங்கள்....என்ன இருந்தாலும் அவனுக்கு வந்துள்ள புகழுக்கும் கீர்த்திக்கும் திடீரென்று இப்படி மூளைகலங்கிவிட்டது என்பதை வெளியாரறியச் செய்தால் அவனுக்கு அதனால் நன்மை உண்டாகாது. எங்கோ வெளியூருக்குச் சென்றிருப்பதாகவே நாங்கள் சொல்லிவருகிறோம். நீங்களும் அப்படியே சொல்லுங்கள். கூடிய சீக்கிரம் தெளிந்து விடும் என்று ஜோஸியன் சொல்வதால் பயப்படாமல் இருக்கலாம்...என்று இதை இப்படியே அடக்கிவிடுவதே நல்லது; ஆகையால் நீங்களும் பேசாலிருங்கள்" என்று தானே முந்திக்கொண்டு மாமியே சொல்லி அவரைச் சமாதானம் செய்துவிட்டதாகத் தனக்குள் தான் சமாதானமாகிவிட்டாள். சற்றுமுன்புபயந்திருந்ததெல்லாம் இப்போது தெளிவு உண்டாகியது. இதற்குக் காரணம் தன் மகனுடைய சமயோசித புத்தியல்லவா! என்று தன் குற்றத்தை அடியோடமறந்து அதையே உயர்வாக எண்ணி மகிழ்ந்தாள்.

ஆனால், இடை இடையே ஒரு ஆழமான எண்ணம் மின் வெட்டுப்போல் தோன்றி, "நீ செய்வது சரியா? உன் மனத்தையே நீ தொட்டுப் பாரு. உன் மனச்சாட்சி என்பது மறைந்து விட்டதா? அந்த நிரபராதி உத்தமனுக்கா பயித்தியம்? அவனைத்துரத்திய காரணப் பேய் நீயல்லவா?" என்று மனச்சாட்சி இடித்துக்காட்டும்பொழுது குபீரென்று பயம் தோன்றி தேகம் வெயர்த்து விலுவிலுத்து முகம் மாறி க்ஷண நேரம் தத்தளிக்கும்; ஐயோ! இதனால் என்னவாகிவிடுமோ?

என்றும் உடனே தோன்றி வதைக்கும். தன் மகனுடைய வளர்ச்சியையும் அவன் சந்தோஷமாயிருக்கவேண்டும் என்பதையும் எண்ணி பாபத்தையே மறந்து மனச்சாட்சிக்கு விரோதமாய் நடப்பதில் ஈடுபட்டுவிடுகிறாள்.

இப்படியே பின்னும் சில வருஷங்களாகிவிட்டன. ராமு, மூர்த்தியின் சித்திரங்களை தன் சொந்தப்பெயரால்சில பத்திரிகைகளுக்கு அனுப்பி புகழும், பணமும் சிறிது சம்பாதித்துக் கொண்டான். எனினும்,மூர்த்தி சில படங்களை பூர்த்திசெய்யாமல் விட்டிருந்ததை ராமு பூர்த்தி செய்து அனுப்பியதெல்லாம் மறுபடியும் சரணாகதி செய்துகொண்டு ராமுவுக்கே திரும்பிவிட்டன. அதுமட்டுமின்றி, அதோடு "முதல் இரண்டு படங்கள் மிகவும் நன்றாயிருந்தன. அதிலும் தாஸன் படச் சாயலாய் அழகாய் இருந்ததால் எடுத்துக்கொண்டோம். இந்த படங்கள் யாரோ கற்றுக்குட்டி எழுதியதுபோல் அளவும் கலரும் அமைப்பில்லாமல் குழந்தைகள் கிறுக்குவது போலிருக்கின்றன. நல்ல பழக்கம் உண்டாகியபிறகு எழுதியனுப்பினால் பார்க்கலாம்" என்ற கடிதமும் கூட வந்ததைக் கண்டு ராமுவுக்கு மனம் உடைந்தது. மூர்த்தியின் படத்தை ப்ரத்யேகமாகச் சொல்லியிருப்பதைக்கண்டு பொறாமைத்தீ மேலும் பரவியது.

9

சுபநலச்செருக்கும் சூக்ஷ்ம சக்தியும்

எந்த ஹரிதாஸரிடம் மூர்த்தி படித்ததற்கு குற்றங் குறைகள் கூறி, திட்டு, ஜாதி வித்யாஸம், முதலியவைகளைக் கூறி மூர்த்தியை இம்ஸித்தாளோ அந்த மகாராஜி தன் மகனை அவரிடமே அனுப்பி அவரிடமே சித்திரக்கலையை நன்றாகப் பயின்று மூர்த்தியைப்போல் முன்னுக்கு வரவேண்டும் என்று ஞானம் பிறந்துவிட்டதால்,அந்த ஆசாரமும் கட்டுத்திட்டமும் மலையேறிப் போய்விட்டன. ராமுவும் ஹரிதாஸரிடம் தான் மூர்த்தியின் உறவினன் என்பதைச் சொல்லாமலேயே மூர்த்தியைப் பற்றிய வார்த்தைகளை எடுக்காமலேயே தான் புதிய மனிதனாகவே நடித்து வேலையில் கண்ணுங் கருத்துமாய்க் கற்றுவந்தான்.

ஹரிதாஸர் அடிக்கடி மூர்த்தியைப் பற்றிப் பேசுவார். "...இன்று அத்தகைய சுத்த வீரனை அஸகாய சூரனை, கை தேர்ந்த கலாவல்லவனைக் காணவில்லையே. அவன் இதுவரையிலிருந்தால் அடாடா! எத்தனை இன்னும் மேல்நோக்கிச் சென்றிருப்பான்? அவனை வெல்கிறவர்கள் உண்டா! அவனிடம் நான் கூடவன்றோ தோல்வியை அடைந்துவிடுவேன். எந்தப் பாவிகளோ அவனை ஏதோ செய்துவிட்டதனால்தான் அவன் திடீரென்று இப்படி மறைந்திருக்கிறான். அவனுடைய

அறிவையும் திறனையும்கண்டு அவனை எந்த சண்டாளர்களோ கொலையே செய்துவிட்டார்களோ! அன்றி வேறு என்ன துன்பத்திற்கு இலக்காக்கிவிட்டார்களோ! ஏதோ ஒரு விபத்தில் சிக்கிவிட்டதால்தான் இத்தகைய மேதாவியை நாம் பிரிந்திருக்கவேண்டி வந்துவிட்டது. இந்த வதை அவர்களுக்கு வீண்போகாது. அவனுடைய கைத்திறன் எனக்கு நன்றாகத் தெரியும். அவன் எழுதிய படத்தையே யாரோ ஒரு அப்பாவி தன் பெயரால் ப்ரசுரம் செய்திருப்பதை நான் பார்த்தேன். என்னுள்ளம் எப்படித்தான் கொதித்தது தெரியுமா? அந்த ப்ரகஸ்பதியைத்தானே இம்மாதிரி ஒரு அத்புத சித்திரத்தை எழுதும்படி நேராக உட்காரவைத்துக் கேட்டால் வண்டவாளம் வெளியாகிவிடும்!...உம்!...கடவுள் இந்த அக்ரமங்களைக் கவனிக்காமலா இருப்பார்? அந்த சாந்தஸ்வரூபியை பரிபவம் செய்தவர்களின் மனச்சாட்சியே அவர்களைக் குத்திக் காட்டாமல் போகாது...

"மாணவர்களே! தாஸன் என்கிற பெயரால் சித்திரம் வரைந்துவந்த வீரனை நீங்கள் யாராவது பார்த்திருக்கிறீர்களா!" என்று ஒரு கேள்வியைக் கேட்கும்போது அவர் கண்களில் ஜலம் முட்டிவிட்டது. அனேக மாணவர்கள் பார்த்ததில்லை என்றார்கள்; சிலர் பார்த்திருக்கிறோம்.என்ன,"சார்! வெகுநல்லவர்;உரத்து பேசமாட்டார்;அவருக்குத்தாய் தந்தை கிடையாது பாவம்! தாய்மாமன் வீட்டில் ஒரு அடிமைபோல் பல கஷ்டங்களையும் சகித்துக்கொண்டு வேலை செய்தவாறு இந்த உன்னதக் கலையைப் பயின்றாராம். ஸார்! அந்த மாமா வீட்டினர் மகா ராக்ஷஸர்களாம். அவர்கள்தான் தாஸனை ஏதோ செய்துவிட்டார்கள் என்றுகூடச் சிலர் பேசிக்கொள்கிறார்கள்" என்று ஒரு மாணவன் தைரியமாய்ச் சொல்வதைக் கேட்ட ராமுவின் இதயம் துணுக்குற்றது.

அவனையறியாது ஏதோ ஒருவிதமான பயமும் நடுக்கமும் வாட்டிவதைத்தது. "அடுத்தபடியாக உன்னைக் கேள்விகேட்டால் நீ என்ன சொல்வாய்! திருடா! நீயல்லவா பெரும் கிராதகன்? நீயல்லவா அவன் வாழ்க்கையை இருள்மூடச் செய்தாய்? ஏன் விழிக்கிறாய்?" என்று அவன் மனச்சாட்சியே அவனைக் குத்திக் கொலைசெய்வதால் முகத்தில் அசடு வழிகிறது. தாஸனுடைய படத்தைத் தான் தன் பெயருடன் ப்ரசுரித்தவன் என்பது தெரிந்துவிட்டால் தனக்கு எப்படி இங்கு மதிப்பு உண்டாகும்...என்கிற பலபல கேள்விகளே மனத்தில் பெரும் போர்செய்ததால் கும்பலில் மெல்ல எதையோ எடுக்கப்போகிறவன்போல் நழுவிவிட்டான்.

நேரே அலைகுலைப வீட்டிற்கு ஓடிவந்தான். வீட்டு வாசலில் ஒரே கூட்டம். போலீஸார் வேறு காணப்பட்டார்கள். இதைக் கண்டதும் ராமு கதிகலங்கியவாறு "என்ன! என்ன!" என்று விசாரித்தான். பட்டப்பகலில் இரண்டு திருடர்கள்

வெகு கண்ணியமான உடையில், "வக்கீலைப்பார்க்கவேண்டும். முக்கியமான வழக்கு விஷயமாய் அவரிடம் பேசவந்தோம். அவர் 'இதோ பின்னாலேயே வருகிறேன். வீட்டில்போய் உட்காருங்கள்' என்று சொல்லியனுப்பினார்" என்று சொல்லிக் கொண்டு வந்தார்களாம்.

மரகதம்மாள் எப்படியாவது தம் வீடு தேடிப் பெரிய கட்சிக்காரர்கள் வந்தால்போதும் என்ற பேராசையுடனிருந்த தால் அவர்களை ஆபீஸ்ரூமில் உட்காரச் சொல்லிவிட்டுத் தான் வேலையைக் கவனிக்கச் சென்றுளாம். வந்தவர்கள் வீதிக்கதவைத் தாளிட்டுக்கொண்டு உள்ளே புகுந்து மரகதத்தைக் கட்டிப்போட்டுவிட்டு, நகைகள், பாத்திரங்கள், பெட்டியை உடைத்து அதிலுள்ள பணம் முதலிய சகலத்தையும் கொள்ளையடித்துக்கொண்டு தாம் வந்த காரிலேயே போய் விட்டார்களாம்.

பள்ளிக்கூடத்திலிருந்து பசங்கள் வந்தபிறகுதான் இந்த அக்ரமக் கொள்ளையின் விவரத்தை அக்கம்பக்கத்தினர் அறிந்து கும்புகூடி இருக்கிறார்கள். போலீஸார் வந்துதான் மரகதம்மாளைக் கட்டவிழ்த்தார்களாம். அவளுடைய நிலைமை மிகவும் மோசமாய்விட்டதாம். கத்த முடியாமல் வாயில் துணியைத் திணித்திருந்ததால் மூர்ச்சையே யடைந்து கிடந்தாளாம். அவளை ஆஸ்பத்ரியில் விட்டிருக்கிறார்கள். தகப்பனாருக்குச் செய்திபோய் அவரும் வந்துவிட்டார்...என்ற தகவலை ராமு அறிந்ததும் எரிமலையே அவன் தலையில் புரண்டு விட்டதுபோன்ற அதிர்ச்சி உண்டாகித் துள்ளினான். 'எளியாரை வலியாரடித்தால் அவ்வலியாரைத் தெய்வமடிக்கும்' என்கிற பழமொழிப்படிக்கு அந்தப் பரதேசிப் பையனை ஆட்டிய ஆட்டத்தையும் கடைசியாய் அவனை எப்படியோ துரத்தியடித்துவிட்ட மகா கொடுமைக்கும் பகவான் சரியான படிதான் தண்டனை விதித்தார். வேணும்! வேணும்! மூர்த்தியைக் கொன்றுதான் புதைத்திருக்கவேண்டும். இல்லாவிட்டால் எப்படி திடீரென்று மறைந்து மாயமாய்ப் போய்விடுவான்? பிறருக்குச் செய்யும் வதையும் த்ரோகமும் சும்மா போய்விடுமா? இந்த ராக்ஷஸியையும் அடக்கிக் கட்டிப்போட்டு சரியானபடி சிக்ஷை விதித்துவிட்டான் பகவான்...

என்று அக்கம்பக்கம் உள்ள ஜனங்கள் பகிரங்கமாகச் சொல்லும் வார்த்தைகள் ஒவ்வொரு அக்ஷரமும் ஒவ்வொரு அம்புபோல்—கூறிய ஈட்டிபோல்—குத்தி ராமுவைச் சகிக்க முடியாத வதை செய்கின்றன. அவனையும் மீறி அவன் மனச்சாட்சியே இந்த பொதுமக்களின் வாசகத்தைக் கூறி இடித்து இடித்துக்காட்டுகிறது.

சற்று முன்புதான் ஹரிதாஸர் வகுப்பில் கூறிய வார்த்தைகளும் 'கணீர் கணீர்' என்று மறுபடியும் காதில் ஒலிக்கின்றன. இத்தகைய தர்ம சங்கடமான நிலைமையில் செய்வது

அறியாது ஆஸ்பத்ரிக்கு ஓடினான். ப்ரக்ஞை யற்றுக் கிடக்கும் தன் தாயைப் பார்த்ததும் எங்குமில்லாத துக்கம் பீறிக்கொண்டு வந்துவிட்டது. "அம்மா!" என்று சிறிய குழந்தையைப்போல் கதறினான்.

அதே சமயம், இத்தகைய பெற்றதாயை இழந்து தாயின் அன்பைத் துறந்து தன் அன்னையிடம் திட்டும் உதையும் வாங்கிக்கொண்டு சதா கண்ணீர்விட்டுக் கலங்கித்தவித்த மூர்த்தியின் பிம்பமும் நினைவும் அவனை அறியாது கண்முன்பு தோன்றியது. இன்னதென்று விவரிக்க இயலாத நிலைமையில் தவிக்கிறான். அவனுக்குச் செய்த த்ரோகந்தான் இப்படியாகி விட்டதா? 'கலிகால தெய்வம் கண்மூடியல்ல. உடனே கை மேல் பலனைக் காட்டிவிடும்' என்கிறார்களே! இது தானோ அந்தக் கொடுமையின் பலன்? நானும் மூர்த்தியைப்போல் அம்மாவை இழந்து பரதேசியாகிவிடுவேனோ?...அம்மா... அம்மா!...என்று கூப்பிட்டு முகத்தோடு முகம் பதித்துக் கொண்டான். ஆகா! தாயின் அன்பிற்கு ஒரு கரை காண முடியுமா? தன் மீதுள்ள மகத்தான வாத்ஸல்யத்தினாலன்றோ மூர்த்தியின் வாழ்க்கைப் பாலத்தை உடைத்தெறிந்து அந்த பாதகத்தினால் தன் குடும்பத்தையும் நாசமாக்கிக்கொண்டாள். நான் தற்கொலைபுரிந்து கொள்வேன், மூர்த்தியையே துலைத்து விடுவேன் என்று மிரட்டி ஆத்திரத்தில் அனர்த்தத் தாண்டவம் ஆடியல்லவா ஏற்கெனவே வஞ்சகம் நிறைந்திருந்த இவள் உள்ளத்தைப் பின்னும் நஞ்சாக மாற்றினேன். மூர்த்தியின் கண்ணீரும் வயிறெரிந்த சாபமும் வீணாகுமா? ஹரிதாஸர் யாரோ ஒரு முன் பின் அறியாத ஹரிஜன். அவர் அவனுடைய கலைத்திறனைக்கண்டு மட்டிலாமகிழ்வுடன் அன்பு செலுத்திக் கண்ணீர் விட்டுக் கலங்குகிறார். நான் ரத்தபாசம் உள்ள உறவினனாக இருந்தும் மூர்த்திக்கு முற்றிலும் த்ரோகத்தை இழைத்துவிட்டேனே. என் செய்கை எத்தகைய பயங்கரமானது. எத்தகைய கொடுமையானது! என்பது இப்போதல்லவா தெரிகிறது. அவன் எவ்வளவுபொறுமைசாலியாக இருந்திருந்தால்இத்தனை கொடுமை செய்ததையும் சகித்துக் கொண்டுதன்விதியை எண்ணிக்கலையில்முன்னுக்குவந்துஅந்த பணத்தையும்தன்னைஉதைத்தகாலிலேயே அர்ப்பணம்செய்து நமஸ்கரித்திருப்பான்? அதே மனுஷியின் அனியாய தண்டனையை சிரமேற்கொண்டு ஸ்ரீ ராமன் கைகேயியின் வார்த்தையைக் கேட்டுக்காட்டிற்குச் சென்றதுபோலும், சர்க்கரை தன் இனிப்பைப் பிறருக்குக் கொடுத்து விட்டுத் தான் கரைந்து உருகிஉருமாறி த்யாகத்தில்மூழ்கிவிடுவது போலும் தன்தொழிலையும் விட்டுத் தான் எழுதிய உன்னதச் சித்திரங்களையும் எனக்கேஅளித்துவிட்டுத்தான்மறைந்துவிட்டானே!...ஐயோ அவன் இப்போது எந்தகுளத்தில்,கிணத்தில் விழுந்துஉயிரை

விட்டு விட்டானே! அவன் மகாமானியாயிற்றே! விவேகியாயிற்றே! எத்தனை காலந்தான் சகித்திருக்க முடியும்? விடிவு, விமோசனம் உண்டாகும் என்றுஎண்ணி அவன் மகிழ்வதற்குள் அவன் வாழ்வில் மகாபாவி நானே மண்ணைப்போட்டுவிட்டேனே. அவனைக் கெடுத்து நான் வாரிக்கொண்டது ஒன்றுமில்லையே! இத்தனை தெளிந்த புத்தி இப்போது உண்டாகியது முன்பே இருக்கக்கூடாதா? இனி என்ன செய்வது?... என்று தனக்குள் பலபல எண்ணங்களில் குழம்பிப்போய் குப்புறப்படுத்தவன் தலையே தூக்கவில்லை. அவனைக் கெடுத்ததுமின்றி பயித்தியம் பிடித்துவிட்டது என்றல்லவா துணிந்து ஒரு பொய்யையும் அப்பாவிடம் சொல்லி சாதித்துவிட்டேன்? அந்த பயித்தியம் இப்போது எனக்கும் பிடித்துவிட்டால் இந்த உணர்ச்சிகள் எதுவுமே இல்லாதபடி நான் நிம்மதியை அடைந்திருப்பேனே?...என்று கண்கெட்டபிறகு சூரியநமஸ்காரம் செய்வதுபோல் எண்ணிக்கதறினான். திடீரென்று அவனுடைய ஜென்மமே புனர்ஜென்மம் எடுத்ததுபோல் மாறியது.

10

அற்பமனிதர்களுக்கு அதிசயப்படிப்பினை

மூர்த்தியின் சகோதரிகளுக்கு மூர்த்தி பணமனுப்பி வருவதற்குப் பிறகு எங்குமில்லாத மதிப்பு உண்டாகி அவனை அடிக்கடி ஆகாயத்தில் தூக்கி வைத்துத் தோத்திரம் செய்து கடிதம் எழுதிப் பணமனுப்பும்படித் தொணப்பினார்கள். மூர்த்திக்கு எத்தனை தூரம் தன் சகோதரிகளின் நிலைமை இருக்கிறது என்பது நன்றாகத் தெரிந்துவிட்டதால் அதை அவன் ஒரு திராசு நிறையில்தான் வைத்து வந்தான்.

மூர்த்தி மறைந்துவிட்டபிறகு மாமா தன் மகனும் மனைவியும் சாதனையாகக் கூறிய விஷயத்தையே மூர்த்தியின் சகோதரிகளுக்கு எழுதிவிட்டார். அக்கடிதத்தைக் கண்டு அவர்கள் கிணற்றில் கல்லைபோட்டதுபோல் மவுனம் சாதித்தார்கள். ஆனால், அவர்களுடைய கணவன்மார்களும் புக்கத்தினரும் "இதுவெறும் வேஷம். நீங்கள் அடிக்கடி பணம் கேட்கிறீர்கள். உங்களுக்குக் கொடுக்கவேண்டுமே என்கிறதற்காக இத்தகைய கற்பனையைச் செய்துவிட்டு ஓடிவிட்டான்" என்று குறையுடன் குற்றத்தையே ஸ்தாபித்தார்கள். யார் எப்படிச் சொன்னால் என்ன? காலம் எதையும் கவனியாமல் தன் கடமையைச் செய்து கடுவேகமாய் ஓடிக்கொண்டே இருக்கிறது.

திருடுபோன சொத்துக்களும் கிடைக்கவில்லை. திருடர்களும் அகப்படாததால், பாவம்...குடும்பத்தில் தத்தளிப்பு அதிகரித்துவிட்டது. மரகதம் சரியான நிலைமையடைந்து

வீட்டிற்குவந்து பார்க்கையில்அவள்குலேயே நடுங்கி கதிகலங்கி விட்டது. தான் படுத்தாதபாடு படுத்தியிருக்கையிலும் தன்னிடம் மதிப்புவைத்து மூர்த்திகொடுத்த ரூபாய்களைச் சேர்த்து வைரக்கம்மல், வைரமூக்குத்திகள், தங்கச் சங்கிலி, முதலியவைகள் செய்து போட்டுக்கொண்டு மினுக்கிய சகலமும் கொள்ளைபோய்விட்ட பரிபவத்தை எண்ணிப் புலம்புகையில் தன் கணவன் இடித்துஇடித்துக் காட்டி "போதுமாடி! ஒரு ஏழைப் பரதேசியை வதைசெய்து கசக்கிப் பிழிந்ததையும் அவன் பொருட்படுத்தாமல் ப்ரதி உபகாரமாய் உனக்குப் பணத்தைக் கொட்டியபோது உன் மனச்சாட்சியைமறந்து அந்தப் பணத்தினுல் நீ மகிழ்ந்து மினுக்கினுயே. அது பகவானுக்குப் பொறுக்கவில்லை என்பதும், உன் வினையே உன்னைச்சுட்டது என்பதும் இப்போதாவது உணர்ந்து புத்திவந்ததா? இந்தப் பெருங்கொள்ளையாவது உனக்குப் படிப்பினையாகியதா! என்று சதா தேள் கொட்டுவதுபோல் கொட்டுவதை அவளால் சகிக்கமுடியவில்லை. வீட்டிலிருந்த மதிப்பான ஆடைகள் ஆபரணங்கள், பாத்திரங்கள் முதலிய சகலமும் போய்விட்டதால்,இனி எந்த பாடுபட்டால் தான் அவைகளைச் சம்பாதிக்கமுடியும். இனிமேல் இந்த பட்டினவாஸத்தில் ஆடம்பரமாக வீடு வைத்துக்கொண்டு வாழ்க்கை நடத்தவோ கம்பீரமான உடையுடன் உலாவவோ வழியற்றுவிட்டதால்,அந்த ஊரையேவிட்டு வேறு சிறிய க்ராமம்போன்ற இடத்தில் சிறியவீட்டில் குடியேறி சகலவிதத்திலும் சிக்கனத்துடன் வாழ்க்கையைத் தொடங்கினுள் பாவம்!

ராமுவின் மனம் நொந்து உடைந்துவிட்டதுமுதல் எந்த வாயால் மூர்த்திக்குப் பயித்தியம் பிடித்துவிட்டது என்று சொன்னுனே அதே மனுஷ்யனுக்கு ஒருமாதிரிக் கலக்கம் உண்டாகிவிட்டதால் படிப்புக்கும் சித்திரக் கலைக்கும் முற்றுப் புள்ளி விழுந்துவிட்டது. சதா ஏதோ ப்ரமைபிடித்தவன் போல் உட்கார்ந்திருப்பதும், "நான் செய்தது மகா அபராதமல்லவா? ஆமாம்! என்னிதயம் உணர்ச்சியற்று வரண்ட பாலைவனமாகிவிட்டதால் இத்தகைய கொடுமையைச் செய்தேன்...என் மனச்சாட்சியே என்னைக் கொன்றுவிட்டது. ஆனல், நான் இறந்துபோகவில்லை. உயிருடன்தான் இருக்கிறேன். என் ஆசை, என் கலை, என் துர்க்குணம், பொருமை, சகலமும் இறந்துவிட்டன..." என்று தனக்குத்தானே சொல்லிக் கொள்வது, காகிதத்தில் எழுதி எழுதி கிழிப்பது...மற்றபடி இஷ்டமிருந்தால் சாப்பிடுவது, இல்லையேல் பேசாமல் உட்கார்ந்திருப்பது என்கிற பரிதாபகரமான நிலைமையில் அவன் வாழ்வு அமைந்துவிட்டது.

எத்தனையோ விதத்தில் பெற்றேர்கள் தைரியம் சொல்லித் திருத்தப்பார்த்தும் அது முற்றிலும் சாம்பலில் செய்த ஆஹுதிபோலாகிவிட்ட சங்கடத்தைக்காணக்காண மாகதத்

தின் உள்ளம் துடி துடித்து, தேகம் குன்றிவிட்டது. குடும்பத்தின் பாரத்தைத் தாங்காமல் பட்டினியும் பசியும் வறுமைப் பேயின் தாண்டவத்தின் பயங்கரமும் பூர்ணமாகப் பிடித்து ஆட்டுவதால் மனம் உருகி தன் மகனை "எங்காவது குமஸ்தா வேலைக்கேனும் போனால் கால் வயிறு கஞ்சி கட்டாயம் கிடைக்குமே. ராமு! இப்படி இருந்தால் என்னப்பா செய்வது? எங்காவதுபோய் வேலைக்கு ப்ரயத்தனப்படு. உன் தங்கை ஜெயாவுக்கு 22 வயதாகிவிட்டது. அவளை எப்படியாவது கல்யாணம் செய்து யாருக்காவது தள்ளவேண்டாமா? இப்படியே வறுமையில் குடும்பம் அழுந்திவிட்டால் என்ன செய்வது? உன் மாமாவும் போன இடம் தெரியாமல் ஓடிவிட்டான். காலத்தின் கோலம் இப்படி இருக்கிறதே! என்ன செய்வது ராமு? நீ இப்படி சதா ப்ரமைபிடித்தமாதிரி இருந்தால் குடும்பம் பின்னும் நசித்துத்தான் போய்விடும். அதனால் உனக்கு இன்னும் பாபமல்லவா உண்டாகும்?" என்று சதா சொல்லித் தூண்டுகோல்போட்டு அவனை வீட்டைவிட்டு வெளியில் கிளம்பச் செய்தாள்.

பகல் 12 மணி வெயில் தகிக்கின்றது. அந்த சமயம் ராமு புஷ்பபுரி பெரிய ஷாப்புகள் உள்ள தெருவில் ஏறிஇறங்கித் தனக்குவேலை கிடைக்குமா என்று விசாரித்துவந்தான். க்ருஷ்ணாகம்பெனி, இரும்பு வியாபாரம் என்று போர்டுள்ள இடத்திற்குச் சென்று முதலாளியைக் கண்டு வணங்கி...சார்! எனக்கு ஒரு குமஸ்தாவேலை யிருந்தால்கூடப் போதும்; கொடுத்து உதவவேண்டும். என்று பரிதாபமாகக் கேட்டான்.

இவனைப் பார்த்தவுடனே அந்த முதலாளி சற்று உற்றுக் கவனித்தார்... "ராமு! நீ சிதம்பரநாதருடைய மகன் ராமு வல்லவா?"...என்று அலறியவாறு கூறிக்கொண்டே எழுந்து ராமுவைஉட்காரவைத்தான். ராமுவுக்கு ஒன்றுமே தோன்றாமல் ஏற்கெனவே இருந்த ப்ரமையும் குழப்பமும் அதிகரித்து ...நீங்கள்...என்னை எப்படித் தெரிந்துகொண்டீர்கள்...நான் ராமுதான்...உங்கள்...என்று விழித்தான்.

ராமு! உங்களாவது, எங்களாவது? நீ என்னைத் தெரிந்துகொள்ளவில்லையா? ..நான் மூர்த்தி என்பதை மறந்து விட்டாயா? ஏன் இப்படி விழிக்கிறாய்? நீ சித்திரக் கலையில்...

அவ்வளவுதான்; ராமுவின் நிலையே புரண்டுவிட்டது! ஆஜானுபாகுவாய் அடையாளமே தெரியாமல் கம்பீரமாய் உட்கார்ந்துள்ள மூர்த்தியை இவன் எப்படித் தெரிந்து கொண்டிருக்க முடியும்? மூர்த்தியின் குரலைக்கேட்டும் அவன் வார்த்தைகளைக்கேட்டும்அப்படியே பரவசமுற்று"மூர்த்தி"... என்று அவன் காலடியில் நெடுஞ்சாண்கிடையாய் விழுந்து கெட்டியாகப் பிடித்துக்கொண்டு கதறிவிட்டான். மூர்த்தி அவனைத் தூக்கி நிறுத்தி "என்னப்பா சமாசாரம்? நீ ஏன் இப்படிச் செய்கிறாய்? எதனால் நீ இம்மாதிரி மெலிந்துவிட்

டாய்? நீ ஏன் குமாஸ்தா வேலைக்கு வந்திருக்கிறாய்? உன் சித்திரக்கலை என்னவாயிற்று? அப்பா, அம்மா சவுக்யமா?" என்று அடுக்கடுக்காய் கேட்டான். சில நிமிஷங்கள் ராமுவால் பேசவே முடியவில்லை. கண்ணீர் தாரை தாரையாக வழிகிறது. "மூர்த்தி......மூர்த்தி......எங்களை மன்னிப்பாயா? என்னை மன்னிப்பாயா? ஐயோ! உனக்குச் செய்த த்ரோகத்தின் பலனை பரிபூர்ணமாக அனுபவித்துவருகிறோம். சித்திரமாவது சித்திரம்? எங்கள் வாழ்வே சத்திர வாழ்வாகி விட்டது. மூர்த்தி! நீ இத்தனை நாள் எங்கிருந்தாய்? இப்பவே என்னுடன் வீட்டிற்கு வா...மூர்த்தி...இப்பவே வந்து எங்களை மன்னித்து எங்கள் இதயங்களிலுள்ள புண்களை ஆற்று... வாயேன்!" என்று கதறியவாறு சகல விவரங்களையும் கூறினான்.

இதைக்கேட்ட மூர்த்தி கண்ணீர் பெருக ராமுவைத் தட்டிக்கொடுத்துத் தேறுதல் கூறிப் பின்பு உடனே அவனுடன் கிளம்பினான். பெருந்தன்மையான மூர்த்தியின் குணத்தழகின் ப்ரகாசமும் அவனுடைய அபரிமிதமான அன்பும் கண்டு ராமுவின் மனம் கூசிக் குழைந்தது.

11

பணத்தின் ஆசையும் ப்ரகாச உள்ளமும்

திடீரென்று ஜுரம் காய்கிறது. மாமி கயிற்றுக் கட்டிலில் சுருண்டு படுத்திருந்தாள். "அம்மா! அம்மா...அட்தான் சவுக்யமாக இருக்கிறான். இதோ அழைத்துக்கொண்டு வந்துவிட்டேன். அத்தானைப் பாரு. அடையாளமே தெரியவில்லை" என்று தன் தாயாரிடம் கூறிவிட்டு ராமு ஓடிப்போய் காப்பி, பலகாரம் சகலமும் வாங்கிவந்து தன் சகோதரி ஜெயாவிடம் கொடுத்து அவனைக் கொண்டு கொடுக்கச்செய்தான்.

இதற்குள் கிருஷ்ணமூர்த்தி "மாமீ! நமஸ்காரம். உங்கள் ஆசீர்வாதத்தினால் நான் சவுக்யமாயிருக்கிறேன். உங்களுக்கென்ன உடம்பு?"...என்றான். மரகதம் இந்த இருவருடைய வார்த்தைகளைக் கேட்டதும் அலறியடித்துக்கொண்டு எழுந்து "ஹா...என்னப்பனே...மூர்த்தீ! மூர்த்தீ!" என்று அலற்றியவாறு அவனைச் சேர்த்துக் கட்டிக்கொண்டுதேம்பித் தேம்பி அழுதபடி "அப்பா! உன்னைச் செய்த கொடுமைகளை நான் பரிபூர்ணமாய் அனுபவித்துவிட்டேன். என்னப்பனே! உன்னைப் பார்த்ததே போதும்!...உன் வாழ்வைப் பாழாக்கிய மகா பாவி என்னை பகவான் சரியானபடி சிக்ஷித்து என்னைப் பழுக்கக்காய்ச்சிய சூட்டுக்கோலால் சூடி என்திமிரை அடக்கிக் கிழமாக்கிவிட்டான்..என் குற்றங்களை மன்னிப்பாயா? என்

மனச்சாட்சியே என்னைக் கொன்றுவிட்டது. என் ஜென் மத்தில் நான் செய்த மிகக் கடுமையான பாபத்திற்கு நான் திருடனால் தண்டிக்கப்பட்ட ஒன்றே போதும்!” என்று பேசமாட்டாது பேசிக் கலங்கினாள்.

கிருஷ்ணமூர்த்தி விசனமே வடிவாய் “மாமி! எல்லாம் காலத்தின் கோலம். நீங்கள் கவலைப்படாதீர்கள். பகவான் என்னை எத்தனையோவித கஷ்டங்களுக்கு ஆதியில் இலக்காக் கியபோதிலும் அடித்த கையே அணைப்பதுபோல் என்னைப் பரிபூர்ணமாய் கருணையுடன் கடாக்ஷித்துக் காத்துவருகிறார். நீங்கள் என்னைக் கடைசிதரமாக அனுப்பிய அன்று நான் என்வாழ்நாளையே முடித்துக்கொண்டு கடலில் விழுந்து மாண்டுபோகவே நிர்மானித்துச் சென்றேன். பகவானே ஒரு விபத்தையும் கொடுத்து அதன்மூலம் ரக்ஷணத்தையும் காட்டி ஆதரிப்பதை என் வாழ்நாளில் டைபாய்டு ஜுரத்தில் கண்டேனே, அதுபோல் அன்று நான் என்னையே வெறுத்துச் செல்கையில் ஒரு பேங்காலி மனிதரின் காரில் அகப்பட்டுக் கொண்டு சிறிது காயமடைந்தேன். அந்தப் புண்ணியவான் என்னைத் தம் வீட்டிற்கே கொண்டுபோய்க் குணப்படுத்தித் தம் கம்பெனியில் என்னை வைத்துக்கொள்ள கல்கத்தாவுக்கு அழைத்துச்சென்றார்.

‘காக்காய் ஏறியதும் பனம்பழம் விழுந்ததும் சரியானது’ போல் நான் கம்பெனிக்கு வந்தவேளை வ்யாபாரம் வெகு நன் றாக நடந்தது. யுத்தமும் சேர்ந்ததால் இரும்பு வ்யாபாரத் தின் உயர்வு உச்சத்தை எட்டியது. ஏதோ நான் கவலையற்று இருக்கிறேன். இந்த ஊரில் சென்றவாரம்தான் என் பெயரி லேயே கிருஷ்ண கம்பெனி ஆரம்பித்து என்னையே அதற்குப் பொறுப்பாளியாக அனுப்பினார். சென்ற வாரந்தான் வந்து சேர்ந்தேன்”...என்று பேசும்போது மரகதத்தின்மகள் ஜெயா, சற்று அலங்காரமும் செய்துகொண்டு காப்பி டிப்பன் முதலி யன கொண்டுவந்து கொடுத்தாள்.

கிருஷ்ணமூர்த்தி மரியாதையாக அதைச் சாப்பிட்ட படியே “மாமி! இனி நீங்கள் கஷ்டப்படவேண்டாம்! இந் தாருங்கள்.” என்று 5 ஆயிரம் ரூபாயை அப்படியே மாமி யிடம் கொடுக்கையில் மாமாவும் வந்துவிட்டார். ஆதியில் தான் பயித்தியம் என்று பொய் சொல்லிய அக்ரமம் மனதைக் குத்திக்கொண்டிருந்ததால் தான்செய்த கொடு மையின் உண்மையை தாயும் மகனும் மூர்த்தியின் எதிரி லேயே ஒப்புக்கொண்டுவிட்டார்கள்.

மாமாவின் ஆனந்தத்திற்கு எல்லையே இல்லை. மருமானைச் சேர்த்தணைத்துக்கொண்டு வாழ்த்தினார். தன் மகனும் மனைவி யும் எத்தனை தூரம் இந்தப் பரதேசியைப் பாடுபடுத்தி

விட்டார்கள்! தெய்வ பலமும் ஜெயமும் யாரிடம் இருந்தது பாருங்கள்!--என்பதைஅவர்களுக்குக்குத்திக்குத்திக்காட்டினார். "நான் போய்வருகிறேன்! நீங்கள் என் வீட்டிற்கு வாருங்கள்; என்னாலான உதவியைச் செய்ய என்றும் தயாராயிருக்கிறேன்" என்று கூறி மூர்த்திவிடைபெற்றுச் சென்றான்.

இனி கேட்கவேண்டுமா? கிருஷ்ணமூர்த்தியின் உயர்ந்த பதவியையும் க்ஷேமத்தையும் உடனே மூர்த்தியின் சகோதரிகளுக்கு எழுதி, தமது பெருமகிழ்ச்சியைத்தெரிவித்துவிட்டார். அவ்வளவுதான்! கிருஷ்ணமூர்த்தியிருக்கும் பங்களாவில் ஒரே கஜகஜவென்று ஜனங்கள் குழுமிவிட்டார்கள். "ஏண்டாப்பா



...கண்ணு!"...என்பவளும்..."ஏண்டாப்பா தம்பி!" என்பவளும்'என்னப்பா மூர்த்தி, எங்காத்துக்கு வாடா கண்ணு'...என்பவளுமாக சகோதரிகள்சிராட்டிப் பேசிக்குலாவவந்திருப்பதைக் காணக்கான மூர்த்தியின் ஆச்சரியத்திற்கு எல்லையற்றுவிட்டது. "நான் பணமற்ற அனுதையான நிலைமையிலிருக்கையில் நான் உறவு என்று சொல்லிக்கொள்ளவும் வெட்கப்பட்ட அதே மனிதர்களுக்குஇன்றுஎன் பணத்தையும் பதவியையும் கண்டு சிராட்டிப் பேசும் மனுேபாவம் வந்துவிட்டது உம்...என்ன உலகம்! என்ன மனிதத்தன்மை?" ...என்றுதனக்குள் வியப்புற்ருன்.

தான் ஒரு பழங்கதையில் படித்த சிறு கதைதான் இவனுக்கு நினைவிற்குவந்தது. நாலைந்து சிறிய பெட்டிகளை வாங்கிவந்தான். ஒவ்வொன்றிலும் பணத்தைவைத்தான். அதற்காவே சிராடும் சிமாட்டிகளிடம் கொடுத்து "அம்மணீ! இதோ! இதோடு பேசுங்கள். நீங்கள் மதிப்பது இதைத்தானே. இதற்காகவே நானும் பாடுபட்டேன்...அன்று திக்கற்ற நிலையில் இருந்த என்னை உங்கள் தம்பி என்று சொல்ல வெட்கப்பட்டீர்களே. அதே மனிதன்தான் நான். இன்று எனக்குக் கொம்பு முளைக்கவில்லை. நீங்கள் மதிப்புகொடுக்கும் தெய்வம் இதுதான். இதை அழைத்துச் சென்ருல் போதும்" என்று சற்றும் பயப்படாமல் சடக்கென்றுகூறினுன்.

அவர்களின் மனச்சாட்சி குத்தி வதைத்தது. "என் பெண்ணை மணக்கவேண்டும்...என் பெண்ணை மணக்கவேண்டும்" என்று சகோதரிகளும் மாமியும் கல்யாணத்திற்குப் போட்டியிடவாரம்பித்தார்கள். இதைக்கேட்க கிருஷ்ணமூர்த்திக்குப் பின்னும் ஆச்சரியமாகிவிட்டது..."அக்கா! மாமீ! நீங்கள் உங்கள் பெண்களை இந்தப் பெட்டிக்குத்தான் மணம் செய்து மகிழவேண்டும்! நான் அன்றிருந்த அதே ஏழைப் பரதேசி அனுதைதான். எனக்கென்று பகவான் ஒரு பெண்ணைப் பிறப்பித்து என் கண்முன்பாகவே வளர்த்து எனக்கு மனப்பூர்வமான மகிழ்வுடன் விவாகத்தைச் செய்து கொடுத்தாயிற்று. எனக்கு என் பெற்ருேரின் ஆசீர்வாதத்தினுல் ஒரு குழந்தைகூடப் பிறந்திருக்கிருன். அவர்கள் இன்றுதான் ஊரிலிருந்து வருவார்கள்...

என்றதைக் கேட்டதும்..."என்ன! என்ன! கல்யாணமாகிவிட்டதா?...ஐயையோ...இதென்ன கிருஷ்ணமூர்த்தி!" என்று திகைத்தார்கள் சகோதரிகள். மாமாமட்டும் பரம சந்தோஷத்துடன் மருமகனைத்தட்டிக்கொடுத்து "சபாஷ்! மூர்த்தி! நீ செய்ததுதான் சரி" என்று பேசிக்கொண்டிருக்கையில் வாசலில் கார் வந்து நின்றது.

சொர்ண விக்ரகம்போன்ற குழந்தையை இடுப்பில் எடுத்துக்கொண்டு மங்களம் மிகுந்த சாந்தமும் புன்முறுவலும் பூத்துக் குலுங்க இறங்கிவந்தாள். பின்னுலேயே கையில்

வெள்ளிக்கூஜாவைத் தூக்கிக்கொண்டு சமையல்கார காமாக்ஷியும் இறங்கிவந்தாள்.

கிருஷ்ணமூர்த்தி ஓடிச்சென்று தன் குழந்தையை ஆசையுடன் வாங்கி முத்தமிட்டுத் தன் மாமாவின் காலடியில் நமஸ்கரிக்கச் செய்தபின், "மங்களம்! இதோ இவர்கள் யார் என்று உனக்குத் தெரியாதல்லவா! என் தாயார் வயிற்றில் பிறந்தவர்கள். பணத்திற்குச் சகோதரிகள்; எனக்கல்ல...இவர்களைத்தான் உனக்குத் தெரியும்...என்று முடிப்பதற்குள் மரகதமும் மாமாவும் வந்தவர்களை உற்றுப்பார்த்துவிட்டு...காமாக்ஷியா...அவள் மகள் மங்களமா!...என்று உரத்துக்கூறி அவர்களையும் மூர்த்தியையும் உற்று உற்றுப்பார்த்தார்கள்.

இதற்குள் காமாக்ஷி "மாமி சவுக்யமா?"...என்று தன் பழைய பணிவான குணத்தையே காட்டிப்பேசி விசாரித்தாள்...."மாமா! நீங்கள் சந்தேகமே கொள்ளவேண்டாம். காமாக்ஷியம்மாளும் அவருடைய மகளுந்தான் இவர்கள். என்னை ஆதிமுதல் மதித்து உங்கள்வீட்டில் நான் நாய்போல் இருந்த காலத்தில்கூட என்னை மனிதனுகவேமதித்து, விபரீதமாக நான் படுத்திருந்த காலத்திலும் என்னைக் காப்பாற்றி, என் தாய்போல் உதவிபுரிந்த காமாக்ஷியம்மாளுக்கு என் மனப்பூர்வமாய் நான் செய்த உதவி இதுதான். என் மங்களத்தைவிட எனக்கு யாரும் உயர்ந்தவர்களல்ல. ஆகையால் அவளையே நான் தேடிச்சென்று மணந்துகொண்டேன். என் எஜமானர் அதை மிகவும் வரவேற்று தானே விவாகத்தை நடத்திவைத்தார். உடன்பிறந்த சகோதரன் பணமற்ற அனுதையாக இருக்கையில் மனிதனுக மதிக்கச் சம்மதிக்கவில்லை. மாமியும் அப்படியே! ஆனல், ஏராளமான பணத்தை நான் கடவுளருளால் பெற்றபிறகும் என் தாயாருக்குச்சமமான காமாக்ஷியம்மாளே எனக்கு ப்ரத்யக்ஷதெய்வமாகத் தோன்றினுர்கள். அவர்கள் மகளையே என் வாழ்க்கைத் துணைவியாக நான் விரும்பி ஏற்றுக்கொண்டேன். நீங்கள் ஆசிர்வதிக்கவேண்டும்...மங்களம்! எல்லோரையும் நமஸ்காரம் செய்"...என்றுன்.

ஒவ்வொருவருடைய முகமும் அகமும் ஒவ்வொரு ஏமாற்றத்தின் எதிரொலியில் தவித்தது. ஆனல், மாமாவின் மனச்சாட்சியும், ராமுவின் மனச் சாட்சியும் இந்த தெய்வத் தன்மையும் மணமும் கமழும் வாசகத்தைக் கேட்டு அபரிமிதமான ஆனந்தத்தை யடைந்து குதூகலித்து 'சபாஷ்' போட்டன. தம்பதிகளின் கனிந்த ப்ரேமைக் கனியின் அன்யோன்ய இனிப்பைக் கண்டு மாமாவின் கண்கள் ஆனந்தப் பெருக்கால் நிறைந்தோட, மனப்பூர்வமாய் வாழ்த்தி உச்சி முகந்தார். இதைவிட நித்யமங்கள கல்யாண வைபவ சுகம் அவருக்கு வேறு என்ன இருக்கிறது? மங்களம். சுபம்.

ப்ராயச்சித்தம் — 4-ம் பக்கத்தொடர்ச்சி

சாம்பலுக்கிடையே தமையன் தோண்டிக்கொண்டிருந்ததை ஒரு சிறுமி பார்த்துவிட்டாள். ஏற்கெனவே சகோதரர்களுக்கிடையே விரோதம் ஏற்பட்டிருந்ததால், போலீஸாரும் அண்ணன் மீது சந்தேகம் கொண்டு விசாரணைசெய்துபார்த்தார்கள். ஒன்றும் ருசு ஆகாவிட்டாலும் சந்தேகம் சந்தேகம்தானே?

தம்பிக்கும் அண்ணன் மீது சந்தேகம்தான். எனினும் அவன் அண்ணனைக் குற்றப்படுத்தி ஒன்றும் சொல்லிவிடவில்லை. மறுநாள் மாலை அண்ணன் தன் வீட்டிற்கு வந்ததும், அவன் பச்சாத்தாபத்துடன் வந்திருப்பதாகத்தான் தம்பியூகித்துக்கொண்டான். எனினும் அவ்வளவு பயங்கரமான குற்றத்தை மன்னிக்கமுடியுமா? பிறகு,சிறுமிபார்த்ததுபோன்ற தகவல்கள் அண்ணனேகுற்றவாளி என்பதைத் தம்பியுள்ளத்தில் உறுதிப்படுத்திவிட்டன.

நாளடைவில் தம்பி தன் வறுமைத் துன்பத்தை மறக்க உள்ளதையெல்லாம் விற்றுவிற்று மதுபானம் செய்துவந்தான். தமையனே அந்தப் பழக்கத்தில் சிக்கிக்கொள்ளாமலே வெறி கொண்டவனைப்போல்,பித்துப்பிடித்தவனைப்போல் மாறிவிட்டான்.

ஓரிரவில் ஏழைப்பெண் ஒருத்தி பார்ட் என்பவனின் இல்லத்திற்கு வந்தாள். கூர்ந்து பார்த்ததும் யார் என்று தெரிந்து விட்டது. தன் தம்பி மனைவிதான். அச்சத்துடன் பார்ட் அவளைப் பின்தொடர்ந்து சென்றான். ஓட்டைக் குடிசை; துர்நாற்றம் வீசியது. சிறுகுழந்தை ஒன்றுஒரு கரித்துண்டைத் தின்றுகொண்டிருந்தது. முகமெல்லாம் கரியாக இருந்தது. தாயைக் கண்டதும் அது நிமிர்ந்து பார்த்துச் சிரித்தது. அதன் வெண்பற்கள் முத்துப்போல் மிளிர்ந்தன.

படுக்கையில் கிடந்த ஆண்டர்ஸ் அண்ணனை நோக்கி விழித்தான். அண்ணன் நடுங்கிக்கொண்டே அருகில் உட்கார்ந்து கதறினன். இரண்டு சகோதரர்களும் ஒருவரை ஒருவர் உள்ளவாறு தெரிந்துகொண்டார்கள்.

கடிகார ஏலம் நடந்து எத்தனை வருஷங்கள் ஆகிவிட்டன! அவ்வளவு கதையும் பரஸ்பர அவநம்பிக்கையின் கதைதானே? இருசகோதரரும் அநாவசியமாகத் தங்கள் இன்பவாழ்வை பலி கொடுத்த வரலாறுதானே!

தம்பியால் அதிகம் பேசமுடியவில்லை. எனினும் அண்ணனின் மெய்யன்பு—தான் அறிந்துகொள்ளத் தவறிவிட்ட சகோதர அன்பு—ஏதோ புத்துயிர் அளித்துவிட்டதுபோலத்தோன்றியது. அவன் படுக்கையருகே அமர்ந்து பணிசெய்துவந்தது நோயைக் குணப்படுத்திவிட்டதுபோலவும் தோன்றியது.

ஒருநாள் காலையில் தம்பி அண்ணனைப்பார்த்து 'எனக்குக் குணமாகிவிட்டது, அண்ணா! இனி நாம் எப்போதும் ஒத்து வாழ்வோம்; இளமையில் ஒற்றுமை கொண்டிருந்ததுபோல மீண்டும் ஒன்றுபடுவோம். இனி நாம் ஒருவரை ஒருவர் பிரியமாட்டோம்!' என்றான். ஆனால் அன்றே அவன் மரணமடைந்தான்.

அப்பால் விதவையையும் குழந்தையையும் அண்ணன் தன் வீட்டிற்கு அழைத்துக்கொண்டுபோய்விட்டான். அவர்களுக்குத் தொண்டாற்றுவதில் முனைந்து நின்றுதான் தன் ஆருத இதயதாபத்தையும் ஒருவாறு ஆற்றிக்கொண்டான் பார்ட்.

இக்கதை எழுதிய பிரபல நார்வே ஆசிரியர் 19-ம் நூற்றுண்டின பிற்பகுதியிலும் இருபதாம் நூற்றுண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்தவர். நோபல் பரிசுபெற்றவர். இவர் சிறுகதை எழுத்தாள ராகத்திகழ்ந்ததுடன் நாவலாசிரியராகவும் நாடக ஆசிரியராகவும் கவியாகவும் விளங்கினர். இவருடைய சிறுகதைகள் வாழ்க்கையில் வேரூன்றி உயிர்ச்சக்தியுடன் மலர்கின்றன. இச்சிறப்பியல்பு மேலே சொன்ன கதையில் சிறப்பாகக் காணப்படுகிறது.

அஸ்தமன வேளையில் அருணோதயம்!

✻

ஸ்ரீமதி வசுமதி ராமஸ்வாமி

யாரோ ஒரு மனிதனுக்கு சொர்க்கவாசம் கிடைத்தது. அவன் அதை விரும்பாமல் அரற்றினும். பூவுலகத்தில் என்னைகொண்டு விடுங்களெனக் கத்தி அமர்க்களம் செய்துவிட்டான். தேவர்கள இந்த ஆச்சரிய மனிதனைக்கண்டு ஆச்சரியமடைந்தார்கள். பூலோகத்தில் என்னதான் வைத்திருக்கிறதென்று கேட்டார்கள. அவன் முத்தமிழ் நாட்டிலிருப்பதுதான் பூலோகத்தின் சிறப்பு; தமிழ் நாட்டில் முத்தமிழ் இருக்கிறதே அதுவே போதும். இங்கு என்னத்தைக்கண்டு ஆனந்திக்கிறீர்களெனக் கேட்டான். உடனே தேவர்கள் முத்தமிழ் என்ருல் என்ன? என்று ஆவலாய் கேட்டார்கள்.

அது இயல், இசை, நாடகம் இவைகள்தான். இயல், இசை அந்த அனுபவமில்லாத இந்த உலகில் நான் இருக்கமாட்டே னென்று பிடிவாதம் செய்து பூவுலகில் இறங்கிவிட்டான்.

அந்த ஆசாமி சொன்ன இயல் இசையை இன்னெரு சமயம் ஒரு கை பார்த்துக்கொள்வோம்.

நாடகமிருக்கிறதே அது புராதன கலை. ஆதிகாவ்யம்; அதிலும் த்ருச்யகாவ்யம். கிரேக்க நாகரீகத்தை முதன்மையாகச் சொல்லுவார்கள். அவர்கள் நாடகத்திற்கு முக்யத்துவம் கொடுத்து நாடகமென்ற உருவைஉண்டாக்கினர்கள்.

நம் நாட்டில் பாமர ஜனங்கள் கிராமாந்திர வீதிகளில் தெருக் கூத்தென்று நடத்துவார்கள். அதில்கூட அரிச்சந்திர மவராசா ஒரு பொய்சொல்ல மாட்டேனென்று குதிக்கும்பொழுது அண்ணே பாத்தியா சத்தியந்தான் அண்ணே நாம்பகூட பேசணுமென்பான் சபையோன்.

பண்டிதர்கள் இம்மாதிரி நாடகங்கள் எழுதி தகுந்த நடிகர்கள் நடித்தால் அதன் பலன் அளவிடமுடியாது.

நாட்டின் பண்பாட்டிற்கு நாடகம் ஓர் அளவுகோல்.

புராணக்கதைகளை நாடகமாக நடிப்பது அவ்வளவு சிரமமில்லை. அதில் வேஷப்பொருத்தங்களையும், நடிப்பையுந்தான் பேசுவோம். யார், எந்த ஒரு வேலை செய்தாலும் அந்த வேலையே தவறு சரி என்று ஆகாது. அதனுடைய பலனைப் பொறுத்துத்தான் ஆகும். அதே மாதிரி ஒரு சமூகநாடகம் நடிப்பதில் நல்ல கருத்து, சீர் திருத்தம் இவைகள் மக்களுக்கு பயன்படும் வகையில் இருக்க

வேணும். சிறந்த காட்சிகள், நடிப்புகள், சங்கீதம், வேஷப்பொருத்தம், பேச்சு இவைகளால் மக்களுக்கு தூய்மை, அன்பு, நன்னடக்கை எல்லாமே போதிக்கலாம். அது நடிப்பு, நாடகம் இரண்டையும் பொறுத்தது. ஆனால், தற்காலம் நாடகத்துறை நசித்துவிட்டது. அதற்குச் செலவு அதிகம் என்பதே ஒரு காரணம். படக்காட்சி வந்தது மற்றொரு காரணம்.

இதற்கெல்லாம் விதிவிலக்காக 'பணமும் பத்து பெண்ணும் முத்து' என்ற ரகத்தைசேர்ந்த ஒரு நாடகம் செப்டம்பர் மாதம் 9-ந் தேதி அஸ்தமன வேளையில் அருணோதயத்தைப்பார்க்கநேர்ந்தது: பரம்பரை நடிகர்களல்ல. தமாஷாக நடிக்கும் குடும்பப் பெண்கள்தான். பிரமாத காட்சி ஜோடனை அல்ல. சுற்றி ஒருநீலத் திரைதான். பிரமாத வாத்யகோஷ்டி இல்லை. பெண்களின் இனிய குரல்தான். விதவிதமான ஆடை அலங்காரமில்லை. சாதாரண சில உடுப்புகளே. வந்த சபையோருக்குத்தான் ஸோபா ஸெட்டா? தரையில் இடித்துபபுடைத்து உட்கார்ந்தோம். ஆனால், இந்த குறையே தெரியவில்லை. நாடகம் பார்க்கும் பொழுது அவகாசத்தைப்பற்றி சிந்தனை இல்லாமல் நாடகத்தோடு ஒன்றிவிட்டோம். வரதட்சிணைக் கொடுமையைப்பற்றிய ஹாஸ்ய நாடகம். சிர்திருத்த நாடகம். அருணோதயம் என்ற அழகான பெயர். இந்த நாடகம் வை. மு. கோதைநாயகி அம்மாளால் எழுதப்பட்டு மகாத்மாஜீ சங்கத்து பெண்களால் நடிக்கப்பட்டது. ஒரு இடத்தில் தினசரி பத்திரிகை படிக்கிறான் முக்கிய பாத்திரம். அதற்குகூட நிர்வாகிகள் இரண்டணா கொடுத்து ஒரு நல்ல பேப்பர் வாங்கவில்லை. கசங்கின கடிதம்தான். பொதுப்பொருளை தற்காலத்துக்கு தேவையான சிக்கன முறையில் வெகு சிரமத்துடன் ஜாக்ரதையாக நடத்தப்பட்டது. மேற்சொன்னவைகளின்றி வெகு அழகான ஒரு நாடகத்தை நடித்துகாட்டினார்கள். அதுதான் கலை. ஒருவராவது வார்த்தைகளை மறந்து தட்டுக்கிட்டு முழிக்கவில்லை.

வேஷப்பொருத்தம் நன்றாக அமைந்தது. ஆங்காங்கு பொருத்தமான பேச்சுகள். உயர்தர ஹாஸ்யம். மட்டரகத்திற்கு இடமே இல்லை. நாம் பார்த்துப் பழகி பேசிய சகோதரிகளாகவே தோன்றவில்லை. பேராசைபிடித்த சர்மா நமக்குத் தெரிந்தவர். அவர் மனைவி நாம் கற்பனைசெய்யும் அம்மாள்தான். பெண் இந்திரா, தம்பிபெண் மைதிலி, சேகர், தம்பி இவர்களில் யாரை நமக்குத் தெரியாது? எல்லாருமே வேண்டியவர்கள்! நாடகம் பாதி நடக்கும்வரை வாத்யகோஷ்டி இல்லை என்பதே நான் கவனிக்கவில்லை. அநேக சகோதரிகள் கவனித்திருக்கமாட்டார்கள். இவைகளின்றியே ஒரு நாடகம் கவர்ச்சிகரமாக நடத்தமுடியுமென்ற உண்மையைக்கண்டேன். வரதட்சிணை ஒழிவதுபோல், அநேக வேண்டாத தொல்லை ஒழிய இம்மாதிரிதான் நடத்தவேணும். ரஸம் மாதிரி விரஸம் வருவதே அளவுக்கு மீறுவதுதான். இந்த நாடகத்தின் முக்கிய சிறப்பு: சிறியதாகவும், இனிமையாகவும் இருந்ததே. இன்னும் ஒருமணிநேரம் பார்க்கல[illegible]றிருக்கும்[illegible]து நாடகம் முடிவடைந்தது. அதுதா[illegible] முக்கிய அம்சம்.

நாடக ஆசிரியையும், நடிகர்களும் வாழ்க!

183165

மகாத்மாஜி ஸேவா சங்கம்

"குறுகிய நேரத்தில் பெருகிய இன்பம்...இத்தனை நேரம் சென்றதே தெரியாது மனத்தை அப்படியே லயிக்கச்செய்து விட்ட நாடகம்......இத்தனை எளியமுறையில் மிகச்சிறந்த ரஸமான நாடகத்தை இன்றுதான் முதல்தரம் பார்க்கிறோம்...காலத்திற்கு ஏற்ற பொருளமைந்த மிக்க ஸ்வாரஸ்யமான கதை...நடிப்பின் திறமையை என்னென்றுதான் சொல்வது?...சேவா சங்கத்து பேர்வழிகள் பலேமேதைகள்!...அந்த சர்மாவோ?...மீனாக்ஷியோ! எங்கள் கவனத்தைவிட்டுப் பலதினங்கள் மறையவேமாட்டார்கள். இந்திராவின் குருகுருப்பான பார்வையும் பேச்சும்...மைதிலியின் நடிப்பும் மனத்தை உருக்கிவிட்டன...ஏன், சேகரன்...அவன் மாமா, அடேயப்பா! தரகன் லேசானபேர்வழியா?...நாகரீகக் குடும்பத் தினரின் தத்ரூப நடிப்பு; குறத்திதான் எப்படிப்பாடினாள்... அடாடா!...ஒரு சிறந்த லேடி டாக்டரையே கதையில் டாக்டராக நடிக்கச் செய்தது பலே பொருத்தம்...அடாடா! எதைச்சொல் வது? எதைவிடுவது?...முதல்தரம்! முதல்தரம்!......என்று ஸெப்டம்பர் மாதம் 9-ந் தேதியன்று சேவா சங்கத்தினர் நடத்திய அநுஸூயா நாடகத்திற்குத் தலைமைவகித்து நடத்திக்கொடுத்த கானஸரஸ்வதி D. K. பட்டம்மாள் முதல் பற்பல சகோதரிகள் இதயத்திலிருந்து பொங்கிவரும் உத்ஸாகத்துடன் நேராகக் கைகுலுக்கித் தமது ஆனந்தத்தைத் தெரிவித்துக் கூறியும் "அடுத்த நாடகம் எப்போது?" என்று அங்கேயே கேட்கவும் ஆரம்பித்துவிட்டார்கள். அத்தனை அமோகமாய் நாடகம் நடந்தது. அதில் பங்கெடுத்துக்கொண்ட ஒவ்வொருவருக்கும் சங்கம் தனது வந்தனத்தைச் செலுத்தியது.

18-9-50 : அமரகவி பாரதியாரின் தினம் ஸ்ரீமதி வஸுமதி ராமஸ்வாமி அவர்களின் தலைமையில்நடந்தது. அம்ருதவர்ஷம் பொழிவதுபோல் அரிய விஷயங்களை விளக்கிப்பேசி கரகோஷம் பெற்றார். ஸ்ரீமதிகள் ஸரோஜாபாய், சுந்தரவல்லி, ரங்கப்ரியை, ஸீதையம்மாள், செல்லம்மாள், புஷ்பம்மாள் அழகாகப்பேசினார்கள். ஸ்ரீமதி வேதவல்லி, லலிதகுமாரி, கமலா, சுலோசனா ஆகியோர் பாரதி பாடல்களை இசைவிருந்தளித்தார்கள்.

23-9-50 : கீதை உபாத்தியாயினி ஸ்ரீமதி கனகம்மாள் ஜகன் னாதாசாரியார் சங்கம் ஆரம்பித்தபோது ஆரம்பித்த கீதை வகுப்பை—சம்பிரதாயப்படி பாராயணம், அர்த்தம் முதலியவை களுடன் நடத்தி பூர்த்திசெய்தார். கீதாமாணவிகளும் இதர கீதா அபிமானிகளும் காலை ஸ்ரீ கீதாசாரியன் கோயிலுக்குச்சென்று ஸஹஸ்ரநாமஅர்ச்சனைசெய்து ஸர்வம் ஸ்ரீக்ருஷ்ணார்ப்பணம் என்கிற தத்துவப்படி தரிசித்து கீதையைமுடித்தார்கள். இந்தக்காட்சி மிக்க மனோகரமாய் பேரானந்தமாக இருந்தது. அடுத்தபடியாக, அக்டோபர் மாதம் 5-ந் தேதியன்று கீதைவகுப்பைத் தொடங்கு வதற்கும் பகவத் அனுக்ரகம் பெற்றுக்கொண்டு தாம்பூலம் புஷ்பம் சகிதம் வந்து சேர்ந்தோம். கீதாசாரியன் திருவடிகளே சரணம்.

JAGANMOHINI, owned and edited by V. M. KOTHAINAYAKI AMMAL is printed and published by V. M. PARTHASARATHY at the Jaganmohini Press, 26, Car St., Triplicane, Madras. 5.
Managing Editor: V. M. SRINIVASAN, M. A. B. L.

Jaganmohini, (Oct 1950.) 27-வது ஆண்டு Regd. No. M. 2210.

அருணோதயம்

சமூக நாடகம்

வை.மு.கோ.–94

அணா 12